

கல்கி




KALKI 23-12-1973

50 காசு



CMLB.30.162 R TM

விற்பனை ஏஜெண்டுகள்: M/S. ஏ. ஜே. எஸ். படேல் அண்ட் கம்பெனி, 5, கிடங்குத் தெரு, சென்னை-1, 76, கிழக்கு மாரட் தெரு, மதுரை. அதிகாரம் பெற்ற சில்லறை விற்பனையாளர்கள்: M/S. வெங்கடேஷ் 234, 244, என். எஸ். ஸி. போஸ் ரோடு, சென்னை-1. M/S. ஜஸ்வரீஸ், 26-பி, மேல கோபுரத் தெரு, மதுரை. M/S. ஆனந்த் டெக்ஸ்டைல்ஸ், பெரிய கடை வீதி, திருச்சி-8.



பச்சிள மேனியைக் காப்பதற்கே
பாப்பா காட்டும் வழி உமக்கே

ஜான்ஸன்ஸ்* பேபி பவுடர்




மேனியிலே அதி நுட்பமான பகுதி-
உங்கள் முகத்தின் சருமம்! பச்சிளம்
தளிர் போன்ற அதனைப் பாது-
காக்கத்தக்க பவுடர் எது?
பாப்பாவின் மேனியைக் காப்பாற்-
றும் பூப்போன்ற மென்மையான
பவுடரே தேவை. மழமழ மென்மை
யோடு குளுமையாக வைத்திருப்ப-
தற்கு — ஜான்ஸன்ஸ் பேபி பவுடர்.
எங்கெங்குமே, எழில்கொஞ்சும்
இளம் செல்வியர் உபயோகிக்கும்
பவுடர்.

பிறந்த நாளைப் பிஞ்சு மென்மையோடு உங்கள் மேனி மிளிரப் பேருதவி

Johnson & Johnson*

* Trade Mark

லின்டாஸ்-(க)-2-140 TH



DAVARIN

டெரின்-காட்டன் ஷர்ட்டிங்குகள்

DAVANJOY

டெரின்-காட்டன் ஷர்ட்டிங்குகள்

RAMSON

டெரின்-காட்டன் ஸூட்டிங்

MONSIEUR

டெரின்-காட்டன் ஸூட்டிங்

தாவண்கெரே

துணிவகைகள்

ஸ்ரீ தாவண்கெரே காட்டன் மில்ஸ் லிமிடெட்

•••பண்டைய மரபை இன்றைய வடிவாய்ப் படைக்குமிடம் !

Thomas/DCM/12 d Ta



சிரிக்கும் சந்தல்தி!

கல்கத்தாவிற்கு வடமேற்கே, சுமார் 250 கி.மீ. தூரத்தில்—பீஹார்-மேற்கு வங்காள எல்லையிலே அமைந்துள்ள சந்தல்தி-நாகரீக வாடையே படாத சின்னஞ்சிறு கிராமம். இங்கு வசிப்பவர்கள் பெரும்பாலும் ஆதிவாசிகளே. வெளி உலகில் இதனை அறிந்தவர் சிலர். கண்டவர் அதனிலும் குறைவு.


நூற்றாண்டுகள் உருண்டன. சந்தல்தி ஆதிவாசிகளையோ காலத்தின் மாபெரும் மாற்றங்கள் அண்டவேயில்லை.


இன்று...சுறுசுறுப்புடன் இயங்குகிறது சந்தல்தி. மேற்கு வங்காளத்தின் மிகப்பெரும் அனல் மின்சக்தி நிலையம் இங்கே அமைக்கப்பட்டுவிட்டது.

90 கோடி ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ள சந்தல்தி அனல் மின்சக்தி நிலையம் பூர்த்தியானதும் 4,80,000 கிவாட் மின்சக்தி உற்பத்தி செய்யும். முதல்படியாக இந் நிலையம் 1,20,000 கிவாட் அதிகப்படி மின் சக்தியை உற்பத்தி செய்கிறது—இதில் 50,000 கிவாட், நாகரீக நகரமான கல்கத்தாவிற்கும், மீதியுள்ள சக்தி, புருலியா, பீர்பம், முர்ஷிதாபாத் மாவிலங்கள் மற்றும் இதர பிரதேசங்களில் வீட்டு, தொழில் உபயோகங்களுக்கும் பயன்படுகிறது.

120 மெகாவாட் டர்பைன் மற்றும் ஜெனரேட்டர் உட்பட சந்தல்தி அனல் மின் நிலையத்திற்குத் தேவையான, கனரக மின் சாதனங்கள், போபாலில அரசுக்குச் சொந்தமான கனரக மின் தொழிற்சாலையில், பாரத எஞ்ஜினியர்களாலும் தொழிலாளர்களாலும் டிசைன் செய்யப்பட்டு நிறுவப்பட்டன. போபாலால் சப்ளை செய்யப்பட்ட சாதனங்களை நிறுவி இயக்குவதும் போபால் தொழிற்சாலையின் மேற்பார்வையிலேயே செய்யப்பட்டது.

கண்களிலே ஒளி மின்ன, உதட்டிலே புன்னகை வீச, ஒளிமயமான எதிர்கால உதயத்திற்காக காத்திருக்கின்றனர் இதோ, சந்தல்தி ஆதிவாசிகள்.





சந்தல்தி அனல் மின் நிலையம்.

ஹெவி எலக்ட்ரிகல்ஸ் (இ) லிட்.

போபால் (இந்திய அரசுக்குச் சொந்தமானது).

மகத்தான சக்தி மக்களுக்கே.

JAISONS-3165-TAM

தனிமையின்
இனிமை-லக்ஷ்மியுடன்

உதயத்தின் இளங்குளிரில், என் அறையின் தனி அமைதியில், போக்குவரத்தின் கூவல் ஒலியில், நள்ளிரவின் மிருதுத் தன்மையில்... நீ எங்கும் எப்போதும் உடனிருக்கிருய் லக்ஷ்மி.

அன்புக்குரிய லக்ஷ்மி, மனங்கவர் லக்ஷ்மி, மகிழ்ச்சி நிறை லக்ஷ்மி— இப்படி நீ எனக்குப் பலவாக விளங்குகிருய்.

லக்ஷ்மி, நீ பருத்தியின் குளுமை, பாப்ளினின் மென்மை, பாலியஸ்டர் கலவைகளின் நாகரிகக் கவர்ச்சி...

லக்ஷ்மி, கிளர்ச்சியூட்டும் நிறங்கள், அடக்கமான வண்ணங்கள், தன்னிச்சையான கோடுகள், கட்டங்கள், இழைச் சேர்க்கைகள் இவற்றின் துணைகொண்டு என்னை நீ பிரமிக்கச் செய்கிருய்.

லக்ஷ்மி-நீ எல்லாருக்கும் எல்லாமாய் விளங்குகிருய்.



டேடோன்: ® காட்டன் பாப்ளின் ஷர்ட்டிங் — மடிப்புக்கலையா 'கிரெஸ்லின்' சிறப்பு.
டெமொக்ராட்: 100% காட்டன் பாப்ளின் ஷர்ட்டிங்.
ஸம்மர் ஸ்டார்: காற்று புகுவண்ணம் விசேஷ இழை ஓட்டம். 100% காட்டன் பாப்ளின்.
கோல்ட் கிரெளன்: ® 67% பாலியஸ்டர்/33% காட்டன் இணைந்த ஷர்ட்டிங்.
யுவராஜ்: 80% பாலியஸ்டர் 20% காட்டன் இணைந்த ஷர்ட்டிங்.
டெரி-கிரெளன்: 67% பாலியஸ்டர்/33% காட்டன் இணைந்த ஸூட்டிங்.

Lovable Lakshmi

® ரிஜிஸ்டர்ட் டிரேட்மார்க் **லக்ஷ்மி மில்ஸ் கம்பெனி லிமிடெட்** கோயமுத்தூர் 641018

SAA-LM/1075

பொருளடக்கம்

பிரமாதீச, மார்கழி, 8 - டிசம்பர் 23, '73

கல்கி - சந்தா விவரம்	ஒரு வருடம்	ஆறு மாதம்
இந்தியா	ரூ. 26-00	ரூ. 13-00
இதர நாடுகள்	ரூ. 55-00	ரூ. 27-50
இலங்கை (இலங்கைநாணயம்)	ரூ. 30-00	ரூ. 15-00



கல்கி

"கல்கி"யில் வெளி
யாகும் கதைகளிச்
உள்ள பெயர்கள்
எல்லாம் கற்பனைப்
பெயர்களே; சம்ப
வங்களும் கற்
பனையே



நந்தா விளக்கனைய நாயகனே, நானிலத்தோர்
தந்தாய், தனியறத்தின் தாயே, தயாநிதியே!
எந்தாய், இகல்வேந்தர் ஏறே, இறந்தனையே,
அந்தோ இனி வாய்மைக்(கு) ஆருளரே?

— கம்பர் (தசரதன் மறைவு குறித்து ராமபிரான்)

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்

மலர் 33 — இதழ் 21

நேசம் மறக்கவில்லை நெஞ்சம்!

ஆண்டு ஒன்று ஓடிவிட்டது; ஆயினும் யுக யுகாந்தரம் சென்றாலும் மறக்க முடியாது அவரது நேசத்தின் வாசம். என்றும் நம் இதயத்தில் மணம் வீசிக் கொண்டே இருக்கும் அது.

ஆகா, அதுதான் எப்பேர்ப்பட்ட தூய நேசம்! 'பாசம்' என்கிற சுய நலக் கலப்பில்லாமலே நேசத்தை அதன் உண்மையான வடிவில் பேணிக் காத்த ரிஷிபுங்கவர் அவர். பெரும்பாலான அரசியல்வாதிகளைப் போல் அவர் தமது நேசத்தை நாடக பாணியில் சொற் சிலம்பமாக்கிக் காட்டியதில்லை. சிப்பிக்குள் இருக்கிற முத்தாகப் பகட்டும் படாடோபமும் இன்றி உள்ளக் கருவிலே பரம பவித்திரமான நேசத்தைப் பொதிந்து கொண்டிருந்தார்.

அவரைப் போல் தமிழன்னையிடம், பாரத மாதாவிடம், உலக மடந்தையிடம் நேசம் கொண்டிருந்தவர் யாருண்டு? நேசத்தை மன உணர்ச்சியாக மட்டும் இன்றி சக்தி வாய்ந்த செயலாகவும் அழுத்தமாகக் காட்டியவர் அன்றோ? தமிழர்களுக்கு ஞானச் சுரங்கங்களான நன்னூல்களை விட்டுச் சென்றவர். பாரதம் வாழவே தம் வாழ்வை வேள்வி மயமாக்கி, மக்கட் சுதந்திர மகா சாஸனத்தைத் தமது கொடையாக நாட்டுக்குத் தந்தவர். அணு ஆயுத பயங்கரத்திலிருந்து பார் முழுவதன் சூழலையும் காக்க அயராது பாடுபட்ட செம்மல்.


மதுவிலக்கு, தீண்டாமை ஒழிப்பு முதலியவற்றில் அவர் கொண்டிருந்த ஈடுபாட்டை என்னென்பது? 'ஈடுபாடு' என்று சொன்னாலும் போதாது; 'ஐக்கியப்பாடு' என்றே சொல்லத்தக்க விதத்தில் இவ்விஷயங்களில் அவர் — தம்மை இரண்டறக் கரைத்துக் கொண்டிருந்தார். தாழ்த்தப்பட்டவர்களைத் தூக்கி நிறுத்துவதில் இந்த நேச இதயம் பூண்டிருந்த நிரைட்சக விரதத்துக்கு இணையாக வேறு எங்கு காண முடியும்?


எதிலுமே அவருக்கு இணை காண முடியாதுதான். போராட்டம், நிர்வாகம் என்ற இரு துறைகளிலும் அவரது ஒப்புயர்வற்ற தேசத் தொண்டு பரிமளித்தது. அதோடு இலக்கியம், சமயம் இவற்றிலும் தன்நேரில்லாத் தலைமை கொண்டார். எல்லாவற்றுக்கும் மேலாக அப்பழுக்கே சொல்ல முடியாத சத்திய — தர்ம வாழ்வை வாழ்ந்து காட்டிய புருஷோத்தமன் அவர்.

அவரவருக்கும் தங்கள் தலைவரிடம் இருக்கும் மதிப்பு காரணமாக அல்லது ஏதோ ஒன்றை வழிபடுவதில் மனித உள்ளத்துக்கு உண்டாகும் நிறைவு காரணமாக, அத்தலைவரின் பெருமைகளை அதிகப்படுத்தியும் இல்லாதகைக் கற்பித்து அவர் மீது ஏற்றியும்கூட விழா எடுப்பது இக்காலத்தில் வழக்கமாகிவிட்டது. ஆனால் நமக்கோ நம் அன்புத் தலைவரின் மகிமைகளை உள்ளபடி உரைக்கவே திராணி இல்லை. ஆயிர மாயிரம் ஆண்டுகளுக்கொரு முறையே மாந்தர் குலத்தைக் கடைந்தெடுத்த அமிருதமாகத் தோன்றக்கூடிய ஒருவர் அவர். அந்த அருமணியின் அருமைகளை யாரே பூரணமாக அறிய முடியும்?


அவர் உலகில் உயிர் கொண்டு உலவி வந்த வரையில் அவரது உயர் பண்புகளை நாம் உரிய அளவுக்கு உணரா திருந்தால்கூடப் பாதகமில்லை. ஏனெனில் அவரேதான் உயிர் வாழ்ந்து கொண்டிருந்தாரே! பாராட்டு, எதிர்ப்பு இரண்டையும் பொருட்படுத்தாமல் கர்மயோகம் இயற்றிக் கொண்டேயிருந்தாரே! ஆனால் இன்றோ அவர் ஆற்றிய கர்மம் நம் கையில் வந்திருக்கிறது. அக்கருமத்தை அவரைப் போன்ற செம்மையுடன் நாமும் நடத்திக் காட்ட வேண்டுமாயின் அவரது உயர் பண்புகளை, அப்பண்புகளைப் பிரதிபலித்த அவரது திவ்விய வாழ்க்கையை, நாம் இப்போதுதான் முன் எப்போதையும்விட நினைந்து, உணர்ந்து, ஆன்ம சக்தி பெற வேண்டியதாகிறது. டிசம்பர் 25ஆம் தேதி என்கிற ஒரு தினம் மட்டும் நினைவு நாள் அல்ல. நித்த நித்தமும் அவரது நினைவு நாளாகும் —

நிமலனை நினைந்து அஞ்சலி செலுத்துகிறோம்!


பட்டுச் சொக்காய் தைச்சிருக்கேன்.... இதைப் போட்டதும் பொம்மை எத்தனை அழகா யிருக்கும் பாருங்க!
மதிப்பிழந்த மதியழகன்
மந்திரி பதவி
என்னமோ பழமொழி சொல்லுவாங்களே அது மாதிரி....
பொது ஜனம்


இந்திரா புரொடக்ஷன்ஸ் கதை இலாக்கா
உங்க கதையிலே நம் நாட்டைப் பற்றிய யதார்த்த நோக்கே இல்லே! நான் விலகிக்கிறேன்!
டாக்டர் மின்ஹாஸ்
நாலு படம் டப்பா! அடுத்தும் புரொடக்ஷன் நெ. 5 நிச்சயம் வெற்றி!
மறுபடியும் ரஷ்யக் கதையையே காப்பி அடிக்கலாம். அதுதான் எனக்குப் பிடிச்சிருக்கு!
தாரியா
தார்
சவான்
இந்திரா
வருகிறது! இந்திரா புரொடக்ஷன்ஸ் அளிக்கும் ஐந்தாவது திட்டம்


இந்திய - இரானிய கலாச்சார பரிவர்த்தனைத் திட்டம்
தக்கதிமி தாதா தா! எண்ணெய் தாதாதா!
இந்திரா
இரானிய அயல்விவகார மந்திரி
மாட்டேன்னு சொல்ல


ஏற்கனவே அதை கறுப்பாயிருக்கிற படத்திலே நாமும் கொஞ்சம் தாரைப் பூசி வைப்போம்!
வன்முறை
மகாராஷ்டிரா - கர்நாடகா சுயநலமிகள்
தேசிய ஒருமைப்பாடு

53,411 கோடி ரூபாய் திட்டம்!

மாநில முதலமைச்சர்கள், மத்திய அமைச்சர்கள் முதலிய எல்லோரும் அடங்கிய தேசிய அபிவிருத்திக் கவுன்சில் இரண்டு நாட்கள் விவாதித்த பிறகு திட்டக் கமிஷன் சமர்ப்பித்தபடியே ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தை அங்கீகரித்து விட்டது. இனி திட்டம் செயல்படத் தடை ஏதும் இல்லை!

அங்கீகாரம் கொடுத்து விட்ட மாநில அமைச்சர்கள் நிதி வசதி சாத்தியக் கூறுகளையோ, மக்களுக்கு ஏற்படக் கூடிய விளைவுகளைப் பற்றியோ, பிரத்தியட்ச நோக்குடன் ஆராய்ந்து, விவாதித்ததாகத் தெரியவில்லை. மத்திய அரசும் திட்டக் கமிஷனும் திட்டம் வகுத்துள்ளன; அதை ஏற்றுக் கொண்டு ஒப்புதல் கொடுக்க வேண்டியது தங்கள் கடமை என்கிற ததாஸ்து மனோபாவத்தில் முதலமைச்சர்கள் நடந்துகொண்டுள்ளனர்.

அடுத்த 1974–79 ஐந்தாண்டுகளில் மொத்தமாக 53,411 கோடி ரூபாய் பல்வேறு இனங்களில் செலவு செய்தால்தான் 5.5 சதவீதம் நாட்டின் பொருளாதாரமும் மக்களின் சுபிட்சமும் வளருமாம்! ஆகவே இந்தப் பிரும்மாண்டமான அளவுக்குச் செலவு செய்யத்தான் வேண்டும், இதைத் தவிர்க்க முடியாது என்கிறது மத்திய அரசு.

நான்காவது திட்டத்தில்கூட 5.5 சதவீதம் வளர்ச்சியை உண்டாக்க வேண்டும் என்றுதான் திட்டம் தீட்டினார்கள்; செலவும் செய்தார்கள். இரண்டு சதவீதம் கூட வளர்ச்சி ஏற்படவில்லை. தேசிய வருமானம் ஒன்றரை சதம் உயர்ந்தது!

ஆனால், கடந்த கால அனுபவங்களிலிருந்து படிப்பினை பெற வேண்டும், அதனை அனுசரித்து வருங்காலச் செயல்கள் வகுக்கப்பட வேண்டும் என்ற சாமானிய புத்திசாலித்தனம்கூட அரசியல் மேலிடங்களில் காணப்படுவதில்லை. 'தாங்களே உணராததை மற்றவர் சுட்டிக் காட்டிய பின்னராவது உணர வேண்டும்' என்ற நற்பண்புகூட இல்லை! திட்டக் கமிஷனில் அங்கம் வகித்து, தமது பதவியை ராஜிநாமாச் செய்துவிட்ட டாக்டர் மின்ஹாஸ், இத்திட்டத்தில் உள்ள குறைபாடுகளையும், முரண்பாடுகளையும், நிதி வசதிகள் திரட்டுவதில் ஏற்படக் கூடிய கஷ்டங்களையும், அந்நிய நாடுகளின் உதவி கிடைப்பதில் உள்ள சிரமங்களையும், திட்டத்தை நிறைவேற்றப் பெருவாரியாக நோட்டு அச்சடித்து வழங்குவதால் ஏற்படக் கூடிய பயங்கர பண வீக்கத்தையும் விலைவாசி உயர்வையும் விளக்கிச் செய்துள்ள எச்சரிக்கை செவிடன் காதில் ஊதிய சங்காகி விட்டது.

இனி மக்கள் ஆண்டுதோறும் புதுப் புது வரிகள் புதுப் புது விதங்களில் ஏராளமாக விதிக்கப்படும் என்று நிச்சயம் நம்பலாம். பொருளாதார முன்னேற்றம் நிகழாது; வரி விதிப்பில் ஏராளமான முன்னேற்றம் இருக்கும். 55 கோடி பாரத மக்கள், துயர் தாங்கத் தயார் செய்து கொள்ள வேண்டும்.

கலை உலகில் பெண் அரசு!

'பெண்மை வாழ்க!' என்றும், 'பெண்மை வெல்க' என்றும் முரசறைந்த மகாகவி இன்று ஜீவியவந்தராக இருந்தால் பூரித்துப் போயிருப்பார் – இவ்வருட இசை விழாவில் மூன்று முக்கியமான கலை நிறுவனங்களிலும் நாரீமணிகளே தலைமை தாங்குவது கண்டு. மியூஸிக் அகாடெமியில் ஸ்ரீமதி பாலசரஸ்வதி தலைமை தாங்குகிறார். தமிழிசையில் ஸ்ரீமதி டி. கே. பட்டம்மாள் அவர்கள் தலைமை வகித்து, 'இசைப் பேரறிஞர்' பட்டத்தைப் பெறுகிறார். இந்தியன் ஃபைன் ஆர்ட்ஸ் விழாவில் ஸ்ரீமதி பிருந்தா அவர்கள் அக்ராசனம் வகிக்கிறார். ஸ்ரீமதி பட்டம்மாள், ஸ்ரீமதி பிருந்தா இருவரும் கம்பீரம், வித்வத் இரண்டிலும் சிறப்புற்ற பெரும் கலைஞர்கள். விருதுகள் பெறும் இந்த நாத வித்தகியருக்கு நம் பாராட்டுக்களை வழங்குகிறோம்.

ஸ்ரீமதி டி. கே. பி.



ஸ்ரீமதி பிருந்தா



தமிழ் நாட்டிலே... தீரன்

பொறுமையைச் சோதிக்கக் கூடாது

'சமூக இழிவு ஒழிப்பு மகாநாடு' என்ற பெயரில் திரு ஈ. வெ. ரா. சமீபத்தில் சென்னையில் நடத்திய தி. க. மகாநாட்டில் மந்திரிகள் யாரும் கலந்துகொள்ளவில்லை யென்றாலும், ஏற்கனவே பல்லாயிரக் கணக்கானவர்களின் மனத்தைப் புண்படுத்திய வக்கிரக் கண்காட்சி முகமூடியணிந்த பிரிவினைப் பேச்சுக்கள் எல்லாம் நிகழ்ந்தன. முதல் முறையாக இப்படிப்பட்ட மகாநாடுகளுக்கு ஆட்சேபம் தெரிவிப்பது என்று முடிவெடுத்துத் தமிழ்நாடு இந்து மிஷன் சார்பில் மகாநாட்டை எதிர்த்து அதன் வாசலில் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

''சாதிப் பிரிவினைகள் ஒழிய வேண்டும். இல்லாவிட்டால் தமிழ்நாடு பிரிவினையைத் தவிர வேறு வழியில்லை''என்று இந்த மகாநாட்டில் விளிப்பிள்ளைகளைப் போல் எல்லாரும் பேசினர். சில சாதிக்காரர்களைத் தனியே பிரித்துப் பேதப்படுத்தி நாக்கில் நரம்பின்றித் திட்டிக் கொண்டே — சாதி பேதத்தையே அரசியல் பிழைப்பாக்கிப் பணம் பண்ணிக் கொண்டே—சாதி பேதங்கள் ஒழிய வேண்டும் என்று தீர்மானமும் போடுகிற போலித்தனத்தை மக்கள் உணராதிருப்பார்களா?

'கோயில்களைப் பொதுமக்களே கடப்பாறை கொண்டு இடிக்கும் காலம் வரவேண்டும்' என மேடைக்கு மேடை முழங்கிக் கொண்டே 'யார் அர்ச்சகராக வரவேண்டும்' என்றும் பேசுவது கேலிக் கூத்தாகத்தான் இருக்கிறது.

'தமிழர் — சமுதாய இழிவு ஒழிப்பு மகாநாடு' என்ற முகமூடியணிந்து நடத்தப்பட்ட இந்த மகாநாட்டில் தமிழ்நாட்டை விடப் பரப்பளவில் குறைவான 53 நாடுகளின் பட்டியலைக் காட்சியில் முக்கியமாக வைத்திருந்ததன் அர்த்தம் என்ன? 'தமிழ் நாடு தனியே பிரிய வேண்டும்' என்பதுதானே?

ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி என்பதுபோல் சகிப்புத்தன்மை உள்ளவர்கள் நிறைந்த இந்து மதத்தினரையும், குறிப்பாகச் சில வகுப்பினரையுமே தொடர்ந்து புண்படுத்தி வரும் மகாநாடுகளை மக்கள் இனியும் சகித்துக் கொள்ள மாட்டார்கள் என்பதற்குச் சென்னையில் கறுப்புக் கொடி காண்பித்து நடந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டமே சான்று.

சென்னையில் தி. க. மகாநாடு நடந்த அதே நாளில் மதுரையில் முக்குலத்தோர் சங்கத்தினர் தங்களைப் பற்றி இழிவாகப் பேசிய தி. க. தலைவர் ஈ. வெ. ரா.வைக் கண்டித்து ஒரு பெரும் ஆர்ப்பாட்டமே நடத்தியிருக்கிறார்கள்.

மரியாதையும் அவமரியாதையும்

சட்ட மன்றத்தில் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்தின்போது, 'பிரிவினைவாத மகாநாட்டை நடத்துகிறவர்கள் மேல் நடவடிக்கை எடுக்க வேண்டும்' என எழுப்பப்பட்ட பிரச்னையின் மீது பேசுகையில் தமிழக முதல்வர், ''.....போரின்போது பாகிஸ்தானுக்கு ஆதரவாக இருந்த 'மற்றொரு பெரிய தலைவர்' மீது இங்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்காததைப் போன்றே இப்போது திரு ஈ.வெ.ரா.வின் மீது அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை'' என்று ராஜாஜியைக் குறித்துச் சொல்லியிருக்கிறார். ராஜாஜியின் கருத்துக்களைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல், அவரையும் பிரிவினைவாதிகளையும் ஒரே தராசில் வைத்து ஒப்பிட்டுப் பேசியிருக்கிறார் முதல்வர். மறைந்த மாபெரும் தலைவர் ஒருவருக்கு மரியாதை செய்யும் பேச்சு அல்ல இது. டிசம்பர் 25ந் தேதி மதுபானக் கடைகளை மூடி அவருக்கு மரியாதை செய்கிற அதே வேளையில்தான் முதல்வர் இதையும் பேசியுள்ளார்!

சிறை சென்ற மாணவர்

திருச்சி, பாளையங்கோட்டை சம்பவங்கள் விசாரணைக் குழு முடிவுகளையொட்டி எழுந்துள்ள மாணவர் போராட்டத்தில் கைதாகிச் சிறை சென்ற மாணவர்கள் சிலர் ஜாமீனில் விடுதலையாகி வந்திருக்கிறார்கள். சிறையில் அவர்கள் மிகவும் கொடுமையாக நடத்தப்

ஆடைக் குறைப்பு!

தமிழ் எழுத்தாளர் சங்கத்தில் ராஜாஜி கூறிய ஒரு கருத்து: நாகரிகம் என்று இப்போதெல்லாம் ஆடை குறைவாகவும் உடம்பு அதிகமாகவும் தெரியும்படி உடுப்பது வழக்கமாக உள்ளது. இதை எழுத்தாளர் பின்பற்ற வேண்டும். சொற்களை, நடையை "Dress of Thought" என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். கருத்துக்கு ஆடையாக உள்ள வார்த்தைகள் குறைவாகவும் விஷயம் மிகுதியாகத் தெரியும்படியாகவும் எழுத்து நடை அமைய வேண்டும்!

-மின்னூர் சீனிவாசன்



பட்டதாகத் தெரிகிறது. சிறையில் அடைக்கப்படுமுன் மாணவர்களிடமிருந்து வாங்கப்பட்ட பொருள்களில் இருந்த ரூபாய் நோட்டுக்கள் கணக்கில் வரவு வைக்கப்படாததால் திரும்பு கிறபோது அவர்களிடம் திருப்பித் தரப்படாமலே 'மாமூல்' ஆகிவிட்டதாம். சிறையில் மாணவர்களில் பலர் சித்திரவதை செய்து இம்சிக்கப்பட்டதாகவும், ''ஒன்பது வருஷங்கள் ஆனாலும் உங்களை விடமாட்டோம்'' என மிரட்டப்பட்டதாகவும் மாணவர்கள் பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டியில் கூறியிருக்கிறார்கள். சிறையில் மாணவர்களுக்குக் கொடுக்கப்பட்ட உணவில் புழு, பூச்சி, வண்டுகள் எல்லாம் விழுந்து கிடந்தனவாம். பல மாணவர்களிடம் பயமுறுத்தி, நிர்ப்பந்தப்படுத்தி மன்னிப்பு வாக்குமூலம் கேட்கப் பட்டதாகவும் தெரிகிறது. விடுதலையான மாணவர்கள் கூறும் சோகக் கதைகள் தி. மு. க. ஆட்சிக்குப் பெருமை சேர்க்காது.

தி. மு. க. கூட்டு இல்லை

'யாராவது தங்களோடு கூட்டுச் சேர மாட்டார்களா?' என்று தவித்து ஆதரவுக்கு அலையும் நிலைக்கு வந்துவிட்ட தி. மு. க.வினர் தங்கள் ஆதரவு பெற்ற தினசரி ஒன்றில் திடீரென்று 'சுதந்திரா தி. மு. க.வோடு கூட்டுச் சேரலாம்' என்பது போல் ஒரு சரடியைக் கிளப்பி விட்டு விட்டனர். இன்றைய நிலையில் தி. மு. க. என்பது ஒரு மூழ்கும் ஓட்டைக் கப்பல். அதனோடு கூட்டுச் சேர யாருமே தயாராக இல்லை. திரு ஈ. வெ. ரா. முக்குலத்தோர் பற்றிய பேச்சைப் பேசிய பின் 'பார்வர்டு பிளாக்' கூட தி. மு. க. கூட்டிலிருந்து விடுபடும் நிலை வந்துவிடும் போலிருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் சுதந்திரக் கட்சி தி. மு. க. வோடு சேரும் எனச் சில பத்திரிகைகளில் வெளியான செய்தி விஷமத்தனமானது. ''எந்த அரசியல் கட்சியுடனும் சுதந்திரா கூட்டுச் சேராது. நாட்டு நிர்வாகத்தை ஒழுங்குபடுத்தவும், பொது வாழ்வின் நன்னெறியை மேம்படுத்தவுமே சுதந்திரக் கட்சி தனியே தொடர்ந்து பாடுபடும்'' என்று தமிழ்நாடு சுதந்திரக் கட்சிச் செயலாளர் திரு வி. சுப்பிரமணியம் பத்திரிகைகளில் அறிவித்திருக்கிறார்.

கவுன்சிலர்கள் கைது

சென்னை மாநகராட்சி ஊழல் சம்பந்தமாக ஏற்கனவே கைதான இரண்டு பேர் தவிரப் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்களான 45 கவுன்சிலர்கள் இன்னும் கைதாகலாம் என்று தெரியவருகிறது. முன்னாள் தி.மு.க. மேயர்கள் இருவரும் கைதாகியுள்ளனர். ஏற்கனவே அதிகாரிகள், ஊழியர்கள் வகையில் முப்பத்தேழு பேருக்கு மேல் கைதாகிவிட்டார்கள். சில ஊழியர்கள் வீட்டிலிருந்து நகைகள், ரொக்கப் பணம் எல்லாம் கைப்பற்றப் பட்டிருக்கின்றன. சமீபத்து நிகழ்ச்சிகள் மாநகராட்சி, மேயர், துணை மேயர், கவுன்சிலர் ஆகிய பதங்களின் மதிப்பையே குறைத்துவிட்டன. சென்னை மாநகராட்சி மேல் படர்ந்துவிட்ட இந்த அவமானத்தைத் தேர்வு பெற்று எதிர்வரும் மிக நல்ல கவுன்ஸில் ஒன்று தன்னலமற்ற பணி மூலமே போக்க முடியும்.

சுயம்பு டாக்டர்

எந்த மருத்துவக் கல்லூரியிலும் படித்துப் பட்டம் பெற்று ஹவுஸ் சர்ஜனுசிப் சிரமங்கள் எல்லாம் படாமலே ஒரே நாளில் ஒரே விநாடியில் தமது அபார மூளையின் கற்பனா சக்தியைப் பயன்படுத்திச் சுயம்புவாகவே டாக்டராகிவிட்டார் ஒருவர். தமது பெயருக்குப் பின் பி.எஸ்.ஸி., எம்.பி.பி.எஸ். என்று தாமே சேர்த்துக் கொண்டு 'பிராக்டீஸ்' செய்யத் தொடங்கிவிட்டார். இவர் செய்த தகிடுதத்தங்களும் கடைசியில் கண்டுபிடிக்கப் பட்ட விதமும் தினசரிகளில் அமர்க்களப் படுகின்றன. பாலில் கலப்படம், அரிசி, பருப்பில் கலப்படம், ரூபாய் நோட்டில் கலப்படம், அரசியல் கட்சிகளில் கலப்படம், அரசாங்கத்தில் கலப்படம் என்றெல்லாம் இருந்தது போக இப்போது டாக்டர்களிலும் கலப்பட நபர் ஒருவர் தோன்றியிருக்கிறார். இன்னும் என்னென்னவெல்லாம் கலப்படங்களைக் காணப் போகிறோமோ!

ராஜாஜி சிந்தனை

நீங்கள் இந்தப் பூமியில் பத்திரமாக உட்கார்ந்திருப்பதாக எண்ணுகிறீர்கள். ஆனால் நம் கற்பனைக்கு எட்டாததும் தலை சுற்றும்படியானதுமான அதிக வேகத்தோடு நாம் சென்று கொண்டிருக்கிறோம் என்பதை நீங்கள் உணர வேண்டும். காலால் நடப்பதைவிட எத்தனை மடங்கு அதிக வேகமாக ரயில் வண்டி ஓடுமோ, அத்தனை மடங்கு வேகமாக ரயில் வண்டியை விடப் பூமி சுழல்கிறது. அது நம் எல்லோரையும் தூக்கிக்கொண்டு அத்தகைய வேகத்தில் தனக்குத் தானே சுழல்வது மட்டுமின்றி சூரியனைச் சுற்றியும் ஓடிக் கொண்டிருக்கிறது. சூரியனைச் சுற்றும்பொழுது அதன் வேகம், வேகமான ரயில் வண்டியை விட அறுநூறு மடங்கு அதிகமாகும். இவ்வாறு பூமியானது இரண்டு விதமாகத் தலைதெறிக்க ஓடிக்கொண்டிருக்கும் சமயத்தில் நாம் பேசவும், விளையாடவும், போர் செய்யவும், கனவு காணவும், பிரார்த்தனை புரியவும் செய்கிறோம். இதைவிட விநோதமான விஷயம் வேறு ஏதேனும் உண்டா?

உங்கள் குடும்பத்தினரின்
உடல்நலம் ஓங்கியிருக்க
அவசியம் அளியுங்கள் மிகச்
சிறந்ததையே

அவர்களுக்கு விவா கொடுங்கள்.

விவா நூதன உணவு தொழில் நுட்பத்திறமையில் உருவானது. இதில் மற்ற ஆரோக்கிய உணவுப் பானங்களில் உள்ளதைப்போன்று தூய்மையான, முழுமை பெற்ற ஆடைப்பாலும் பார்லி மால்ட்டும் உள்ளன. ஆயினும் விவாவில் மட்டுமே கோதுமை மால்ட் அடங்கியுள்ளது.

கோதுமை மால்ட் எதற்கு?

எதற்கெனில், அதில் வளமைமிக்க கார்போஹைட்ரேட், புரதங்கள், விடமின்கள் மற்றும் கனிஜ சத்துக்கள் எளிதில் சீரணிக்கும் வகையில் சேர்க்கப்பட்டுள்ளன.

கோதுமை மால்ட் கலந்திருப்பதால் விவா அதிக அளவு ஊட்டச்சத்து உள்ளதாய், பூரணமான இன்சுவையோடு, வளமிக்க பொன்னிறம் கொண்டு, உடனடியாகக் கரையும் தன்மையோடு விளங்குகிறது.

ஆகவே, உங்கள் அன்றாட உணவிலுள்ள பற்றாக்குறைகளை ஈடுசெய்ய சரியான, போதுமான ஊட்டச் சத்து அளிக்கவேண்டுமென்றால் அதற்கு விவா போல வேறு எதுவும் சிறந்ததல்ல

மிகச் சிறந்ததையே தேர்ந்தெடுக்க இதோ அரியதொரு வாய்ப்பு.

விவாவையே தேர்ந்தெடுங்கள்.



ASP/JIL-V-IA/73 TAM

விவா

உற்சாகமான ஆரோக்கிய வளர்ச்சிக்கு தினமும் விவா.

இந்தியாவின் தயாரிப்போர்,
ஜக்ஜீத் இண்டஸ்ட்ரீஸ் லிட்.

வெகு அபூர்வமாகச் சில கலைஞர்கள் தோன்றுகிறார்கள். இவர்களுடைய எண்ணம் முழுதும் தமது கலையிலேயே தோய்ந்து கரைந்து விடுகிறது. இந்த நிலை முற்றி முற்றி ஆத்ம சமர்ப்பணமாக முழுமை பெறுகிறது. கலைக்கே இவர்கள் தங்களைப் பூரணமாக அர்ப்பணித்துக் கொண்ட நிலையில் ஓர் அற்புதம் நடக்கிறது: கலைஞர் என்கிற ஒருவர் கலையைப் பயிலாமல், அந்தக் கலையே இக் கலைஞரைப் பயிலுவிக்கத் தொடங்கிவிடுகிறது. சரணாகதி செய்த பக்தன் முற்றிலும்



நடன ராணி

ஆண்டவனின் கருவியே ஆகிவிடுவதுபோல், ஆத்ம சமர்ப்பணம் செய்த கலைஞர் அந்தக் கலைத் தெய்வத்தின் கைப் பாவையே ஆகிவிடுகிறார். இவர் மூலம் அக்கலையே தன் எழில்களையெல்லாம் விளங்கிக் கொண்டு, வெளிப்படுகிறது. மேதாவிலாசம் என்று சொல்வதற்கும் மேம்பட்டதோர் அருட்பிரசாத நிலை இது. பரதக் கலையைப் பொறுத்தமட்டில் இந்த அதிஉன்னதமான அருட்பிரசாத நிலையை எய்தியுள்ள அரிய, அபூர்வ, அசாதாரணக் கலைஞர் ஸ்ரீமதி பாலசரஸ்வதி அவர்கள்.

ஸ்ரீமதி பாலசரஸ்வதி அவர்கள் சப்த ஸ்வர மர்மங்களையெல்லாம் அறிந்த வீணை தனம்மாளின் வழித்தோன்றலாவார். அவரது குடும்பம் ஒப்பற்ற கலைக் குடும்பமாகும். மிக மிக உயர்ந்த, ரஸ மயமான மரபுகளையும் உணர்வுகளையும் தவிர, இம்மி கூட இரண்டாந்தரக் கவர்ச்சி இனங்களுக்கு இடம் தராத 'கலைக் கற்பு' இக்குடும்பத்தின் சொத்தாகும். தனம்மாளின் குலதனமாக அவரது புதல்வி ஜயம்மாளை அடைந்த தூய கங்கை போன்ற இசை, ஜயம்மாளின் திருமகளான பாலசரஸ்வதியைச் சென்றடைந்தது. அந்த அமுத இசையே இவரிடம் ஆடலாகவும் வடிவம் கொண்டது. பாவமும், ராகமும், தாளமும் திரிவேணி சங்கமமாக ஐக்கியமாகிற மகிமையே பாலசரஸ்வதியின் நடனம். அவருக்குப் பேச்சும் மூச்சும் பரதநாட்டியமே. அவரது உழைப்பெல்லாம், சிந்தனையெல்லாம் அதற்கே செலுத்தப்பட்டது. ஒருமுகமாகத் தம் கலையிலேயே ஈடுபட்டுவிட்ட கலாயோகி அவர்.

அவரது நாட்டியத்தில்தான் எத்தனை எத்தனை சத்திய சௌந்தரியங்களை அநுபவித்திருக்கிறோம்! இயற்கைப் பிரபஞ்சத்தின் வற்றா வளம்கொண்ட சம்பிரமங்கள், கனிவுகள் அத்தனையையும், மனித மனத்தின் அதிசூட்சுமமான உணர்வுச் சாயல்கள் அத்தனையையும் அள்ளி வீசுகிற விகஸ நடனப் பிரதிபலிப்பாகவே விளக்குவது பாலசரஸ்வதியின் ஆடல். விகஸ நடனத்தின் ஆதாரமான தெய்விக மூலம் இந்த ஆடலில் ததும்பி மணம் வீசுகிறது. நந்திகேசுவரரும், பரத முனிவரும் படைத்த சாஸ்திரம் இது என்பதை அழுத்தமாக நிலைநாட்டுவதே போல் சிருங்காரத்திலும் புனிதமாக இருப்பது இந்த நடனம்.

கலையை ரசிப்பது வேறு; கலை நுண்மையை ரசிப்பது வேறு. கலை நுண்மையைப் புரிந்து கொண்டு ரசிக்க இயலாமல் பலர் இருக்கலாம். ஆனாலும் 'கலைக் கற்பு' இதைப் பொருட்படுத்துவதில்லை. உண்மையான கலைஞர் எந்தச் சூழலிலும் விட்டுக் கொடுக்காமல் கலைத் தூய்மையைக் காத்துக் கொள்கிறார். இம்முறையில் ஸ்ரீமதி பாலசரஸ்வதியின் திறம் அதிசயமானது. சத்தியத்தை விடாமல் பற்றியிருக்கும் இந்தச் சாதனையில் கலைஞர் தேறியபின், அந்தச் சத்தியத்தின் சக்தியால் உலகம் முழுதுமே இவர் பக்கம் மதிப்புணர்ச்சியுடன் திரும்புகிறது. இவரது கலையை நுட்பமாகப் புரிந்து கொள்கிறதோ இல்லையோ, ''இது ஏதோ பெரிய விஷயம்'' என்று கருதி அதற்குத் தலை வணங்குகிறது. இன்று பாலசரஸ்வதியின் தூய்மையே வடிவான கலைக்கு நானில நாடுகள் யாவும் போற்றி கூறுகின்றன!

அவர் போற்றுதல், தூற்றுதலைப் பொருட்படுத்தாதவர். அவருக்குத் தம்மைப் பற்றி உள்ளபடி நன்றாகத் தெரியும் - நடராஜனுக்குத் தாம் எந்த அபசாரமும் இழைத்ததே இல்லை என்ற நிறைவு அவருக்கு நிச்சயமாக உண்டு. எனவேதான் மற்றவர்களின் கண்டனத்தையோ ஸ்துதியையோ அவர் பெரிதாகக் கருதுவதில்லை. ஆனால் போற்றுதலுக்குரிய ஒரு பொருளைக் கௌரவிக்கும்போது ரசிகர்களின் நெஞ்சம் திருப்தி கொள்கிறது. அந்த வகையில், இவ்வருடம் சென்னை மியூசிக் அகாடெமியின் 'சங்கீத கலாநிதி'யாக ஸ்ரீமதி பாலசரஸ்வதி அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

'ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரே' என்ற அடிகளின் வார்த்தைகள் அற்புதமாகப் பொருந்தும் விதத்தில், கலையுணர்வும் இறையுணர்வும் இரண்டறக் கலந்த நிலையில் விளங்குகிற ஆடலரசி பாலசரஸ்வதிக்கு நம் உளம் கனிந்த வாழ்த்துக்களை அளிக்கிறோம். பல்லாண்டுகளுக்கு முற்பட்ட அவரது ஓவியத்தை இவ்விதழ் அட்டையில் வெளியிட்டிருக்கிறோம். ஆண்டுகள் பல சென்று அவரது கலை, முதிர்ச்சி அடைந்திருந்தாலும் முதுமை அடையாமல், இன்னமும் பாலசரஸ்வதி என்ற பெயருக்குப் பொருத்தமாகத்தான் இளமையுடன் பொலிகிறது. இன்னும் பல்லாண்டு பல்லாண்டு பொலிகவே என வாழ்த்துகிறோம்!

காமாக்ஷியின் பெருமை

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகள்

படைப்பு, காப்பு, அழிப்பு மூன்றுக்கும் ஆதாரமாக இருப்பது ஒரு பராசக்தி. இம் மூன்றைக் கடந்தபின் நாலாவதாக உள்ள துரீயத்தையே சதுர்த்தம் என்றும், சிவஸ்வரூபம் என்றும், அத்வைதம் என்றும் உபநிஷத் சொல்கிறது. அதையே பிரம்மம் என்கிறோம்.

அதைத் தவிர இரண்டாவதாக வேறெதுவும் இல்லாததால் அது அத்வைதம். அப்போது அதற்கு வர்ணமும் இல்லை. சுத்த ஸ்படிகமாக இருக்கிறது. ஸ்படிகமான இந்தச் சிவஸ்வரூபமேதான் செக்கச் சிவந்த காமேசுவரியாக, காமாக்ஷியாகவும் இருக்கிறது. ஏகமாக இருந்த ஒன்று பலவாகத் தோன்றுகிற சக்தியாகும் போது காமேசுவரியாகிறது. பலவாகத் தோன்றுவதோடு, அவற்றை எல்லாம் ரட்சிக்கிற பரமகாருண்யமுள்ள மாதாவாகவும் அது இருக்கிறது. பலவாகத் தோன்றுகிற ஜகத்தையே ஜீவர்கள் சத்தியமாக நினைத்து மயங்குகிற மாயையும் அதுதான். ஜகத்திலிருந்து ஜீவர்களை விடுவித்து ஏகமான அத்வைத ஸ்வரூபத்தில் கரைக்கிற ஞானாம்பிகையாகவும் அதுவே இருக்கிறது. அதன் மகிமை இப்படி நம்மால் புரிந்து கொள்ள முடியாதபடி பல தினுசாக இருக்கிறது.

பிரம்மம் துரீயம் என்றால், சாட்சாத் அந்தப் பிரம்மத்தின் சக்தியான காமாக்ஷியும் துரீய வஸ்துவாகத்தான் இருக்கிறாள். 'துரீயா காபித்வம்' என்று ஆதி சங்கராசாரியாள் அவளையே 'ஸௌந்தர்ய லஹரி'யில் சொல்கிறார். சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் இவற்றுக்கு அப்பாற்பட்டுச் **செயலற்று** இருப்பது பிரம்மமான சிவஸ்வரூபம். சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் இவை மூன்றையுமே **செய்வித்துக் கொண்டும்**, அவற்றால் பாதிக்கப்படாமல், அவற்றைக் கடந்து அதீதமாக நிற்பது பராசக்தியான காமேசுவரி. இந்த மூன்று தொழிலும் அவளுடைய மாயை. இந்த மாயையால்தான் அகில சராசரங்களையும் ஆட்டி வைக்கிறாள். 'மஹா மாயா விச்வம் ப்ரமயஸி' என்கிறார் ஸௌந்தர்ய லஹரியில். மஹா மாயையானாலும் உண்மையில் அவளே.

பரப்பிரம்ம மஹிஷி

சாட்சாத் பிரம்மத்தின் பட்டமஹிஷி என்கிறார்.

தன்னைத் தவிர வேறில்லாத பிரம்மத்துக்கு எப்படிப் பத்தினி இருக்க முடியும் என்று தோன்றுகிறது. பிரம்மத்திலிருந்துதானே இத்தனை தோற்றங்களும் வந்திருக்கின்றன? ஏதோ ஒரு சக்தியால்தானே அசலமான பிரம்மம் அசைந்து கொடுத்தது மாதிரி இத்தனையும் தோன்றிவிட்டன? அந்தச் சக்திதான் பிரம்மத்தின் பத்தினியான காமேசுவரி எனப்படுகிறது. அன்பே உருவான ஒரு பெற்ற தாயாரைப் போல் அந்தப் பராசக்தி அநுக்கிரகம் செய்வதைப் பிரத்தியட்சமாக அநுபவித்த மகான்கள் அதைக் காமேசுவரியாக வர்ணிக்கிறார்கள்.

பிரம்மாவின் பத்தினி என்று வாக்தேவியைச் சொல்கிறார்கள். பிரம்மா உலகைச் சிருஷ்டிப்பது போல், கவிகளுக்குக் கற்பனை சிருஷ்டி சக்தி தருகிறவள் சரஸ்வதி. செல்வத்தைத் தருகிற மகாலக்ஷ்மியை லோகபாலகனான மஹாவிஷ்ணுவின் சக்தியாகச் சொல்வதும் சரி. சம்ஹாரமூர்த்தியான ருத்ரனின் சக்தியாக இருக்கிறாள் பார்வதி. இந்த மூன்று காரியங்களுக்கும் மேலே இருக்கிறாளே, பராசக்தியான காமாக்ஷி! இவளை யாருடைய பத்தினியாகச் சொல்வது? பரப்பிரம்ம பத்தினி என்றே சொல்ல வேண்டும். குணமும் கிரியையும் இல்லாத சாந்தமயமான பிரம்ம பத்தினியாகவும் இருக்கிறாள் — உலகத்தை எல்லாம் குணங்களிலும், பல கிரியைகளிலும் புரட்டி எடுத்துக் கொண்டிருக்கிற மஹா மாயையாகவும் இருக்கிறாள். 'இந்த உன் மகிமைக்கு எல்லை கட்ட முடியாது. (நிஸ்ஸீமம்). அது இன்னதென்று புரிந்து கொள்ளவும் முடியாது (துரதிகமம்)' என்று ஆசாரியாள் ஸௌந்தர்ய லஹரியில் அம்பாளுடைய பெருமையைச் சொல்கிறார்.

எல்லாவற்றையும் ஆட்டி வைத்துக் கொண்டிருக்கிற அந்தச் சக்தியில் கரைந்தால் எப்படி ஆனந்தமும், சாந்தமும் உண்டாக முடியும் என்று தோன்றுகிறது. யோசித்துப் பார்த்தால் அது எப்போதும் சாந்தமாகவும், ஆனந்த ஸ்வரூபமாகவும் இருப்பதால்தான் எல்லாவற்றையும் ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கிறது என்று தெரியும். ஜீவனும் கனவு, விழிப்பு, தூக்கம் இவற்றில் சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் இவற்றைச் செய்கிறான் என்று முன்னே சொன்னேன் அல்லவா? இவன் தூங்குகிற போதும் தூங்காமல் இவனுக்குள்ளேயே ஒரு சக்தி இருக்கிறதல்லவா? அது இருப்பதால்தானே இவன் மறுநாள் காலை விழித்துக் கொள்கிறான்? இந்த நான்காவதான துரீய வஸ்து ஒரே அமைதிமயமாகத்தானே இருக்கிறது? தூங்குகிற போது துக்கக் கலப்பே இல்லாத சாந்தம் தானே இருக்கிறது? ஆனால் இத்தனை சாந்தமான அந்த வஸ்து உடம்பை விட்டுப் போய் விட்டால் இவனுடைய ஆட்டபாட்டம் எல்லாம் ஓய்ந்து போகின்றன.

இப்படிப் பிராணாதாரமாகவும், லோகங்களுக்கெல்லாம் ஆதாரமாகவும் இருக்கிற பராசக்தியிடம் பக்தி வைத்து நம்மை அப்படியே அவளுக்குள் கரைத்துக் கொண்டால்தான் சாசுவதமான பரம சாந்தியைப் பெறுவோம்.

அமோகமான அறுவடைக்கும் நல்
வாழ்விற்கும் உதவி...

நாங்கள் விவசாயிகளுக்கு சுலபமான நிபந்தனை
களில் கடன்கள் வழங்குகிறோம். இவை, நவீன
உபகரணங்கள் வாங்கவும், அதிகமாகப் பயன்
பெற பணம் போடுவதற்கும், கிணறுகள்
வெட்டவும், பம்பு செட்டுகள் அமைக்கவும்,
கோழி வளர்ப்பு மற்றும் பால் பண்ணைகள்
நிறுவுவதற்கும் வழங்கப்படுகின்றன.
உண்மையில், யூகோ பாங்கின்
பரவலான கடன் திட்டங்கள்
அநேகமாய் ஒவ்வொரு சமூக-
பொருளாதாரப் பிரிவும் உள்பட
அனைத்திற்கும் 600க்கு அதிக
மான கிளைகள் மூலம்
உதவி வழங்குகின்றன.



UCOE-4 TAM

நாங்களே தங்களுக்கு உதவ
மக்களுக்கு லாபகரமாக உதவுகிறது

யுனைடெட் கமர்ஷியல் பாங்க்

UNITED COMMERCIAL BANK

சிவகாமியின் சபதம்

நாற்பத்தோராம் அத்தியாயம்

பாசறை

புத்த விஹாரத்திலிருந்து புறப்பட்ட சிறிது நேரத்துக்கெல்லாம் அக்குதிரை வீரர்களில் மூன்று பேர் பரஞ்சோதிக்கு முன்னாலும், மூன்று பேர் பின்னாலுமாகப் பரஞ்சோதியைத் தங்களுக்கு நடுவிலேயே விட்டுக் கொண்டு சென்றார்கள்.

பொழுது நன்றாய் விடிந்த பிறகு, பரஞ்சோதி அவர்களுடைய தோற்றத்தைக் கவனித்தான். அவர்கள் திடகாத்திரமுள்ள ஆஜானுபாகுவான மனிதர்கள் என்று தெரிந்து கொண்டான்.

இந்த வீரர்கள் ஏதோ ஒரு சைனியத்தைச் சேர்ந்தவர்களாய்த்தான் இருக்க வேண்டும். முக்கியமான யுத்த காரியமாகத்தான் போய்க் கொண்டிருக்கிறார்கள். இவர்களுடன் தன்னை ஏன் அந்தப் புத்த பிக்ஷு சேர்த்து அனுப்பினார்?

நேரமாக ஆகப் பரஞ்சோதியின் மனக் கலக்கம் அதிகமாயிற்று. அவன் அந்த வீரர்களுக்கு முன்னால் போகவோ, பின்னால் போகவோ முயன்றபோதெல்லாம் அவர்கள் அதற்கு இடங்கொடாமல் அவனை நடுவிலேயே விட்டுக் கொண்டு போனார்கள். இதைப் பார்க்

அமரர் கல்கி





கப் பார்க்க, அவன் உள்ளத்தில் தனக்கு இவர்கள் வழிகாட்டி அழைத்துப் போகிறார்களா அல்லது சிறைப்படுத்திக் கொண்டு போகிறார்களா என்ற சந்தேகம் உதித்தது.

ஸ்ரீபர்வதம் வடக்கே கிருஷ்ணா நதிக் கரையில் இருக்கிறதென்பது பரஞ்சோதிக்குத் தெரியும். ஆனால் அதிகாலையில் கிளம்பியதிலிருந்து இந்த வீரர்களோ மேற்குத் திசையை நோக்கியே போய்க்கொண்டிருந்தார்கள். ஒரு வேளை கொஞ்ச தூரம் மேற்கு நோக்கிப் பிரயாணம் செய்த பிறகு வடக்கு நோக்கித் திரும்பலாம் என்று அவன் எண்ணியபடியும் நடக்கவில்லை.

சூரியன் உச்சி வானத்துக்கு வரும் வரையில் அவர்களுடன் பிரயாணம் செய்த பின்னர், பரஞ்சோதி தான் உண்மையில் சிறையாளியா இல்லையா என்பதை நிச்சயமாய்த் தெரிந்து கொள்ள விரும்பினான். அவ்விடத்தில் வடக்கு நோக்கித் திரும்பிய பாதையில் அவன் தன் குதிரையைத் திருப்பினான்.

கண் மூடித் திறக்கும் நேரத்தில் அந்த ஆறு குதிரை வீரர்களும் தன்னைச் சூழ்ந்து நிற்பதைக் கண்டான். அவர்களுடைய வேல்களின் முனைகள் அவனுடைய குதிரை மீது உராய்ந்துகொண்டிருந்தன.

எண்ணெய் ஊற்றி ஆயத்தமாய் வைத்திருக்கும் தீபத்தின் திரியானது அதன் மீது தீப்பட்டதும் சுடர்விட்டு எரியத் தொடங்குவது போல், பரஞ்சோதியின் உள்ளத்தில் குமுறிக் கொண்டிருந்த ஆத்திரம் இப்போது கொழுந்து விட்டெரியத் தொடங்கியது. கோபத்தினால் அவனுடைய ரத்தம் கொதித்தது.

கையிலே வேலை எடுத்தான். அதைத் தனக்கு அருகில் இருந்தவன்மீது பிரயோகிப்பதற்காக ஓங்கினான்.

ஆகா! என்ன ஏமாற்றம்! ஓங்கிய வேல் எங்கேயோ போய் விழுந்தது. வேலுக்கு உடையவனும் தொப்பென்று தரையில் விழுந்தான். எப்படி விழுந்தோம் என்பதே முதலில் பரஞ்சோதிக்குத் தெரியவில்லை. அப்புறம் தன் உடம்பின் மீது கயிறு ஒன்று சுற்றிக் கொண்டிருப்பதைக் கண்டான். அந்த வீரர்களில் ஒருவன் சுருக்குப் போட்ட கயிற்றைத் தன் மீது எறிந்து தன்னைக் கீழே இழுத்துத் தள்ளி விட்டான் என்பதை அறிந்தான்.

இரண்டாவது தடவை இவ்விதம் சூழ்ச்சியினால் தான் வெல்லப்பட்டதை நினைத்தபோது, பரஞ்சோதிக்கு ஒரு பக்கம் வெட்கமும் இன்னொரு பக்கம் ஆத்திரமும் பொங்கின.

அவனுடைய குதிரையோ தன் எஜமானனுக்கு இனி மேல் தன்னால் பயனில்லை என்று உணர்ந்து கொண்டது போல் வந்த வழியே திரும்பி ஓடிக் கொண்டிருந்தது.

தப்பிச் செல்வதற்கு இவ்விதம் வழியே இல்லாமற் போகவே, 'இனிப் போராடுவதில் பயனில்லை; நடப்பது நடக்கட்டும்' என்று பரஞ்சோதி சும்மா இருந்தான்.

அந்த வீரர்களில் மூவர் குதிரை மீதிருந்து இறங்கி வந்து பரஞ்சோதியின் கரங்களை முதுகுப் பக்கம் சேர்த்து, பின் கட்டு முன் கட்டாகக் கட்டினார்கள்.

அந்த ஆறு குதிரைகளுக்குள்ளே அதிக வலிவும் ஆகிருதியும் உள்ள குதிரையின் மீது அவனை ஏற்றி வைத்தார்கள். அவனுக்குப் பின்னால், அவ்வீரர்களில் ஒருவனும் உட்கார்ந்து கொண்டான். மறுபடியும் குதிரைகள் மேற்குத் திசையை நோக்கிச் சென்றன.

அஸ்தமிக்க ஒரு ஜாமம் இருக்கும் பொழுது, பரஞ்



சோதி தனக்கு முன்னால் ஓர் அபூர்வமான காட்சியைப் பார்த்தான்.

அப்போது அவர்கள் சென்ற பாதையானது, வர வர மேடாகி வந்த பீடபூமியின் உச்சியை அடைந்திருந்தது. அங்கிருந்து பார்க்கும்போது வெகு தூரத்துக்கு வெகு தூரம் சமவெளிப் பிரதேசமாகக் காணப்பட்டது. அந்தப் பிரதேசத்தில் கண்ணுக்கெட்டிய தூரம் சைனியம் தண்டு இறங்கியிருந்தது.

ஆயிரக்கணக்கான போர் யானைகள் கருங் குன்றுகளைப் போல் வரிசை வரிசையாக அங்கு நின்றன. அந்தக் கருங் குன்றுகளுக்கு இடையிடையே அடித்திருந்த கூடாரங்கள் வெண்ணிற மணற்



குன்றுகளைப் போல் தோன்றின. மற்றும் எண்ண இயலாத குதிரைகள், ஒட்டகங்கள், ரிஷபங்கள், ரதங்கள், வண்டிகள் ஆகியவை எங்கெங்கும் காணப்பட்டன. சர்க்கரை இறைந்து கிடக்கும் இடத்தில் மொய்க்கும் எறும்புகளைப் போல், லட்சோப லட்சம் வீரர்கள் சில இடங்களில் நெருங்கியும், சில இடங்களில் பரந்தும், வெகுதூரத்துக்கு வெகுதூரம் காணப்பட்டார்கள்.

கூடாரங்களின் மேலே வரிசை வரிசையாகக் கொடிகள் பறந்து கொண்டிருந்தன. எல்லாவற்றுக்கும் நடுநாயகமாக ஒரு பிரம்மாண்டமான கொடி வானளாவிப் பறநது கொண்டிருந்தது.

கொந்தளித்துக் கொண்டிருக்கும் சமுத்திரத்தை நெருங்கும்போது கேட்கும் 'ஹோ' என்ற பேரிரைச்சலைப் போல், இனந் தெரியாதபடி பல ஒலிகள் கலந்தெழுந்த பேரோசை, அந்தப் பாசறையிலிருந்து வந்து கொண்டிருந்தது.

இந்தக் காட்சியைப் பார்த்த பரஞ்சோதியின் வாயிலிருந்து, ''ஆஹா !'' என்ற சத்தம் எழுந்தது.

அங்கே தண்டு இறங்கியிருப்பது பல்லவ சைனியந்தான் என்று எண்ணிய பரஞ்சோதியின் உள்ளத்தில், அப்போது அவனுடைய கட்டுண்ட நிலைமையையெல்லாம் மறக்கச் செய்து கொண்டு ஒரு பெரும் ஆர்வம் பூரித்து எழுந்தது.

அது என்ன ஆர்வமென்றால், மகத்தான வீரப் போருக்கு ஆயத்தமாகத் துடிதுடித்துக் கொண்டு நிற்கும் அந்த மகா சைனியத்தில் தானும் ஒரு போர் வீரனாகச் சேர்ந்துவிட வேண்டும் என்பதுதான்.

அந்தகாரம் சூழ்ந்த இரவில் பிரயாணம் செய்பவன் வழி தெரியாமல் திகைத்துக் கொண்டிருக்கையில், திடீரென்று தோன்றிய மின்னலின் ஒளியிலே தான் போக வேண்டிய பாதையைக் கண்டுபிடிப்பது போல், பரஞ்சோதியும் தான் பிறவி எடுத்தது எதற்காக என்பதை அந்தக் கணத்தில் தெளிவாகக் கண்டுகொண்டான். ஓலையில் எழுத்தாணி கொண்டு எழுதுவதற்காகவோ, தோத்திரப் பாடல்களை உருப் போட்டுப் பாடுவதற்காகவோ, கையில் சிற்றுளி கொண்டு கல்லைக் கொத்திக் கொண்டிருப்பதற்காகவோ, வர்ணங்களைக் குழைத்துச் சுவரில் சித்திரம் எழுதுவதற்காகவோ தான் பிறக்கவில்லை ! கையில் வாளும் வேலும் கொண்டு போர்முனையில் நின்று, எதிரிகளின் தலைகளைப் பனங்காய்களைப் போல் உருட்டி, அவர்கள் நெஞ்சில் வேலைப் பாய்ச்சி, இரத்த வெள்ளத்தில் நீந்தி, வெற்றிச் சங்கு முழக்கிப் பகைவர்களை ஹதாஹதம் செய்து விரட்டி, 'வீராதி வீரன்' என்று உலகமெல்லாம் பாராட்டும்படி பெயர் எடுப்பதற்காகப் பிறந்தவன் தான் என்று உணர்ந்தான்.

இந்த எண்ணமானது பரஞ்சோதிக்கு எல்லையற்ற குதூகலத்தை உண்டாக்கிற்று. ஆயனர் வீட்டில் புத்தர் சிலைக்குப் பின்னால் ஒளிந்திருந்து அவன் பார்த்த மகேந்திர சக்கரவர்த்தியின் கம்பீர உருவம் அவன் கண் முன்னால் எழுந்தது. அதோ வானளாவிப் பறக்கும் கொடியின் அடியில் இந்த மகத்தான சைனியத்தின் பிரதம சேனாதிபதியான மகேந்திர சக்கரவர்த்தி வீற்றிருப்

என்றும் காணுத இன்பக் காட்சிகள்!

ஷர்மிலா டாகூர்

பாம்பே டையிங்

புடவைகளிலே

பாம்பே டையிங்கின் புத்தம்புதிய புடவை வகை-
களில் ஷர்மிலா டாகூர் தாரகையாக ஜொலிக்கி
ருர். உள்ளக்கிளுகிளுப்பூட்டும் 100%
பாலியெஸ்டர், ரேலிகா 100% ப்யூர் காட்டன்,
ஸ்விஸ் வாயில்கள் மற்றும் வாயில்கள்.



பாம்பே டையிங்

BD-6568-R

ஷேவர் ஸ்விஷ்

விமானக் கொள்ளையரை விரட்டியடிக்கிறான்



ஒவ்வொரு முறையும் இதே கதை: ஸ்விஷ் க்ஷவரம் செய்து கொள்பவரை மிஞ்சுவதற்கில்லை [illegible] நீங்களும் பங்கு பெறலாம் ([illegible]).

பார். அவர் முன்னிலையிலேதான் தன்னைக் கொண்டு போய் நிறுத்துவார்கள்.

சக்கரவர்த்தியின் சந்நிதியை அடைந்ததும், அவர் பாதங்களில் விழுந்து, ''பிரபு! பல்லவேந்திரா! தங்களுடைய வீர மகா சைனியத்தில் இந்தப் பட்டிக்காட்டில் பிறந்த அறியாச் சிறுவனையும் சேர்த்துக் கொள்ள அருள் புரிய வேணும்!'' என்று வேண்டிக் கொள்வதென்று பரஞ்சோதி தீர்மானித்தான். சித்திரக் கலையுமாச்சு, வர்ணச் சேர்க்கையுமாச்சு! ஆயனரும் நாகநந்தியும் எக்கேடு கெட்டாவது போகட்டும்!

இவ்விதம் பரஞ்சோதி எண்ணமிட்டுக் கொண்டே பாசறையை நெருங்கிய போது, அவனுடைய பொங்கி எழுந்த உற்சாகத்தை மீண்டும் சந்தேக நிழல் மறைத்தது. ''இங்கே இறங்கியிருப்பது பல்லவ சைனியந்தானா?'' என்பது தான் அந்தச் சந்தேகம்.

பல்லவ சாம்ராஜ்யத்தின் கொடி ரிஷபக் கொடி அல்லவா? இங்கே பறக்கும் கொடிகளில் காட்டுப் பன்றியின் உருவம் கம்பீரமாகக் காட்சியளிக்கிறதே!

ஒருவேளை இது வாதாபி சைனியமாக இருக்குமோ? பல்லவ இராஜ்யத்தின் மீது படையெடுத்து வரும் சைனியம் இதுதானோ? — அம்மம்மா! இவ்வளவு பிரம்மாண்டமான படை பலமுள்ள பகைவன் பல்லவ இராஜ்யத்தின் மீது படையெடுத்து வருகிறான்?

பாசறையின் முன் வாசலை அடைந்ததும், வீரர்கள் குதிரைகளின் மீதிருந்து கீழே இறங்கிப் பரஞ்சோதியையும் கீழே இறக்கி விட்டு, அவனை நடத்தி அழைத்துச் சென்றார்கள்.

பாசறைக்குள் புகுந்து சென்றபோது, பரஞ்சோதியின் மனத்தில் முன்னமே தோன்றியிருந்த சந்தேகம் உறுதியாயிற்று.

பாசறையில் ஆங்காங்கு நின்ற வீரர்களின் தோற்றமும், அவர்களுடைய பேச்சின் பாஷையும், இந்தச் சைனியம் பல்லவ சைனியமாக இருக்க முடியாது என்று ஐயமறத் தெரிவித்தன.

'ஆஹா! பகைவர்களின் பாசறைதான் இது! இங்கே வந்து அகப்பட்டுக் கொண்டோமே? தப்பிச் செல்வதற்கு வழியே இல்லை போலிருக்கிறதே!' என்று பரஞ்சோதி எண்ணியபோது, அவனுடைய சப்த நாடியும் ஒடுங்கிவிட்டன. சற்றுமுன் உள்ளத்தில் ஏற்பட்ட குதூகலம் நிராசையாக மாறியது.

அவன் உடம்பைப் பிணித்திருந்த கட்டுக்கள் அப்போது முன்னைவிடப் பதின்மடங்கு அதிகமாக வலித்தன.

மனச் சோர்வினாலும் உடல் வலியினாலும் அவனால் நிமிர்ந்து நடக்கக்கூட முடியாமல் தள்ளாடவே, அவனை அவ்வீரர்கள் இழுத்துக் கொண்டு போக வேண்டியதாக நேரிட்டது.

அப்போது சற்றுத் தூரத்தில் அறிமுகமான முகம் ஒன்று தன்னை நோக்கி வருவதைப் பரஞ்சோதி கண்டான். அருகில் நெருங்கியதும் அந்த முகம் நேற்று முன் தினம் அவனுக்கு வழித் துணையாகக் கிடைத்த வஜ்ரபாஹுவின் முகந்தான் என்பது தெரிந்தது.

முதலில், பரஞ்சோதிக்குச் சிறிது உற்சாகம் உண்டாயிற்று. உடனே அவன் மனத்தில், 'நாம் இந்தக் கதியை அடைவதற்கு மூல காரணம் இந்த மனிதன்தான்' என்ற எண்ணம் தோன்றியது.

வஜ்ரபாஹுவோ பரஞ்சோதியைப் பார்த்து மிக்க அதிசயத்தை அடைந்தவனைப் போல், ''தம்பி! இது என்ன கோலம்?'' என்றான்; பிறகு, அவனை அழைத்து வந்த வீரர்களைப் பார்த்து ஏதோ கேட்டுவிட்டு, ''தம்பி! பயப்படாதே! சத்யாச்ரய புலிகேசி மன்னரிடம் உள்ளது உள்ளபடி சொல்லு!

புதிய ஷெரீஃப்



தொழில் துறையிலும் சமூகப் பணியிலும் முதிர்ந்த அனுபவமுள்ள ஒருவரைச் சென்னை நகர ஷெரீஃப்பாக நியமனம் செய்யும் சம்பிரதாயத்துக்கு இணங்க 1974ம் ஆண்டுக்கு திரு கே. எஸ். நாராயணன் ஷெரீஃப்பாக நியமிக்கப் பட்டிருக்கிறார். சிமெண்டு, பிளாஸ்டிக்ஸ் தொழில்களில் பல ஆண்டுகளாக ஈடுபட்டுள்ள திரு நாராயணன் இந்தியா சிமெண்ட்ஸ் கம்பெனியின் நிர்வாக டைரக்டர். காகிதம், சர்க்கரை, ரசாயனப் பொருள்கள் ஆகியவை உற்பத்தி செய்யும் தொழிலகங்களுடனும், கப்பல் வாணிபத் துறையிலும் தொடர்பு உள்ளவர். பல கல்வி ஸ்தாபனங்கள் கலாசாரச் சங்கங்களிலும் பங்கு கொண்டு, திறமையும் தயையும் ஒருங்கே பெற்ற தொழிலதிபராகத் திகழ்கிறார் திரு கே.எஸ். நாராயணன். அவருக்குக் கிடைத்துள்ள இந்தக் கௌரவத்துக்காக அவரைப் பாராட்டுகிறோம்.

உனக்குத் தீங்கு ஒன்றும் நேராது!'' என்று கூறினான்.

வஜ்ரபாஹுவின் வார்த்தைகளைக் காட்டிலும் அவனுடைய பிரகாசமான கண்களில் மின்வெட்டைப் போல் தோன்றிய சமிக்ஞையானது பரஞ்சோதிக்கு அதிக தைரியத்தை ஊட்டியது.

நாற்பத்திரண்டாம் அத்தியாயம்

சத்யாச்ரயன்

வாதாபியைத் தலைநகராகக் கொண்டு வடக்கே நர்மதை வரையிலும் தெற்கே துங்கபத்திரை வரையிலும் பரந்து கிடந்த சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தியை — பாரத நாட்டில் அந்தக் காலத்திலிருந்த வீரர்களுக்குள்ளே ஒப்பற்ற மகா வீரனாகிய புலிகேசியை நேயர்கள் இப்போது சந்திக்கப் போகிறார்கள். அப்படிச் சந்திப்பதற்கு முன்னால், அந்த வீரனின் பூர்வ சரித்திரத்தை நேயர்கள் தெரிந்து கொள்ளுதல் உபயோகமாக இருக்கும்.

புலிகேசியும் அவனுடைய சகோதரர்களும் சிறுவர்களாக இருந்தபோது, அவர்களுடைய சிற்றப்பன் மங்களேசனுடைய கொடுமைக்கு ஆளாக நேர்ந்தது. மங்களேசனுடைய சிறையிலிருந்து அவர்கள் தப்பி ஓடி, வெகு காலம் அடர்ந்த காடுகளில் ஒளிந்து வாழ்ந்தார்கள். அப்படிக் காட்டில் வசித்த காலத்தில் அவர்கள் அநுபவித்த அளவில்லாத கஷ்டங்கள் அவர்களுடைய தேகத்தை வஜ்ரதேகமாக்கி, அவர்களுடைய உள்ளத்தில் வயிரம் ஏற்றி, அவர்களை இணையற்ற வீர புருஷர்களாகவும் ஈவிரக்கமற்ற கரூர சித்தர்களாகவும் செய்துவிட்டன.

காலம் கைகூடி வந்தபோது, புலிகேசியும் காட்டைவிட்டு வெளி வந்து, சிற்றப்பனை எளிதில் வென்று அப்புறப்படுத்திவிட்டு, வாதாபி சிங்காதனத்தில் ஏறினான். பின்னர், தன் வீரத் தம்பிமார் துணை கொண்டு வாதாபி இராஜ்யத்தை விஸ்தரிக்கத் தொடங்கினான். வட திசையில் அவனுடைய இராஜ்யம் விஸ்தரித்துக் கொண்டு போய் நர்மதை நதிக் கரையை எட்டியபோது அவனுடைய சைனியம் உத்தர பாரதத்தின் ஏக சக்ராதிபதியாக விளங்கிய ஹர்ஷவர்த்தனரின் படைகளுடன் முட்ட வேண்டியதாயிற்று.

நர்மதை நதியின் இரு கரைகளிலும் பல வருஷ காலம் போர் நடந்தது. வாதாபிப் படைகள் எவ்வளவோ வீரத்துடன் போர் புரிந்தும் வடநாட்டிலிருந்து மேலும் மேலும் ஹர்ஷரின் சைனியங்கள் வந்து கொண்டிருந்தபடியால், முடிவான வெற்றி காண முடியவில்லை. இந்த நிலைமையில் லட்சோப லட்சம் வீரர்கள் அடங்கிய பெரும் சைனியத்துக்கு ஹர்ஷவர்த்தனர் தாமே தலைமை வகித்து வந்ததாகத் தெரிய வந்தபோது, புலிகேசி மேலும் அவருடன் போராடுவது விந்திய பர்வதத்தில் முட்டிக் கொள்வதேயாகும் என்பதை உணர்ந்து சமாதானத்தைக் கோரினான். மகா புருஷரான ஹர்ஷவர்த்தனரும் அதற்கு உடனே இணங்கியதுடன் புலிகேசியின் வீர தீரங்களைப் பாராட்டி நர்மதைக்குத் தெற்கேயுள்ள பிரதேசத்துக்குச் சக்கரவர்த்தியாக அவனை அங்கீகரித்தார்.

பின்னர், புலிகேசியின் கவனம் தென்னாட்டை நோக்கித் திரும்பிற்று. அவ்விதம் திரும்புவதற்கு முக்கிய காரணமாகவும் தூண்டுகோலாகவும் இருந்தவர்கள் ஜைன முனிவர்கள்.

புலிகேசி சிங்காதனம் ஏறுவதற்கு ஜைனர்கள் உதவி செய்த காரணத்தினால், வாதாபியில் சமண முனிவர்களுக்கு விசேஷச் செல்வாக்கு ஏற்பட்டிருந்தது. அவர்களுடைய முயற்சியினாலேயே கங்கபாடி மன்னன் துர்விநீதனுடைய மகளுக்கும் புலிகேசியின் சகோதரன் விஷ்ணுவர்த்தனனுக்கும் விவாகம் நடந்தது.

காஞ்சி மகேந்திர சக்கரவர்த்தி ஜைன மதத்திலிருந்து விலகிச் சைவ சமயத்தை மேற்கொண்டபோது நாடெங்கும் உள்ள சமணர்களின் உள்ளம் கொதிப்பை அடைந்தது. ஏனெனில், கல்வியில் சிறந்த காஞ்சிமா நகரமானது வெகு காலமாகச் சமணர்களுடைய குருபீடமாக இருந்து வந்தது. காஞ்சியில் வேகவதி ஆற்றுக்கு அப்பாலிருந்த பகுதி 'ஜின காஞ்சி' என்று வழங்கி வந்தது. தென் பெண்ணை ஆற்றின் முகத்துவாரத்தருகில் இருந்த பாடலிபுரம் என்னும் ஊரில் தென்னாட்டிலேயே மிகச் சிறந்த சமணப் பள்ளி புகழுடன் விளங்கி வந்தது. இத்தகைய பிரதேசத்தில், சமணத்தின் செல்வாக்கு தாழ்ந்து சைவம் ஓங்குவது என்பதைச் சமண சமயத் தலைவர்களால் சகிக்கக்கூடவில்லை.

இவர்களுடைய தூண்டுதலுடனே புலிகேசியின் ஏக சக்ராதிபத்ய வெறியும் சேரவே, அவ்வீர மன்னன் இது வரையில் யாரும் கண்டும் கேட்டுமிராத பிரும்மாண்டமான சைனியத்துடனே தென்னாட்டின் மேல் படையெடுப்பதற்குச் சித்தமானான்.

படையெடுப்புச் சைனியம் கிளம்பிய போது, வெற்றி முழக்கத்துடனே காஞ்சியில் பிரவேசித்து மகேந்திரனுக்குப் புத்தி புகட்டலாம் என்ற



AIYARS-FL. 384 TM

எண்ணத்துடன் ஜைன ஆசாரியர்களும் சைனியத்துடனே புறப்பட்டார்கள். ஆனால், தலைநகருக்கும் பாசறைக்கும் வித்தியாசம் அதிகம் என்பதையும், சக்கரவர்த்தி புலிகேசிக்கும், போர்த் தலைவன் புலிகேசிக்கும் மிக்க வேற்றுமை உண்டு என்பதையும் அவர்கள் விரைவிலேயே கண்டார்கள். தலைநகரிலே பூஜ்யபாதர், ரவி கீர்த்தி முதலிய ஜைன குருமாருக்குச் சக்கரவர்த்தியைக் காட்டிலும் அதிகமான மரியாதை நடந்தது. போர்க்களத்திலோ அவர்களைத் திரும்பிப் பார்ப்பவர்கள் யாரும் இல்லை. அந்தக் குருமார் வைஜயந்திப் பட்டணத்தைக் கொளுத்தக் கூடாது என்று சொன்னதைப் புலிகேசி அலட்சியம் செய்த பிறகு, அவர்களுக்குப் போர்க்களத்தில் இருக்கவே மனம் கொள்ளவில்லை. புலிகேசியிடம் சிறிது விவாதம் செய்து பார்த்த பிறகு அவனிடம் விடைபெற்றுக் கொண்டு அவர்கள் திரும்பிச் சென்றார்கள்.

சளுக்கச் சக்கரவர்த்தியை அவருடைய முக்கிய படைத் தலைவர்கள் சகிதமாக நாம் சந்திக்கும்போது, மேற்கூறியபடி ஜைன குருமார்கள் பாசறையிலிருந்து போய்விட்டதைக் குறித்துத் தான் பேச்சு நடந்து கொண்டிருந்தது.

வானை அளாவிப் பறந்து கொண்டிருந்த வராகக் கொடியின் கீழே, விஸ்தாரமான கூடாரத்தின் நடுவில், தந்தச் சிங்காதனத்தில் மணி மகுடம் தரித்த புலிகேசி மன்னன் கம்பீரமாக அமர்ந்திருந்தான்.

சிங்காதனத்துக்கு எதிரே தரையிலே விரித்திருந்த இரத்தினக் கம்பளத்தில் ஏழெட்டுப் பேர் உட்கார்ந்திருந்தார்கள். அவர்கள் படைத் தலைவர்கள் முதலிய பெரிய பதவி வகிப்பவர்களாக இருக்க வேண்டுமென்று அவர்களுடைய தோற்றத்திலிருந்து தெரிய வந்தது. அவர்கள்எல்லோருடைய கண்களும் பயபக்தியுடன் புலிகேசியின் முகத்தையே நோக்கிய வண்ணம் இருந்தன.

புலிகேசியும் அவனுடைய படைத் தலைவர்களும் பேசிய பாஷையில் தமிழ்ச் சொற்களும், பிராகிருதச் சொற்களும் கலந்திருந்தன.*

''லட்சணந்தான்! இந்தத் திகம்பர சந்யாசிகள் என்ன எண்ணிக் கொண்டு நம்முடன் கிளம்பினார்கள் என்று தெரியவில்லை. இவர்கள் இஷ்டப்படியே யுத்தத்தை நடத்துவதாயிருந்தால் உருப்பட்டாற் போலத்தான்'' என்று புலிகேசி கூறினான்.

''அவர்கள் போய்விட்டதே க்ஷேமம்; அவர்கள் நம்மோடு வந்துகொண்டிருந்தால் யுத்தம் செய்யவே முடியாது: கோயில்களும், சங்கிராமங்களும் ஸ்தூபங்களும் கட்டிக் கொண்டு போகலாம்!'' என்றான் ஒரு படைத் தலைவன்.

எல்லோரும் கலகலவென்று சிரித்தார்கள்.

சிரிப்பு அடங்கியதும் இன்னொரு படைத் தலைவன், ''ஜைனமுனிவர்களை அனுப்பி விட்டோம்; சரிதான். ஆனால் புத்த பிக்ஷுவின் இஷ்டப்படி தானே யுத்தம் நடத்துவதாக ஏற்பட்டிருக்கிறது?'' என்று கூறி, புலிகேசியின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தான்.

''ஆகா! அது வேறு விஷயம். பிக்ஷுவின் யோசனையைக் கேட்டதில் இதுவரையில் நாம் எவ்வித நஷ்டமும் அடையவில்லை. எந்தக் காரியமும் தவறாகப் போனதுமில்லை'' என்றான் புலிகேசி.

பிறகு, எதிரில் இருந்தவர்களில் ஒருவனைக் குறிப்பிட்டுப் பார்த்து, ''நம்ஒற்றர் படை வெகுலட்சணமாக வேலை செய்கிறது போலிருக்கிறதே! பிக்ஷுவின் தூதனை நம்முடைய ஆட்கள் கண்டு பிடித்துக்



* பிற்காலத்தில் இந்தக் கலப்பு மொழியே கன்னட பாஷையாயிற்று.

கொண்டு வருவதற்கு மாருக, தூதனல்லவா நம்மைத் தேடிப் பிடித்திருக்கிருன்?'' என்று கூறியபோது, இயற்கையாகவே கடுமையான குரலில் இன்னும் அதிகக் கடுமை தொனித்தது.

அந்த ஒற்றர் படைத் தலைவன் ஒரு கணம் தலை குனிந்திருந்து விட்டு, பிறகு நிமிர்ந்து புலிகேசியை நோக்கி, ''ஏதோ பிசகு நேர்ந்திருக்கிறது. நான் அனுப்பிய ஆட்கள் இன்னும் வந்து சேரவில்லை!..'' என்றுசொல்லிக்கொண்டிருக்கும்போதே கூடாரத்துக்குள் யாரோ வருவது கண்டு திரும்பிப் பார்த்து, ''ஆகா! இதோ வந்து விட்டார்களே!'' என்ருன்.

அப்போது, பின்கட்டு முன்கட்டாகக் கட்டியிருந்த பரஞ்சோதியை முன்னுல் தள்ளிக்கொண்டு அவனைச் சிறைப் பிடித்த வீரர்கள் உள்ளே வந்து கொண்டிருந்தார்கள்.

அந்தக் காட்சியைப் பார்த்த புலிகேசி, ''இது என்ன? இது என்ன? இந்தச் சிறுவன் யார்?'' என்று கேட்டது, பரஞ்சோதியின் காதில் இடிமுழக்கம் போல் விழுந்தது. (தொடரும்)

ராஜாஜி வாழ்க!

(ராஜாஜி ஜீவியவந்தராக இருந்தபோது அவரை வாழ்த்தி ஸ்ரீமத் ஆண்டவன் ஸ்வாமிகள் அருளிய மங்களாசாஸனம்.)

★

''நான் உன்னை நல்லான் சக்கரவர்த்தி எனப் போற்றுகிறேன்'' என்று பெருமாளால் புகழப்பட்ட இருவம்சத்தில் தோன்றியவர், நல்லதையே எண்ணும் கூர்த்தமதி படைத்தவர், அறிவுடையோர் வணங்கி ஏற்கும் அருள்மொழியினர், தீய குணங்கள் அனைத்துக்கும் புறம்பே அவை தீண்டாதவாறு இருப்பவர், ஸகல மங்கல குணம் நிரம்பியவர்; நேர்மையால் மகிழ்ச்சி தரும் ஒழுக்கங்களை உடையவர், உலக க்ஷேமம் ஒன்றிலேயே நாட்டம் கொண்டவர்.

அரசியலில் சாதுர்யம், தம் சுக போகங்களில் நெஞ்சு நெகிழாமை, தேசபக்தி இவைகளால் தம் நிலத்தாயின் கால் தளைகளைக் களைந்தெறிவதில் வெற்றி கண்டவர், அரசைக் காப்பாற்றும் பொருட்டே தாமாக வந்த பதவிகள் அனைத்தையும் பெருமைப் படுத்தியவர், அனைத்துலகம் புகழும் ஆற்றல் மிக்கான், துதியிலும் மற்றதிலும் மாறுதலறியா இதயமுள்ளவர்.

வட்டியால் கொடுமைசெய்யும் கடன், ஏழைகளின் பணத்தை மீதமின்றிக் கொள்ளை கொள்ளும் குடி, நாட்டில் வறுமைக்கு ஹேதுவாக வேற்று நாட்டிலிருந்து வரும் பொருள்களில் மோகம், யுத்தத்தில் பயன்படுத்தப்படும் அணுசக்தி, சொந்த சுக போகத்தில் கருத்துள்ளவர்களின் அரசியல் சூழ்ச்சிகளுள் உறையும் நயவஞ்சம், இவைகளையும், இவை போன்ற பிற தீமைகளையும் போக்கவே, அல்லும் பகலும் அனவரதமும் இயங்கி வந்தவர்.

ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் பல்லாண்டு வாழ்க!


॥ विजयते राजगोपाल सूरिः ॥

"साधूनां चक्रवर्ति त्वमसि मम मतो"
विष्णुनैवं स्तुतस्य प्रादुर्भूतोऽन्ववाये
निशितशुभमतिः प्राज्ञसंमान्यवाग्मी ।
अंहः संघातबाह्योऽखिलसुभगगुणः
स्वार्जवो -
दारशीलो लोकक्षेमैकदृष्टिर्जगति विजयते
राजगोपालसूरिः ॥ १ ॥

नैपुण्याद्राजनीतौ भगणित निजसौख्यत्वतो
देशभक्त्या
भारत्या मातृभूमेश्चरणनिगळ संछेदनेऽ
वन्ध्ययत्नः ।
राज्यं संरक्षितुंच स्वयमुपगतसर्वाधिकारान्
प्रपुष्णन्
विश्वश्लाघ्यस्वभूमा स्तुतितदितरयोरेक
चित्तो वशी यः ॥ २ ॥

वृद्धिक्रूराधमर्ण्यं सकल धनहरं मद्यपानं दरिद्रैः
देशे दौर्गत्यहेतुं परभुव उपयातेषु पण्येषु
मोहम् ।
सङ्ग्राम ध्वाणुशक्तिं स्वसुखकुतुकिनां
र ज्यतन्त्रेषु शाठ्यं
दोषांश्चैत दृशांऽन्यान् अयतत सततं यो
निराकर्तुकामः ॥

என் இனிப்புகளைவிட அவள் தயாரிக்கும் இனிப்புகள் சிறப்பாக இருப்பதேன்? அந்த இரகசியத்தை என்னிடம் சொல்லுவாளா?



இல்லத்தரசியின் இரகசிய பால்பண்ணை:

நீங்களும் விருந்தாளிகளுக்காக சிறந்த இனிப்புகளைத் தயாரிக்கலாம். குலாப் ஜாமூன், ஹல்வா, பாயசம், மில்க் ஷேக், பர்பி, ஐஸ்க்ரீம் முதலியவை தயாரிக்கலாம். ஒவ்வொரு பண்டமும் சுவைமிக்கதாக இருக்கும். எப்படி? அமுல் மில்க் பவுடர் உதவியால்.

அமுல் மில்க் பவுடரிலிருந்து ஆரோக்கியமான நல்ல பால் தட்டில்லாமல் கிடைக்கிறது. காப்பி அல்லது தேநீருக்கு. கட்டியான ஆடைத் தயிருக்கு. பால் பானங்கள், இனிப்புகள் மற்றும் பழத் தின்பண்டங்களுக்கு. இது வசதியானது; சிக்கனமானதும் கூட. எப்போதும் ஒரு டின் கைவசம் இருக்கட்டும்.

அமுல்
மில்க் பவுடர்

ASP/AMP-17

கைரா டிஸ்ட்ரிக்ட் கோ-ஆப்பரேடிவ் மில்க் ப்ரொட்யூஸர்ஸ் யூனியன் லிட்., ஆனந்த்.



புயல் அடங்கியது, துயர் அடங்காது!



■ கடலில் தத்தளித்தவர்களுக்கு ஜலமோதியைப் பார்த்ததும் கடவுளையே கண்டது போல்தான் இருந்திருக்கும். ■ உயிர் தப்பிய ஸோனவதி மாலுமி ஒருவர் துறைமுகத்தில் ஜலமோதியை விட்டுக் கீழே இறங்குகிறார்.

விக்டோரியா ஹோட்டலில் இருநூறும் நம்பர் அறை. அந்த அறையில் அவர் ஏன் கன்னத்தில் கை வைத்துக் கொண்டு அமர்ந்திருக்கிறார்? கப்பல் கவிழ்ந்து விட்டதா? ஆம்! கடும் புயலில் சிக்கி மூழ்கிய ஸோனவதி கப்பலின் காப்டன் என். சி. டவாதான் அவர்.

''உள்ளே வரலாமா?''

சோர்ந்து களைப்புற்ற முகம் தலையசைக்கிறது. பத்து உயிர்களைப் பலிகொடுத்துவிட்ட 'ஷாக்' இன்னும் தணியவில்லை. மேஜையில் வைத்த காப்பியும் பிஸ்கட்டும் அப்படியே இருக்கின்றன. குடும்பத்துக்கு எழுதுவதற்காக வைத்திருந்த இன்லண்ட் கடிதம் திறந்தபடியே கிடக்கிறது. பத்துக் குடும்பங்களின் தலைவர்கள் இறந்த அவல நிலையைக் கண்டு விட்ட காப்டனுக்கு எப்படி எழுத ஓடும்?

''ஸோனவதி மூழ்கியதைப் பற்றி... விபத்தைப் பற்றி....!''

''ஓ! ஒரு நிமிஷம் நான் கண் மூடவில்லை. ஒரே டெலிபோன் மயம். பத்திரிகைக்காரர்கள் முற்றுகை... எத்தனையோ தேர்ந்த கார் ஓட்டிதான். ஒரு கணத்தில் அவன் கை மீறி அந்தக் காரியம் நடந்து விடுகிறது... மற்றொரு காரோடு மோதி விபத்து நடந்து விடுகிறது. அந்த ஒரு கணத்தை அவன் எப்படி எதிர்பார்க்க முடியும்?... அதைப் பற்றி விபத்துக்குப் பிறகு அவனுக்குள்ள நிலையில் எப்படி விவரித்துச் சொல்ல முடியும்? அந்த நிலையில்தான் நானும் இருக்கிறேன்!''

கடல் வாழ்க்கையில் 42 வருட அனுபவம் கொண்டு 23 வருடம் கப்பல் மாஸ்டர் பதவியும் வகித்த டவா, அந்தக் கடும் புயலில் பதினொன்று மணி நேர உயிர்ப் போராட்டம் நடத்தியும் 38 உயிர்களில் 28 உயிர்களையே காப்பாற்ற முடிந்தது.

''என் மனம் ஒரேயடியாகப் பேதலித்திருக்கிறது. அதிகமாகக் கேள்விகள் கேட்டு விடாதீர்கள். இன்னும் இரண்டு வருஷ காலத்துக்கு ஒரே என்கொயரி, கேள்விகள் மயம்தான் என்னைச் சுற்றிக் கொண்டிருக்கும்!'' என்றார் காப்டன் டவா பரிதாபமாக. அதற்கு மேல் அவரைச் சிரமப்படுத்தத் தோன்றுமா?

துறைமுகத்தில் உள்ள கடல் மாலுமிகள் தங்குமிடத்துக்கு விரைகிறோம்.

துக்கத்துக்கு மொழி வேண்டியதில்லை. பெரும் புயலில் சிக்கி அல்லலுற்ற இரு கப்பல் சிப்பந்திகளை அணுகுகிறோம். உருது மொழியும், ஹிந்தியுமே தெரிந்த அவ்விரு பணியாளர்களிடம் விவரங்களைச் சேகரிக்கிறோம், ஒரு மொழிபெயர்ப்பாளரின் உதவியினால்!

''ஐயா! எனக்குச் சொந்த ஊர் பம்பாய். 23 வருஷங்களாய்க் கப்பலிலே வேலை செய்யறவனுங்க. ஸோனவதி கப்பலுக்கு வேலைக்கு வந்து ஒன்பது மாதந்தான் ஆச்சு! எனது மனைவியும் ஒரே புதல்வனும் பம்பாயிலே இருக்கிறாங்க!'' என்கிறார் அயூப் முகம்மது கன் கலங்க.

''ஸோனவதி கப்பலுக்கு நேர்ந்த விபத்தினை விளக்கமாகச் சொல்லுங்க!''

''வியாபாரக் கப்பலுங்க. கல்கத்தாவிலிருந்து இந்த ஸோனவதி கப்பலில் தூத்துக்குடிக்குக் கரி ஏற்றி வந்தோமுங்க. தூத்துக்குடியிலிருந்து உப்பு ஏற்றி வந்தோமுங்க. விசாகப்பட்டினத்திலிருந்து 155 வது மைலில் டிசம்பர் 8ந் தேதி 2-30 மணிக்கு அந்தக் கடும் புயல் எங்க கப்பலைத் தாக்கிச்சு! கப்பலிலே நான் ஆயில்மன் வேலை செய்யறவனுங்க. புயலடிச்ச வேகத்திலே ஒரே காற்று, மழை. கப்பல் முழுதும் அலைகள் ஆளுயரத்துக்கும் மேலே பொங்கி விழுந்துதுங்க. மேக மூட்டம் மாதிரி மறைச்சுக்கிடுத்து. பக்கத்திலே நிற்கிற வரைகூட அடையாளம் தெரிஞ்சுக்க முடியலே! காப்டன் அபாய அறிவிப்பு மணியை ஒலித்து, 'இனி அவரவர்கள் உயிர் காக்கும் படகில் குதித்துத் தப்பித்துக் கொள்ளுங்கள்!'' என்றாருங்க!''

'' அந்தப் புயலின்போது உங்க மனசு எப்படியிருந்தது ?'

இரு நற்பணிகளுக்கு இரு கலை நிகழ்ச்சிகள்



நடுத்தர வகுப்பினருக்கு வெகு நாட்களாக இருந்து வரும் ஒரு குறையைத் தீர்த்து வைக்க, ஸ்ரீ யதுகிரி யதிராஜ மடத்தவர், திருவல்லிக்கேணியில், சமீபகாலத்தில், மடத்துக் கட்டடத்தையே ஒரு கல்யாண மண்டபமாக நிர்மாணித்திருக்கிறார்கள். குறைந்த செலவில் நடுத்தரக் குடும்பங்கள் கல்யாணங்கள் நடத்த இந்த மண்டபம் உதவுகிறது. ஆனால் கல்யாண மண்டபத்துக்கான பூரண வசதிகள் இன்னும் சில செய்து கொடுக்க வேண்டியிருக்கிறது. இதற்கு ரூ. 25,000 தேவை. இந்தத் தேவையைப் பூர்த்தி செய்யக் குமாரி ஹேமமாலினி தம் குச்சிப்புடி நாட்டியக் கச்சேரியை ஓர் உதவிக் கச்சேரியாகக் கொடுக்கிறார். டிசம்பர் 30ந்தேதி, திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தசாரதி சுவாமி சபையரங்கில் கச்சேரி நடக்கிறது. நற்பணியில் ஈடுபடுவதற்கும் கலை விருந்தை அனுபவிப்பதற்கும் சென்னை வாசிகளுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்.



பூந்தமல்லியில் உள்ள சரோஜினி வரதப்பன் பெண்கள் உயர்நிலைப்பள்ளி கல்வித் தரத்திலே உயர்ந்து நின்றாலும் கட்டடச் சிறப்பிலே உயரவில்லை. இதற்கு உதவும் நோக்கத்துடன் டிசம்பர் 26ந்தேதி இரு மனோகர் குழுவினர் இந்திரஜித் நாடகத்தை திருவல்லிக்கேணி பார்த்தசாரதி சாமி சபா அரங்கில் நடத்துகிறார்கள். கல்விப் பணியில் கருத்துடையவர்கள் நல்ல நாடகத்தைக் கண்டு களிப்பதுடன் நல்லவர்கள் நடத்தும் ஒரு நல்ல பணிக்கு உதவலாம்.

"ஐயோ ! ஆபத்து சமயத்திலே என்ன செய்வுங்க ? 'அல்லா! அல்லா! எங்களைக் காப்பாத்து! காப்பாத்து!' என்று வேண்டிக் கிட்டோமுங்க! இந்துக்கள், 'ராம்! ராம்!' என்று பிரார்த்தனை பண்ணினாங்க. இரண்டு உயிர் காக்கும் படகுகளில் ஏறிக்கொண்டோமுங்க ! வழியிலே சுறா மீன்கள் யமனாக வந்தன !"


அருகில் நின்ற மற்றோர் ஆயில்மன் இலாக் காலம், "எங்க கண் முன்னாலே இன்னொரு உயிர் காக்கும் படகு கவிழ்ந்தது. கட்டு மரத்திலே தொத்தி வந்த மற்றொரு கோஷ்டியைப் பயங்கர சுறா மீன்கள் தாக்கிச் சிலரது கால்களைச் சாப்பிட்டுவிட்டன. சிலரை விழுங்கத் தொடங்கின. மொத்தத்தில் பத்துப் பேருக்கு மேல் உயிரிழக்காமல் தப்பியதே அல்லாவின் கருணைதான் !" என்கிறார். முதிய மனிதர் இலாக் காலம் மேலும் கண்ணீர் மல்கச் சொல்கிறார்: "எனக்கு இரண்டு பையன்களும், ஒரு பெண்ணும். ஒரு பையன் படிக்கிறானுங்க. பெரிய பையன் எலெக்ட்ரிஷியனுங்க. என் பெண்ணுக்குக் கல்யாணம் ஆகல்லே. நான் போயிருந்தா என் குடும்பம் திக்கதியாப் போயிருக்குமுங்க !"

நாற்பத்தெட்டு மணி நேரம் வரை போர்க் கப்பலோ விமானப் படையினரோ விபத்து நிகழ்ந்த இடத்துக்கு விரையாதிருந்தது விசித்திரம். மனிதாபிமானம் துரிதமாகச் செயல்படாததற்குக் காரணம் சிவப்பு நாடாவா? அல்லது அசிரத்தையா? விசாரணை தேவை.

'ஆறிலும் சாவு, நூறிலும் சாவு' என்று வாய் வீரம் பேசலாம். ஆனால் போன உயிரை மீட்க முடியுமா ? புயலில் மூழ்கிய லோஹவதி கப்பலின் பிரதம அதிகாரி, ரேடியோ அதிகாரி, பிரதம இன்ஜினீயர், ஃபயர்மென் இருவர், சமையல்காரர், நான்கு கப்பல் தளப் பணியாளர்கள் ஆகியோர் பலியாகியிருக்கிறார்கள். உள்ளத்தைப் பேதலிக்கச் செய்யும் இந்த லோஹவதி கப்பலின் சோகக் கதை காரணமாகப் பெருக்கெடுத்த துயரக் கண்ணீர் கடலெனப் பொங்கி வழிகிறது; பத்துக் குடும்பங்களின் மனக் குமுறல் புயலெனச் சீறியடிக்கிறது ! தப்பிப் பிழைத்தவர்களோ அருமைத் தோழர்கள் அசுர மீன்களுக்கும் அரக்க அலைகளுக்கும் பலியானதை நேரில் பார்த்த அதிர்ச்சி தீராமல் பிரமித்துப் போய்க் கிடக்கிறார்கள். மரணத்துடன் கைகுலுக்கிய பின்னரும் அதன் பிடியிலிருந்து எப்படித் தப்பினோம் என்று அயர்ந்து போய்க் கிடக்கிறார்கள். வந்த புயல் உப்புக் கப்பலைக் கரைத்துவிட்டுப் போகட்டும் ! உயிர் குடிக்கவும் வேண்டுமா?

— பி. எஸ். எம்.

கையளவு
விலையில்,
கைநிறைய
பலன்தரும் ஒரே
பெயிண்ட்



அழகு,
சௌகரியம்
மற்றும்
சிக்கனத்துக்கு—

ஏஷியன் பெயிண்ட்ஸ்

AIYARS-AG4. 398 TM


ஜோரிக்
ஸ்டெயின்லஸ்
க்ஷவரம் செய்துகொள்வதை
இன்பமயமாக்கும்
3 BLADES
Zorrik
STAINLESS
THE SPACE AGE BLADE
Zorrik
STAINLESS
ஜோரிக் ஸ்டெயின்லஸ்—பிளேடு
தொழில்நுட்பத்திலே ஒப்பற்ற முன்னேற்ற
சாதனை புரிந்து, இத் தொழிலை எந்திர
யுகத்திலிருந்து விண்வெளி யுகத்திற்கு
முன்னேற்றிவிட்டது.
ஜோரிக் – விண்வெளி யுக பிளேடு
BMA/Z 269 TM

பெண்ணை நம்புங்கள்



சந்தேகத்தின் அடிப்படையில் ஆரம்பித்து, சந்தேகத்திலேயே வளர்ந்து, பல சம்பவங்களோடு இரு தலைமுறைகளைப் பற்றிக் கூறும் கதை. ஒரு தலைமுறைசெய்த தவற்றை அடுத்த தலைமுறை பழி வாங்கித் திருத்தும் கதை.

முதல் தலைமுறை ஏவி. எம். ராஜன், வசந்தி. ஏழைப் பள்ளிக்கூட உபாத்தியாயர் தாம் பட்ட கடனைத் தீர்க்க வழியறியாது தவிக்கும்போது அவரது பழைய மாணவன் ராமு திடீரென்று தோன்றிக் கடனைத் தீர்த்து வீட்டை மீட்டதுமல்லாமல், அவரது ஒரே பெண் சீதாவின் கரம் பிடித்து அவளது திருமண ஏக்கத்தையும் தீர்த்து வைக்கிறான்.

வில்லன் ஆடியபாதமாக வரும் எம். ஆர். ஆர். வாசு (கொஞ்சம் கத்தல் அதிகம்தான்! என்ன செய்யலாம்!) நன்றாக நடித்திருக்கிறார். தேங்காய் சீனிவாசன் அவருக்கு உதவியாளராக வந்து ஜமாய்க்கிறார்.

ஏவி. எம். ராஜனுக்குப் பழகிப் போன பாத்திரத்தில், பழகிப் போன நடிப்பு. விசேஷமாகச் சொல்ல எதுவும் இல்லை! உபாத்தியாயர் மகள் சீதா. ஆரம்பத்தில் ஒரே ஏக்கம். மணமான பிறகு இன்ப மயக்கம், அப்புறம் கணவனால் கைவிடப்பட்ட துக்கம், கடைசியில் மீண்டும் சொர்க்கம் — ஜெயந்தி நன்றாய் நடித்திருக்கிறார்.

அடுத்த தலைமுறை சிவகுமார், ஜெயசித்ரா. நல்லவேளையாக ஒருவருக்கொருவர் சந்தேகிக்கவில்லை! கலபமாக வில்லனின் மகளைக் காதலித்து, கலபமாகவே திட்டம் தீட்டி, கலபமாகவே ஆடிய பாதத்தைப் பழி வாங்கி, நீண்ட காலமாகப் பிரிந்திருந்த தந்தையையும் கலபமாகவே சந்தித்துச் கலபமாகவே ரசிகர்களிடம் நல்ல பெயரையும் தட்டிக்கொண்டு போய்விடுகிறார், சிவகுமார்!

ஜெயசித்ரா ஆரம்பத்தில் கவர்ச்சிக் கன்னியாகத் தோன்றிக் காதலித்து, ஆடிப்பாடிக் கடைசியில் அடங்கி ஒடுங்கிக் குடும்பப் பெண்ணாக நடிக்கிறார்.

கணவனால் கொடூரமாக வெளியேற்றப் பட்ட மனைவி தெருவில் பரிதாபமாக விழுந்துவிட்ட நிலையில், கணீரென்று குரல் எடுத்துச் சோகமாகப் பாடுவதைப் பார்க்கும்போது எனக்குச் சிரிப்புத்தான் வந்தது. இதையெல்லாம் மாற்றிக்கொள்ளவே முடியாதா? அல்லது படத்தின் நகைச்சுவையோடு அதையும் சேர்த்து விடுவதா?

பி. ராதாகிருஷ்ணனின் கதைக்கு ஆரூர்தாஸ் மிகவும் நன்றாக வசனம் எழுதியிருக்கிறார். பி. வி. சீனிவாசனின் டைரக்ஷன் சில இடங்களில் பாராட்டும்படியிருக்கிறது.

ஒரு பெண்ணை ஆண் நம்புவதோ, ஓர் ஆணைப் பெண் நம்புவதோ ஒருபுறம் இருக்கட்டும். ஒரு படாதிபதி நல்ல படமாக எடுப்பார் என்று நம்ப ஏதாவது வழி இருக்கிறதா, சொல்லுங்கள்!

— காந்தன்



பரிவர்த்தன்

தலைப்புக்கு மாறுதல் என்று பொருள். 'ஏ' சான்றிதழ் பெற்றிருக்கும் இந்தப் படமே ஒரு புது மாற்றம் கண்டிருக்குமோ என்று எண்ணி ஆவலோடு பார்க்கப் போகிறவர்களுக்கு 'ஏ'மாற்றமே எஞ்சி நிற்கும். தோராஹா, ஜூராத், அரங்கேற்றம் ஆகியவை சென்ற சுவடுதட்டிய பாதையிலேயே சென்று சலிப்பை ஏற்படுத்துவதுதான் மிச்சம்.

கணவனை இழந்த ஓர் அன்னைக்கு இரண்டு பெண்கள்; ஒரு பிள்ளை. குடும்பம் நடத்துவது பிரச்னையாகி விடவே, மூத்த பெண் வேலைக்குப் போகும்படியாகிறது. அந்த வேலையும் உடலை விற்றுப் பிழைக்கும் பிழைப்பாகி விடுகிறது. மூத்த பெண்ணாக வரும் மோனிஷா அந்தப் பாத்திரத்தை ஏற்றுப் படத்துக்கு 'ஏ' சான்றிதழ் வழங்கித் தருவதோடு தன் நடிப்புக்கும் 'ஏ ஒன்' சான்று பெறுகிறாள். தன் நிழல் தன் குடும்பத்தைத் தாக்கக் கூடாது என்னும் முறையில் ரசிகர்களின் அநுதாபத்தைப் பெற்று உயிரும் துறக்கிறாள். இந்த அவலத்தை அறிந்து தாய் ஆரம்பத்தில் வெறுத்தாலும், பணத்தைக் கண்ட பின், படித்த பசுவாகி விடுவது ஏற்கத் தக்கதாயில்லை. தாய் விற்ற காசு குறைக்காது என்று குளிர்விட்டுப் போய் இரண்டாவது பெண்ணையும்... சொல்லக் கூசுகிறது -- கட்டோடு சரியில்லை.

ஆனால் இரண்டாவது பெண் தன் வாழ்க்கையில் படிந்துவிட்ட கறையைத் திருமணத்தினால் தூய்மைப் படுத்த முயல்கிறாள்.

இந்தப் பிரச்னைக் கதை துப்பாக்கி முனையிலே தொடங்கித் துப்பாக்கிக்கு வேலை வைக்காமல் முடிந்தாலும் பிரச்னையைப் பிரச்னையாகவே விட்டுச் செல்கிறது!

கணவன் மனைவியாக வரும் ரஞ்ஜித் மல்லிக்கும் தின கௌஸரும் அலட்டிக்கொள்ளாமல் நடித்திருக்கிறார்கள். தாங்களும் உணர்ச்சியைக் கொட்டாமல், ரசிகர்களையும் கிளர்ச்சி கொள்ளச் செய்யாமல் நடிப்பதற்குக் காரணம் டைரக்டரா, கதையா?

ஜோஷிலா



அமர் உணர்ச்சி மிக்கவன். ஒரு பெண்ணின் கற்பைச் சூறையாடப் போனவனைத் தடுக்கப் போய், கொலை செய்யாமலே அவன் கொலைக் குற்றம் சாட்டப்பட்டுக் குற்றவாளியாகிறான். அவன் குற்றவாளி ஆவதற்குக் காரணம் அதே பெண்!

பணம் பத்தும் செய்து பாதாளம்வரை பாயுமாமே! அந்த பலத்தில் கதை காலும் கையும் முளைத்துப் பல முனைகளிலும் திரிந்து விட்டு இறுதியில் ஒரு மாதிரியாக இணைகிறது. கதை கிளை பிரிவதற்கு ஒரு காரணம் குல்ஷன் நந்தா. தமக்கு இயல்பாகக் கைவரும் சம்பவக் கோவைகளை மூச்சைப் பிடித்துக் கொண்டு முடிந்த மட்டில் விரித்துக் கொண்டே போகிறார். இன்னொரு காரணம், தேவ் ஆனந்த், ஹேமமாலினி, பிரான், பிந்து, மதன்புரி, ராகீ, மகேந்திர சந்து என்று நடிகர்களின் பட்டியல் நீண்டு விரிவதாகும். இத்தனை நடி

கச்சே தாகே

அன்பு என்பது மெல்லிய நூலிழைதான். ஆனால் அதன் வலுவில் எத்தனை பெரும் பகையையும் புறம் காணலாம் என்னும் உண்மையைப் படம் பிடித்துக் காட்டும் சித்திரமே 'கச்சே தாகே' என்னும் மெல்லிய நூலிழை.

சம்பல் பள்ளத்தாக்கை நிலைக்களனாகக் கொண்டு எடுக்கப்பட்ட இப்படத்தில் இரு கொள்ளைக் கூட்டத்தினரிடையே பகைமை சித்திரிக்கப்படுகிறது. லாகன் — ரூபா என்னும் இருவர் குடும்பப் பகை காரணமாக ஒருவர் உயிரை ஒருவர் குடிக்கத் திட்டமிடுகின்றனர். எனவே வீர தீரச் செயல்களுக்கு ஒருகுறைவும் இல்லை. இத்தனைக்கும் இடையே சோனு என்னும் பெண் இருவர் வாழ்க்கையிலும் குறுக்கிடுகிறாள். இருவருமே அவளை மனமார நேசிக்கின்றனர்.

ஆனால் அவள் மனத்தைப் பறிகொடுத்திருப்பதோ போலா என்ற மூன்றுமவனிடம். இதை அறிந்த பின் ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக் கொண்டு அவள் நலனுக்காகப் பாடுபடுகின்றனர். அவர்களோடு பகைமையும் அன்பும் கூடப் போட்டியிடுகின்றன. 'அன்பின் வழியது உயிர்நிலை' என்பதை நிலைநாட்டுமிடத்தில் அன்பே அவர்கள் உயிரைக் குடிக்கிறது. ஆனால் ஒரு வேடிக்கை! கதையில் காமுகனாகச் சித்திரிக்கப்பட்டிருக்கும் லாகன் சோனுவின் விஷயத்தில் மட்டும் எப்படி நல்லவனானான்? இக் கேள்விக்கு விளக்கம் கோரினால் கதையின் மெல்லிய நூலிழை அறுந்துவிடும். வெகு தூரத்திலிருந்து தொலை நோக்கி வழியே சோனு — போலா காதலைக் காண்பவர்கள் அவர்களது பாட்டையும் பேச்சையும் கூடக் கேட்கிறார்களே, அது எப்படி?

லாகன் — ரூபாவாக வரும் வினோத் கன்னாவும் கபீர் பேதியும், நன்றாகவே நடித்திருக்கிறார்கள். அவர்களது குதிரைகள் அவர்களைக் காட்டிலும் ஒருபடி மேலாக நடித்திருக்கின்றனவே! கதைப்படி சோனுவாக வரும் மௌஷுமி சாட்டர்ஜியோடு ஒரு சில காட்சிகளில் வரும் உண்மை சோனுவும் ரசிகர்களின் கண்களில் நிலைபெறுகிறார்!

ராஜ் கோஸ்லா தம் டைரக்ஷன் திறமையால் மெல்லிய நூலிழை (கச்சே தாகே)யை அறுக அறுக முடி போட்டிருக்கும் அழகை என்னவென்பது?



கர்களையும் வேலை வாங்க வேண்டாமா டைரக்டர் யஷ் சோப்ரா?

ஆனால் நடிகர்கள் இதே போன்ற எத்தனை எத்தனையோ பாத்திரமேற்றுப் பழகியவர்களானபடியால், தங்களுக்குச் சிரமமில்லாமல் டைரக்டருக்கும் சிரமம் வைக்காமல் சொல்லி வைத்தாற் போல் நடிக்கிறார்கள்.



ஹேமமாலினி சாலினி என்னும் பாத்திரத்தில் எழுத்தாளராக — கவியாக வருகிறார். சுலபமாகக் கதை கேட்டு, கதை பண்ணித் தம் கவர்ச்சியினாலேயே பாத்திரத்தை ஒப்பேற்றி விடுகிறார்.

இந்தப் படத்தில் நடிக்கும் குதிரையும் 'கச்சே தாகே'யில் வரும் குதிரைதானோ? தான் ஏற்ற பாத்திரத்தைத் திறன்பட நடித்திருப்பதைப் பார்த்தால் நடிக்க நடிக்க அதன் நடிப்பே மெருகேறும் என்று தோன்றுகிறது.

இறுதிக் காட்சியில் போலீஸ் அதிகாரியாக இப்திகார் பக்கத்தில் இருக்கும்பொழுதே, சண்டைக் காட்சிகள் அமர்க்களப்படுகின்றன. பிந்துவும் ஹேமமாலினியும்கூட மோதுகிறார்கள்.

போலீஸ் வரும்வரை உணர்ச்சி பெருக்குவதாக நினைத்துச் சண்டைக் காட்சிகளை வளர விட்டிருப்பது, உணர்ச்சியில் பிறந்த கதை உணர்ச்சியற்றுப் போவதையே குறிக்கிறது.

— ரா. வீ.

மிஸ். கல்பனா

கோமகள்

அந்தப் பச்சிளம் மலர்களிலே அவளும் ஒரு மலராக உலவி வந்தாள். மண வாழ்வைச் சுயநலம் என்று மனத்தைத் திசை மாற்றிக் கொண்டவளின் நெஞ்சு நிறைய நிறைந்திருந்தனர் அந்தப் பள்ளியின் சிறுமிகள் அனைவரும். பட்டுக் குஞ்சலங்கள் ஊசலாட, குஞ்சுக் கால்களும், கைகளுமாய் வளையவரும் நூற்றுக்கணக்கான பசலை மேனிகளின் சிரிப்பும், குதிப்பும், ஓட்டமும், ஆட்டமும் எத்தனை அழகு! அதுவும் நீல – வெள்ளைச் சீருடையில் பிரார்த்தனைக்கு நிற்கும்போது நீலக் கடலில், மெல்லத் துளும்பும் வெள்ளலைகளாகத் தோற்றம் தரும் கூட்டம்! குழலோசைகள் ஒருங்கு இணைந்த கோலாகலமான இசை! அந்த வயதில் போதிக்கப்பட்ட ஒழுங்கும், கட்டுப்பாடும் பிரதிபலிக்கும் அமைதி. அந்த நேரத்தில் எப்போதும் கல்பனா மெய்ம்மறந்து போவாள்.

''கல்பனா டீச்சர் குழந்தைகளை அடிக்க மாட்டாள், எத்தனை தப்பு செய்தாலும்...!'' இது அவளுக்கு ஏற்பட்டிருந்த நற்பெயர்.

'மார்ச்சிங்'கில் கால் மாற்றிப் போட்டாலும், அழுக்கு பூட்ஸோ, அழுக்கு ரிப்பனோ அணிந்து வந்தாலும், வகுப்பில் ஈடுபடாமல் பேசினாலும், குறும்புகள் செய்தாலும் நயமாகச் சிரித்தபடியே அவர்களுக்கு அறிவூட்டும் கல்பனாவின் பாணியே தனிதான். எனவே, குழந்தைகள் அவளைப் பயத்தோடு நோக்காது, பரிவோடும், சிரிப்போடும், 'குட்-மார்னிங்' கூறுவார்கள்.

தூக்கிய கொண்டையும், அளவான அணிகளும், தூய்மையான உடைகளுமாய் வளையவரும் கல்பனா டீச்சரின் மற்றொரு சிறந்த அணி மாறாத அந்தப் புன்னகை.

அந்த மழலைப் பூந்தோட்டத்தின் மல்லிகைமலர்களிலே அவளும் ஒரு மலராக உலவி வந்தாள்.

பால்பற்கள் மின்ன, சிந்தும் நகையோடும், 'பாப்' செய்த தலையோடும் அவள் எதிரே வந்து நின்றாள் பாலா. அவள் முகமெல்லாம் மலர்ந்த சூரியகாந்தியைப் போல் ஒரு விகசிப்பு. ''மிஸ்!'' என்று கொஞ்சலாக அழைத்தாள்.

''என்ன பாலா?'' என்று கருணை வழியும் குரலோடு அவளைத் தன் அருகே இழுத்துக் கொண்டாள் கல்பனா.

''இந்தாங்க மிஸ்!'' பாலாவின் கையில் வாழை இலையில் சுற்றப்பட்ட இரண்டு ரோஜாப் பூக்கள் இருந்தன.

''ஓ! தேங்க்ஸ்!'' என்று அதை வாங்கித் தலையில் செருகிக் கொண்டே, ''ஏன் பாலா! உங்க வீட்டில் எல்லாப் பூக்களும் பூக்கின்றனவா? அடிக்கடி ஏதாவது பூ கொண்டு வருகிறாயே?'' என்றாள்.

''ஆமாம், மிஸ்!'' மிஸ்ஸுக்குத் தான் பூ கொண்டு வரும் கர்வமும், பெருமையும் அவள் குரலில் வழிந்தன.

''இந்தா சாக்லேட்!''

கல்பனா தந்த சாக்லேட்டை அவள் எதிரிலேயே பிரித்து வாய்க்குள் அவசரமாக அடக்கிக் கொண்டாள்.

அவள் அவசரத்தைப் பார்த்துச் சிரித்தவாறே தட்டிக் கொடுத்தாள் கல்பனா.

கணகணவென்று மணி அடித்தது. பாலா ஓடி விட்டாள். கல்பனாவும் எழுந்தாள்.

பாலாவின் நினைவு அவளிடம் ஊதுவத்தி மணம் போல் ரம்மியமாக நிறைந்திருந்தது. எல்லாக் குழந்தைகளிடமும் ஒரே மாதிரி அன்பு செலுத்தி வந்திருந்தும், இப்போது இந்தப் பாலா தன் மனத்தில் ஒரு தனி இடத்தைத் தானறியாமல் அபகரித்துக் கொண்டு விட்டாள் என்பது



கல்பனாவுக்குப் புரிந்தது. அவள் தனக்குள்ளே சிரித்துக் கொண்டாள்.

கையில் கத்தை நோட்டுப் புத்தகங்களோடு பள்ளிக்கூடத்தைவிட்டுக் கிளம்பினாள் கல்பனா. சக ஆசிரியைகள் பலரும் தங்கள் கணவன் மார்கள் ஸ்கூட்டரில் வீடு செல்வார்கள். கல்பனாவைப் போல் ஓரிரு ஆசிரியைகளே பஸ்ஸைப் பிடிக்கப் பரபரக்கின்றனர். கல்பனாவுக்கு அந்தப் பரபரப்பும் இல்லை. பள்ளிக்கு வெகு அருகிலேயே வீடு. அவளுக்கும் அன்பு காட்டும் அப்பா, அம்மா இருந்தார்கள் என்பதற்கு அடையாளமாக அவர்கள் விட்டுச் சென்ற ஒரே பிதிரார்ஜிதச் சொத்து அந்த வீடு. மேல் பகுதியை வாடகைக்கு விட்டு விட்டுக் கீழ்ப் பகுதியைத் தன் உபயோகத்துக்கு வைத்திருந்தாள் அவள்.

பூட்டைத் திறந்து இருளோடிக் கிடந்த வீட்டில் வெளிச்சத்தை உண்டாக்கினாள். தனக்காக ஒரு கப் காப்பி தயார் செய்து கொண்டு இரவு உணவுக்கு ஏற்பாடு செய்யும் போது அவளுக்குச் சற்று அலுப்பாகத்தான் இருக்கும். ஆயினும் வேறு வழியில்லை.

குத்து விளக்கேற்றித் தொழுதுவிட்டுப் பள்ளிச் சிறுமிகளின் நோட்டுக்களைத் திருத்த ஆரம்பித்தாள், விரும்பிய உலகுக்குள் அடியெடுத்து வைத்துவிட்ட ஆனந்தத்தை அவள் அடைந்து விடுவாள்.

இதோ மாதவியின் நோட்டு. குண்டு குண்டான கையெழுத்து! அவள் முகத்தில் வண்டுகளாகக் குறுகுறுக்கும் கண்களைப் போலவே....! இதோ பாலாவின் நோட்டு. எழுத்துக்கள் சற்றுக் கோணல் மாணலாக இருக்கும். ஆனால் ஒரு 'ஸ்பெல்லிங் மிஸ்டேக்' விழாது! இந்த வயதிலேயே அவளுக்குச் சொந்தமாக வாக்கியம் எழுத வருகிறது... இது மேரியின் நோட்டு.... இது நார்ஜஹான் நோட்டு....

அவள் வெறும் எழுத்துக்களைச் சரி பார்க்கவில்லை. அவற்றைத் தீட்டிய உள்ளங்களோடு உறவாடினாள். வகுப்பையே மீண்டும் நடத்துவது போன்ற பாவனையில் தன்னை மறந்து லயித்து விட்டாள்.

"மிஸ்!"

"என்ன பாலா?"

"உங்களுக்குக் கல்யாணமாகலியாமே?"

குழந்தை எத்தனை பெரிய கேள்வி கேட்கிறாள்! புன்சிரிப்போடு, "உம்!" என்றாள்.

"மிஸ்!" பாலா தயக்கத்தோடு தொடர்ந்தாள். "உங்களுக்குப் பாப்பா இல்லையா? ஆமாம், மிஸ்! ராத்திரியிலே உங்க கழுத்தைக் கட்டிப் பிடிச்சுக்கிட்டுத் தூங்க ஒரு பாப்பா இருக்க வேண்டாமா?"

"அடி, சமர்த்து!" என்று கூறி அவளை அணைத்துக் கொண்டாள் கல்பனா. "உனக்கு யார் சொல்லித் தந்தது இப்படி எல்லாம்?"

"நானுத்தான் மிஸ் யோசிச்சேன்!"

"உம்! உன் குஞ்சு மனசிலே என்னைப் பற்றி இத்தனை யோசிக்கிறாயே, பாலா! தேங்க்ஸ்!"



'' எனக்கு உங்களை ரொம்ப ரொம்பப் பிடிக்கும் மிஸ் !''

''அப்படியா ? உன்னையும் எனக்கு ரொம்ப ரொம்பப் பிடிக்கிறது !''

''அப்படீன்னு மிஸ்! நீங்க எங்க சித்தப்பாவைக் கல்யாணம் பண்ணிக்குங்களேன். நான் நான் ராத்திரியிலே உங்க கழுத்தைக் கட்டிக்கிட்டுத் தூங்கறேன் !''

கல்பனா அவள் தோள்களைப் பற்றி அணைத்தவாறே, ''பாலா! நீ இப்படி யெல்லாம் பேசக் கூடாது. நீ சின்னக் குழந்தை இல்லையா ?'' என்றாள்.

''சரி, மிஸ் ! இனிமேல் இப்படிப் பேச மாட்டேன். எங்கம்மா வரும் போது இப்படிப் பேசினேன்னு சொல்லாதிங்க மிஸ் !''

''நோ, நோ.... அப்படிப் பண்ண மாட்டேன்......''

'' நான் வரேன் மிஸ் !''

பாலா சென்றதும் கல்பனா தன் மனத்தில் ஏதோ ஒரு புதிய உணர்ச்சி சூழ் கொண்டு பெருக உட்கார்ந்திருந்தாள். ஒரு குழந்தைக்கு இவ்வளவு ஞானமா ? கூடவே பாலாவைப் போன்ற முக ஜாடையுடன் ஒரு கம்பீரமான, இளமை ததும்பும் உருவமும் மனத்துள் நிழலாடியது. சீ! இதென்ன பைத்தியக்காரத்தனம் !

அன்று ஆசிரியர்களும், பெற்றோர்களும் சந்திக்க வேண்டிய நாள். காலாண்டுத் தேர்வுக்குப்பின் மதிப்பெண் அட்டைகள் வழங்கிய பின் நடக்கும் பெற்றோர் — ஆசிரியை கூட்டம்.

''குட்மார்னிங் மிஸ் !'' — பாலா நின்றாள்.

அவள் பக்கத்தில் முகத்தின் மலர்ச்சியும், கண்களின் சிரிப்பும், அரும்பும் இளநகையுமாக ஒரு வாலிபன். நின்றான்.

''என் சித்தப்பா மிஸ் !''

கல்பனாவின் நெஞ்சில் பூ மலர்வது போல் ஒரு சிலிர்ப்பு ஏற்பட்டது.

''குட்மார்னிங் மாடம்!'' என்றான் அவன்.

''குட்மார்னிங். டேக் யுவர் ஸீட் !'' என்றாள் கல்பனா. அவள் குரலில் தடுமாற்றம் ஏற்பட்டது. அதைத் தவிர்க்க முயன்றாள்.

அவன் உட்கார்ந்து கொண்டான். ''வழக்கமாக அண்ணா அல்லது அண்ணி வருவாங்க. அவங்க ஒரு கல்யாணத்துக்கு வெளியூர் போயிருக்கிறாங்க. நான் வந்திருக்கிறேன்.'' அவன் பேச்சில் ஒரு சகஜ பாவம் இருந்தது. ''பாலாவைப் பற்றி ஏதாவது குறைகள் உண்டா ?. வகுப்பில் அவள் எப்படி இருக்கிறாள் ?''

''பாலா புத்திசாலிப் பெண். கொடுத்த பாடத்தைச் சரியாகச் செய்வாள். கிளாஸ் லீடர். முதல் 'ராங்க்' வாங்கியிருக்கிறாளே, முற்றிலும் தகுதியானவள்தான் !''

''பாலா முதல் ரேங்க் எடுத்திருந்தாலும் இரண்டாவது ரேங்க் பெண் இவளைவிட எந்தப் பாடத்திலாவது கூடுதலாக மார்க் வாங்கியிருக்கிறாளா என்று அறிய விரும்புகிறேன்.''

''ஓ, நோ! அப்படியெல்லாம் ஒப்பீட்டுப் பார்த்தால் நன்றாகப் படிக்கிற அந்த இரு குழந்தைகளின் மனங்களுமே புண்படும்.''

அவன் சிரித்துக் கொண்டான். ''தேங்க்யூ மேடம்! உங்கள் மீது குழந்தைகள் ஏன் இத்தனை ஆசை வைத்திருக்கிறார்கள் என்பது எனக்கு இப்போதுதான் புரிகிறது.''

''நான் போயிட்டு வரேன் மிஸ் !'' என்று பாலா அவள் சித்தப்பாவின் கரங்களைப் பற்றியவாறே வெளியேறினாள்.

கல்பனா குறுகுறுப்போடு அமர்ந்திருந்தாள். கடமை உணர்வில் தவறுகிறோமோ என்ற உந்துதலில் அவன் நினைவை உதறிவிட்டு அடுத்து அவளைக் காணக் காத்திருந்த பெற்றோரை அமரும்படி கேட்டுக் கொண்டாள்.

''கல்பனா ! வாட் ஹேப்பண்ட் டு யூ !'' என்று சக ஆசிரியைகள் அவளை ஊடுருவிப் பார்த்தனர்.

மனத்தின் எழிற்கோலம் முகத்தின் ஒளிக் கோலமாகத் தெரிந்தது. ''ஒன்றுமில்லை'' என்றாள் வெட்கச் சிரிப்பில் தன்னை மறைத்துக் கொள்ளும் பாவனையில். வகுப்புக்குச் சென்றாள்.

''மிஸ் ! இந்தாங்க!''

பாலாவின் கையில் வெள்ளை சாமந்திப்பூ!

''தேங்க்ஸ் !'' அதை வாங்கிக் கொண்டாள் கல்பனா.

'' மிஸ் ! இந்தப் பூச்செடியை எங்க சித்தப்பாதான் வைத்தார். அவர்தான் முதலில் பூத்த பூவை உங்களுக்கு எடுத்துப் போய்த் தரச் சொன்னார்......''

'' அப்படியா ?'' குபீரென்று ரத்தம் பாய உடலெல்லாம் சிலிர்க்க நின்றாள் கல்பனா. அவளுக்கு வேண்டிய பதிலைப் பாலா தருகிறாளா ? இல்லை, சாதாரண நிகழ்ச்சிதானா?

கல்பனா அன்று மாலை வீட்டை நெருங்கும் போது கால்கள் தயங்கின. எதிரே அவன் வந்து கொண்டிருந்தான் !

'' ஓ ! உங்கள் வீடு இதுதானா ?'' என்றான் அவன்.

'' ஆமாம். வாருங்களேன் !'' துணிச்சலோடு உரிமை பாவம் காட்டிவிட்டாள்.

அவளைத் தொடர்ந்தான் அவன்.

அவனை உட்காரச் சொல்லிவிட்டுக் காப்பி போட்டுத் தந்தாள்.

''ரொம்ப தேங்க்ஸ் மாடம் ! வீட்டில் ஒருத்தரும் இல்லையா?.... துணை ?''

''எனக்கு நானே துணை !'' அவள் சிரிப்போடு கூறினாள்.

அவன் கண்களில் பூத்திருந்த அமைதிக் குமிழி உடைபட்டு ஓர் அவசரத் தோற்றம் காட்டுவது போலிருந்தது.

'' நீங்கள் தனியாகவே.... பாவம்! நான் இந்தப் பக்கம் வரும்போது இங்கு வருகிறேன்.....'' அவன் குரலில் சகஜ பாவம் குன்றி அபசுரம் ஒடியது போலிருந்தது.

''கல்பனா..... !''

கதவருகே மேல் வீட்டு அம்மாள் நின்றாள்.

'' நான் வரேன்.....'' என்று விடைபெற்றான் அவன்.

அந்த அம்மாள் உள்ளே வந்தாள்.

''கல்பனா! நான் சொல்றதைத் தப்பா எடுத்துக்கமாட்டியே..... !''

''சொல்லுங்க, அம்மா !''

'' இந்தப் பையன் வாக இங்கே எங்கே வந்தான் ?''

''என் வகுப்புப் பெண்ணின் சித்தப்பா




ஆரோக்கியமான ஈறுகளுக்கும் பற்களுக்கும்
DR. SANDOW
TOOTH BRUSH
அது சிக்கனமானது
அது மிக அழகானது
அது நீடித்து உழைக்கக் கூடியது
DR. SANDOW '51'
DR. SANDOW '25'
DR. SANDOW 'Junior'
JAYBEE PLASTIC WORKS, BOMBAY-2 BR.



தலைவலி அல்லது ஃப்ளூவிலிருந்து
விரைவில் நிவாரணம்!
ஸலோஃபென்
வலி நிவாரண மாத்திரை
அமிர்தாஞ்சன் லிமிடெட் தயாரிப்பு
தலைவலி, ஃப்ளூ, பல்வலி, உடல்வலி ஆகியவற்றிலிருந்து ஸலோஃபென் உடனடியாக நிவாரணம் அளிக்கிறது. அது நம்பகமானது. டாக்டர்கள் கையாளும் மருத்துவ முறைப்படி ஸலோஃபென் தயாரிக்கப்படுகிறது.
SALOFEN
SALOFEN
SALOFEN
FDS/AS/1928 TMB

துணுக்கு ஒன்று தகவல் மூன்று

அன்னை வேளாங்கண்ணியின் அருள், குழந்தை கணேசனுக்கு வேண்டியமட்டில் உண்டு.







தகவல் 1: இந்தியாவிலேயே வயதில் இளைய திரைப் படத் தியேட்டர் அதிபர் யார் தெரியுமா?

சென்னை வடபழனியில் உள்ள கமலா தியேட்டர் அதிபர் திரு சி. வள்ளியப்பன்தான்!

மதுரை தியாகராஜர் கல்லூரியில் பி. பி. ஏ. (Bachelor of Business Administration) படித்துக் கொண்டே வள்ளியப்பன் தியேட்டர் நிர்வாகத்தையும் கவனித்துக் கொள்கிறுர்!

வள்ளியப்பனின் தாயார் பெயர் கமலா. தாயின் பெயரை வைத்திருக்கிறுர் தியேட்டருக்கு.

தகவல் 2: வள்ளியப்பனின் இளைய சகோதரன் சிறுவன் கணேசன் பிறந்த தினத்திலிருந்து அவனுக்கு இடது கண்ணிலிருந்து நீர் வடிந்து கொண்டிருந்தது.

ஒரு பிரபல கண் டாக்டர், ''ஐந்து வயது ஆனதும் ஆபரேஷன் செய்தால் குணமாகும். அதைத் தவிர வேறு வழியில்லே'' என்றும் கூறிவிட்டார்.

குழந்தையின் தாய் மனத் துயரைச் சற்று மறக்க, ஒரு நாள் மதுரையில் 'அன்னை வேளாங்கண்ணி' படம் பார்க்கச் சென்றுர். அன்னை வேளாங்கண்ணியின் மகிமையை விளக்கும் சம்பவங்கள் திருமதி கமலாவுக்கு வியப்பூட்டியது. தியேட்டரிலேயே தம் குழந்தையின் கண்ணீர் நிற்க, பிரார்த்தனை செய்து கொண்டார்.

மறுநாள் காலையிலேயே பலன் கிடைத்துவிட்டது! குழந்தைக்குக் கண்ணீர் வருவது நின்றுவிட்டது!

எனவே, சென்னையில் தியேட்டர் கட்டி முடித்தவுடன், 'அன்னை வேளாங்கண்ணி' படத்தை முதன் முதல் திரையிட்டார் வள்ளியப்பன்.

தகவல் 3: தியேட்டருக்கு திரு சிவாஜி கணேசன் வருகை தந்தபோது ''தினமும் நூறு தடவையாவது உங்க தியேட்டரின் பெயரை நான் சொல்லக் கூடியவனுயிற்றே!'' என்றுராம் வேடிக்கையாக. சிவாஜியின் மனைவி பெயர் கமலாவாயிற்றே!

-ஏ. சீனிவாசன்



தியேட்டர் நடத்தும் கல்லூரி மாணவர்.



இவர். இந்தத் தெரு வழியே போனுர். நான் தான் கூப்பிட்டேன்.''

''இவன் ரொம்பப் பொல்லாதவனம்மா! நாங்கள் ராயப்பேட்டையில் இருக்கும்போது என் பெண்ணைக் கலாட்டா செய்தான்னு எங்களவர் இவனை அடிக்கக்கூட இருக்கார். பாரேன், அதனுல்தான் என்னைக் கண்டதும் அவன் அப்படி ஓடறுன்.......''

'' என்ன..... ?''

''ஆமாம்மா! உன்னோட தனியா உன்னே வரானேன்னுதான் நான் வந்தேன். உன் கிட்டே உண்மையைச் சொல்லணுமில்லேயா? தாய் தகப்பன் இல்லாத பெண் யாரிடமும் ஏமாந்து போகக் கூடாதே.....''

கல்பனுவின் மனத்துள் வியாபித்திருந்த அன்புருவம், மாவுப் பொம்மை மழை நீரில் கரைவது போல் ஆகிவிட்டது. சிலிர்ப்புகள் அடங்கிச் சித்திரமாகக் கிடந்தாள்.

ஆயினும் சித்திரமாகச் சமைந்துவிட்ட மனத்தைச் சலனப்படுத்தி உணர்ச்சியூட்ட ஒரு நாளே போதுமானதாக இருந்தது. நெஞ்சில் துணிவும், நேர்மைத் திறனும் மிக்க ஒரு பொறுப்புள்ள ஆசிரியையாக அவள் எப்போதும் போல் வளைய வர ஆரம்பித்தாள். இடையில் ஏற்பட்ட சலனத்தை அவள் அப்படியே விழுங்கி விட்டாள்.

''மிஸ்!'' பாலாதான் அழைத்தான்.

அவள் கையில் பட்டு ரோஜாக்கள்!

பூவை வாங்கி வகுப்பறையிலிருந்த சுவாமி படத்தில் வைத்தாள்.

''மிஸ்....! மிஸ்....! மிஸ்...!'' அவளைச் சுற்றிலும் சிறுமியர் கூட்டம்.

அவள் முகத்தில் கருணை வற்றாத புன்னகை.

அவள் தன் மாணவிகளுக்கு மட்டும் மிஸ் அல்ல.... இனி என்றுமே, எல்லோருக்குமே மிஸ் கல்பனாதானு!


ஓய்வுபெற்ற ஆசிரியர் ஆபிரகாமின் வீடு...

தபால் மூலம் 'தென்னிந்திய கிறிஸ்தவர் சபை' நடத்தும் வேதாகமக் கேள்விகளுக்கு விடை எழுதிச் சென்னை மாநிலத்தின் பல்வேறு இடங்களிலிருந்து மாணவர்கள் அனுப்பி இருந்த விடைத் தாள்களைச் சரி பார்த்துக் கொண்டிருந்த ஆபிரகாம், இருமல் ஒலியைக் கேட்டதும் கடிகாரத்தை நோக்கினார். கால வட்டில் மணி மூன்று எனக் காட்டியதைக் கண்டதும்தான் நோய்வாய்ப்பட்டுப் படுத்த படுக்கையாக இருக்கும் தன் மனைவி பிழூலா 'வேலன்' ஆபிரகாம் வீட்டுக்கு வந்து சேர்ந்தான்..... அந்த வீட்டின் சமையல்காரன் மட்டுமல்ல.... எல்லா வெளி வேலைகளையும் அவன்தான் செய்ய வேண்டும்.....

மருந்து உள்ளே சென்ற மகத்துவத்தில் பிழூலாவின் இருமல் சற்று ஓய்வெடுக்கத் தொடங்கியது.

'' சார்..... போஸ்ட்.....!''

தபால்காரர் அலட்சியமாக விசிறி எறிந்துவிட்டுப் போன உறையை வேலன் எடுத்து வந்து ஆபிரகாமிடம் நீட்டினான். உறையைப் பிரித்த ஆபிரகாம் திடுக்கிட்டார்.



வின் நினைவு அவருக்கு வந்தது. மூன்று மணி நேரத்துக்கு ஒரு முறை அந்த மருந்தையும் மாத்திரைகளையும் விழுங்காவிட்டால் கனன்று வரும் இருமல் அவள் உடலை உலுக்கி எடுத்து விடும்.....

''வேலா...! கொஞ்சம் வெந்நீர் கொண்டு வா......''

சமையல்கட்டில் மதியச் சாப்பாடு முடிந்த களைப்பில் சற்றுக் கண்ணயர்ந்திருந்த வேலன் பதறியடித்துக் கொண்டு கெட்டிலில் இருந்த வெந்நீரைக் கிளாஸ் டம்ளரில் ஊற்றி எடுத்து வந்தான்....

ஒடித்துப் போட்ட நாராகக் கிடந்த பிழூலாவின் தலையைச் சற்றுத் தூக்கித் தாங்கி மாத்திரைகளையும் மருந்தையும் ஊட்டினார் ஆபிரகாம்..... ஆபிரகாமின் தேவைகளை அறிந்து பணிவிடை செய்யும் பிழூலா ஓராண்டு காலமாக கடும் இருமலை நோயாகத் தழுவிக் கொண்டு துயருற்ற போதுதான் அன்புள்ள ஐயாவுக்கு,

தோத்திரங்கள்..... ஆண்டவன் கிருபையால் எங்கள் பள்ளி மாணவர்கள் பூரண சுகத்துடன் இருக்கின்றனர். வழக்கம்போல் இந்த ஆண்டும் நம் பள்ளி மாணவர்கள் கிறிஸ்துமஸ் விழாவைச் சிறப்பாக நடத்த எண்ணியுள்ளனர். இந்தப் பள்ளிக்காகவே உழைத்து இருபத்திரண்டு ஆண்டு காலம் ஆசிரியப் பணி ஆற்றிய உங்களைக் கிறிஸ்துமஸ் விழாவுக்கு மாணவர்கள் சார்பாக அழைக்கிறேன். எனவே நீங்கள் மறுக்காது, உலகின் அசைவுகளைப் பார்க்க இயலாத, பார்வை இழந்த இப்பள்ளி மாணவர்களின் கிறிஸ்துமஸ் தாத்தாவாக இருந்து விழாவைக் கொண்டாட அழைக்கிறோம்.....''

கடிதம் அம்பாசமுத்திரத்தை அடுத்துக் கருணை ஆறு உற்பத்தியாகும் சிவசைலமலை அடிவாரத்தில் அமைந்துள்ள 'அன்னை மேரி குருடர் பள்ளி' நிர்வாகியிடமிருந்து வந்திருந்த

தது..... கண்களை இழந்தும் இழப்பு உணர்ச்சி தெரியாதவாறு வளர்ந்து வரும் அந்தச் சின்னஞ்சிறு உள்ளங்களுக்கு இதுவரை கல்வி புகட்டி வந்தவர்தான் ஆபிரகாம்.... ஆனால் இன்று அவர் கிறிஸ்துமஸ் தாத்தாவாக இருக்க வேண்டும். சுமார் இருநூறு மாணவ மாணவியர்கள் படிக்கும் அந்தப் பள்ளியின் மொட்டுகளுக்கு இவர் கிறிஸ்துமஸ் தாத்தாவாக மட்டும் இருந்தால் போதுமா..? அவர்களுக்குப் பரிசாகப் பேனா... ஜாமெட்ரி பாக்ஸ்.... இப்படி விலை குறைந்த பொருட்களாகத் தேர்ந்தெடுத்தாலும் குறைந்தது ஐந்நூறு ரூபாயாவது வேண்டுமே... அந்தப் பணத்தைக் கொடுக்குமாறு பள்ளி நிர்வாகியைக் கேட்க முடியுமா...? அவ்வளவு பணத்துக்கு ஆபிரகாம் எங்கே போவார்? அவர் ஓய்வு பெற்றதும் கிடைத்த பணத்தில் செலவழித்தது போக பாங்கியில் மீதமிருப்பது... ஐந்நூறே ரூபாய்....

அந்த ஐந்நூறு ரூபாயைத் தொடாது விட்டு வைக்க வேண்டிய அவசியம்...... சென்னை பெரிய மருத்துவமனையில் பியூலாவைக் காண்பித்துச் சிகிச்சை செய்வதற்காகத்தான்.... கிறிஸ்துமஸ் முடிந்ததும் பியூலாவைச் சென்னைக்கு அழைத்துச் செல்ல அவர் திட்டம்.... அதற்குள் இப்படியொரு சோதனையா?

''ஐயா...! கடிதத்தைப் படிச்சதும் ஏன் அப்படியே இடிஞ்சு போய் உட்கார்ந்திட்டீங்க.....?''

வேலன் அவர் சிந்தனையைக் கலைத்தான். பள்ளியிலிருந்து வந்த அழைப்பை அவனுக்கு விவரித்த ஆபிரகாமைப் பியூலா 'ஏங்க' என்று அழைக்க, அவர் அவள் படுக்கையின் அருகில் சென்றார்.

''உங்கள் தயக்கம் எனக்கும் புரியுதுங்க! நான் கர்த்தரோட சீக்கிரம் போய்ச் சேர்ந்துடணுமுன்னு அவரே விரும்பறப்போ நீங்க



அந்த விருப்பத்துக்குத் தடை போட முடியுமா? மிச்சமிருக்கிற ஐந்நூறு ரூபாயைக் கண் தெரியாத குழந்தைகளுக்குப் பரிசாகக் கொடுக்கிறப்போ அதுங்க அடையற மகிழ்ச்சியே எனக்கு அமைதியைக் கொடுக்கும். அது போதுங்க, 'ஆமென்' என்று என் ஆத்மா கூற....!'' திக்கித் திணறித் தன் உள்ளக் கிடக்கையை வெளியிட்டாள் பியூலா....

சிறிது நேரச் சிந்தனைக்குப் பின்பு ஆபிரகாம் பியூலாவின் மருத்துவச் செலவுக்காக வைத்திருந்த பணத்தை அன்னை மேரி குருடர் பள்ளி மாணவர்களின் மகிழ்ச்சிக்குச் செலவிடத் துணிந்தார்....

கிறிஸ்துமஸ் முடிந்தது...

கிறிஸ்துமஸ் தாத்தாவாக இருந்து அவர் கொடுத்த பரிசைக் கைவிரல்களால் தடவிப் பார்த்து முகத்தில் மகிழ்ச்சி ரேகைகளை ஓடவிட்ட அந்தப் பிஞ்சு மனங்களின் பூரிப்பின் முன் அவருடைய ஐந்நூறு ரூபாய் ஐந்து பைசாவாகத் தோன்றியதில் வியப்பே யில்லை.

இரட்டை மாட்டு வண்டி ஒன்றில் ஆபிரகாமை அழைத்து வந்து கொண்டிருந்தான் வேலன். வண்டியினுள் அமர்ந்தவாறே ஆபிரகாம் பைபிளில் ஆழ்ந்து கொண்டிருந்தார்.....

மலைப் பாதையானதால் வாகவும் பிறழாது காளைகளைச் சீராக விரட்டிச் சென்ற வேலன் திடீரென்று வண்டியை நிறுத்தினான்.....

''என்ன! வேலா....! வண்டியை நிறுத்திட்டே....... ''

'' ஐயா.... இதோ கீழே பாருங்க...ஒரு மணிப் பர்சு கிடக்குது.....!''

'' ஐயோ.... யாருடைய பணமோ....?''

கேட்பாரற்றுக் கிடந்த பர்சை எடுத்து ஆபிரகாமிடம் நீட்டினான் வேலன். பர்சைப் பிரித்தார் ஆபிரகாம்....! என்ன விந்தை ? எண்ணி வைத்தாற்போல் அதில் ஐந்நூறு ரூபாய் இருந்தது !

''அம்மா உடம்பைக் கவனிக்க வைச்சிருந்த பணத்தைக் குருட்டுப் பிள்ளைகளுக்குச் செலவழித்துவிட்டதை அறிந்துதாங்க.... அந்த முருகன் இப்படி உங்களுக்குப் பணம்கொடுத்திருக்கான்'' மகிழ்ச்சியோடு கூறினான் வேலன்.

ஆபிரகாமின் கண்கள் பனித்தன. அந்த ஐந்நூறு ரூபாயைக் கொடுத்தது முருகனா? அல்லது இயேசுவா ?

ஒரு வாரம் உருண்டோடியது !

ஆபிரகாம் பியூலாவைச் சென்னைக்கு அழைத்துச் சென்று விட்டார். பியூலா இப்பொழுது சென்னை மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகிறாள்.... ஆபிரகாமின் வீட்டைக் கவனித்துக் கொள்வதற்காக 'வேலன்' சென்னை செல்லவில்லை.....

நேரம் போகாத காரணத்தால் வெளித் திண்ணையில் அமர்ந்தவாறே சாலையில் போய்க்கொண்டும் வந்து கொண்டும் இருக்கும் மனிதர்களைப் பார்த்துக்கொண்டிருந்தான்வேலன்.

''என்னப்பா..... வேலா....'' என்ற குரல் கேட்டுத் திரும்பினான்..... அங்கே கையில் பெரிய பார்சலோடு நின்று கொண்டிருந்தவன் ஜவுளிக்கடை சலீம்.... வேலனின் பால்ய சிநேகிதன்..... இப்பொழுது அந்த ஊரிலே பெரிய ஜவுளிக் கடையின் முதலாளி.

''வா.... சலீம்..... என்ன விஷயம் ?''

'' என்னப்பா நீ... உன்னை எங்கெல்லாம் தேடறது....? மதுரையிலே இருக்கிற உன்னுடைய ஒரே பெண்ணுக்குப் பட்டுப் புடவையும் அவள் கணவனுக்கு ஜரிகை வேஷ்டியும் வாங்கிக் கொடுக்கணும்..... இந்த வருஷம் பொங்கலுக்குக் காஞ்சிபுரத்துக்குச் சரக்கு வாங்கப் போறப்போ நல்லதா வாங்கிட்டு

ஃப்யூராடான் உபயோகித்தால் அதிக நெல் விளைச்சல்

டாடா ஃபைஸன் ராலிஸ் வழங்கும் புதிய ஃப்யூராடான் 3ஜீ குருணைகள் நெற்பயிரைத் தாக்கும் பூச்சிகளைக் கொல்லுகின்றன இவை பயிர் முழுவதும் பரவி செயலாற்றுவதோடு, அதிக பச்சையான நெல்லைத் தருகின்றன. மற்ற பூச்சிக் கொல்லிகள் தருவதைவிட ஹெக்டேருக்கு 3 மெட்ரிக் டன்னுக்கும் அதிகமாக விளைச்சல் தருகின்றன.

உலகெங்குமுள்ள நெற்பயிர் விளையும் பிரதேசங்களில் மிகச் சிறந்த பூச்சிக் கொல்லி என்று போற்றப்படுகின்றன, ஃப்யூராடான் 3ஜீ குருணைகள். இவை பயிர் முழுவதும் பரவும் நச்சியல்பு கொண்டவை. இவற்றை நிலத்திலும் நெல் வயலிலுள்ள நீரிலும் போட்டால், வேர்கள் மூலம் பயிர்கள் அவற்றை உறிஞ்சி, பயிர் முழுவதும் பரப்புகின்றன. இதனால் இந்தப் பயிரைக் கடித்து மெல்லும், துளைக்கும் மற்றும் சாற்றை உறிஞ்சும் பூச்சிகள் கட்டுப்படுத்தப்படுகின்றன.

உங்கள் நெற்பயிருக்கு சிக்கனமான புதிய முறை, அதாவது விதைகளை/ நாற்றுக்களைத் தோய்த்து எடுக்கும் முறைபற்றி உங்கள் வியாபாரியைக் கேளுங்கள். அதை ஒரு முறை கையாண்டு பாருங்கள். வியப்பூட்டும் பலன்களைக் கண்டு நீங்கள் அதிசயிப்பீர்கள்.

வியாபார விவரங்களுக்கு எழுதுக:
ராலிஸ் இந்தியா லிமிடெட்
ஃபெர்டிலைசர்ஸ் & பெஸ்டிசைட்ஸ் டிவிஷன்,
21, ரேவின் ஸ்ட்ரீட்,
பம்பாய்


மற்ற இடங்கள்: சென்னை, கல்கத்தா, லக்னோ

TATA FISON RALLIS

விசேஷ சிறப்பம்சங்கள்:

ஃப்யூராடான் 3ஜீ குருணைகள் வேளாகத் தூவப்படும் பூச்சிக் கொல்லிகளை விடச் சிறந்தவை; மிகவும் பயனுள்ளவை.

- நெற்பயிரைத் தாக்கும் தண்டு துளைப்பான், தத்துப் பூச்சி, ஆனைக்கொம்பன், அசிக்கும் பேன் ஆகிய பெரும்பாலான பூச்சிகளைக் கட்டுப்படுத்துகின்றன
- விசேஷ கருவிகளின் உதவியின்றியே கையாலேயே இந்த மருந்தை எளிதில் பத்திரமாகப் போடலாம்.
- கடித்து மெல்லும் பூச்சிகளையும் சாற்றை உறிஞ்சும் பூச்சிகளையும் கட்டுப்படுத்துகின்றன.
- பூச்சிகளை விரைவில் கொல்வதற்காக பயிர் முழுதும் உடனடியாகப் பரவி விடுகின்றன.
- இக் குருணைகளை மழை அடித்துச்செல்ல முடியாது. நேரடிப் மருந்துகளைவிட நீண்ட காலப் பாதுகாப்புத் தருகின்றன.
- தனியே மணலில் மருந்து [illegible] செய்யாது.
- இவை பயிரை அழிக்கும் பூச்சிகளை மட்டுமே பாதிக்கும்; பயிருக்கு சாதகமான பூச்சிகளுக்குத் தீங்கு செய்யாது.



டாடா ஃபைஸன்
தயாரிப்பு

fmc furadan®
IS A REGISTERED TRADEMARK OF FMC CORPORATION

PATENT NUMBER 97323 OF FMC CORPORATION

அதிக நெல் விளைச்சல் பெற...ஃப்யூராடான் 3ஜீ குருணைகள்

O BM-0275 TAM







□ இந்து சமய மாணவர் மன்றம், அதன் திருவல்லிக் கேணி கிளையின் ஆதரவில் அண்மையில் கபாலி ஆலயத்தில் அபிராமி அந்தாதிப் போட்டி நடத்தியது. நீதிபதி ஸ்ரீ கிருஷ்ணசுவாமி ரெட்டியார் வெற்றிபெற்ற மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கினார்.

□ ராணுவப் படைகளின் இருபத்திரண்டாவது கூடைப் பந்தாட்டப் போட்டி சென்னை எழும்பூர் நகரசபை மைதானத்தில் மின் விளக்கொளியில் நடந்தது. மத்தியப் படை வெற்றி வாகை சூடியது. அர்ஜுனப் பரிசு பெற்ற மத்தியப் படை காப்டன் நரிந்தர் அவர்களுக்கு வெற்றிக் கோப்பையைப் பிரிகேடியர் டி. எஸ். லிண்டின் மனைவியார் வழங்கினார்



St.Lucia 5.

□ 1973 கிறிஸ்துமசை ஒட்டி வியன்னா மியூசியத்திலுள்ள புனித ஓவியங்களிலிருந்து ஜே. ஈ. கூட்டர் தயாரித்துள்ள தபால் தலைகள்.

வான்னு சொன்னதை நீ மறந்துட்டாலும் நான் மறந்துடலேப்பா... உனக்கு உறவுன்னு சொல்லிக்க இருக்கிற ஒரே உயிரை நீ எப்படி மறந்தே..... சரி.... சரி... இந்தப் பார்சலைப் பிடி..... பட்டுப் புடவையும் ஜரிகை வேஷ்டியும் இருக்கு... விலே ஐந்நூறு ரூபாய்....''

''என்னை மன்னிச்சுடு சலீம்... இப்போ என்னிடம் பணம் இல்லே.....''

''வேலா...! நீயும் நானும் சின்ன வயசிலே, அரை மணி நேரமா கல்லெறிஞ்சதாலே விழுந்த ஒரே மாவடுவை ஆளுக்குப் பாதியா பிட்டுத் தின்னலேயா.... நீ நம்பினு நம்பு... நம்பாட்டா போ.... ஒவ்வொரு வருஷமும் எந்தப் பண்டிகைக்கு துவுனிகள் கொள்முதல் செய்தாலும், செய்து வந்த பிறகு முதன் முதலில் ஒரு பட்டுப் புடவையும் ஒரு சரிகை வேஷ்டியும் யாருக்காவது, என் கையாலேயே இனமாக் கொடுத்த பிறகுதான் காசு கொடுத்து வாங்கிறவங்களுக்கு விக்கிறது வழக்கம்.... அது போல் வர்ற பொங்கலுக்கு இது என் அன்பளிப்பு... நான் வர்றேன்...!''

வேலனின் கைகளில் பார்சலைத் திணித்து விட்டு அமைதியாகச் சென்றான் சலீம்..... அவன் செல்லும் திசையையே பார்த்துக் கொண்டிருந்த வேலனின் கண்களில் நீர்த் துளிகள் பனித்தன.....

பிலூலாவின் மருத்துவச் செலவுக்கு வைத்திருந்த ஐந்நூறு ரூபாயை ஆபிரகாம் குருடர் பள்ளி மாணவர்களுக்காகச் செலவழித்துவிட நேர்ந்ததை எண்ணி, தன் மகனுக்கும் மருமகளுக்கும் பொங்கலுக்குப் புதுத் துணிகள் வாங்குவதற்காக வைத்திருந்த பணம் ஐந்நூறு ரூபாய்களை அவருக்குக் கொடுத்து விட நினைத்தான் வேலன். ஆனால் தான் கொடுத்தால் ஆபிரகாம் வாங்கமாட்டார் என்று எண்ணிக் குருடர் பள்ளியிலிருந்து இரட்டை மாட்டு வண்டியில் திரும்பும் வழியில் தான் கொண்டு வந்திருந்த பர்சை நழுவ விட்டுவிட்டுக் கீழே கிடந்தது என்று கூறி அதை ஆபிரகாமிடம் எடுத்துக் கொடுத்தான். இப்பொழுதோ சலீம் வாயிலாக வேலன் என்ன காரணத்துக்காக ஓராண்டு காலம் சிறுகச் சிறுகப் பணம் சேமித்து வந்தானே அது நிறைவேறி விட்டது....

அதை நிறைவேற்றியது ஆபிரகாமா...? வேலனா....? சலீமா...? ஏகவா...? முருகனா? அல்லாவா?

வேலனுக்குப் புரியவில்லை.



பருத்தியிலே விளைந்திடும் கற்பனைகள் அற்புதமோ அதி அற்புதம்
மோஸ்தர்கள்
நாகரீகமான பிரிண்டுகள் ... மதிமயக்கும் நெசவுநயம்...
விரும்பித் தேர்ந்தெடுக்க விதவிதம்.
இயற்கைச் சிறப்பிலே இணையற்றது பருத்தி.
ஸெஞ்சுரி – 100% பருத்தித் துணிகள்
தி செஞ்சுரி ஸ்பின். அண்டு. மான்யு. கம். லிமிடெட், பம்பாய்-400 025
ADROIT/CM/534 P/TAM



இருட்டு மனை*

மகரிஷி

நான்காம் அத்தியாயம்

"அங்கே என்ன தேடுகிறீர்கள்?''

பாஸ்கரன் திடுக்கிட்டுத் திரும்பினான். நிலைவாயிற்படியில் சாந்தா நின்றாள்.

''ஒன்றுமில்லை... ஒன்றுமில்லை....'' என்று நகைத்தான் பாஸ்கரன்.

இதற்கு மேல் அவனிடம் கேள்விகள் கேட்க அவளுக்கு அவ்வீட்டிலுள்ள உறவு இடம் தரவில்லை. பாஸ்கரன் மதுராம்பிகையின் மகன்.... நான்..?

அவன் இங்கே எதையும் தேடலாம்.

காலையில் அவள் எந்தப் பெட்டியில் காத்யாயினியின் கையெழுத்துக்களை உடைய மணியார்டர் ரசீதுகளைப் பார்த்தாளோ, அதில்தான் அவனும் எதையோ தேடினான்.

அவன் தேடிய விதம் அவளுக்குச் சிறு சந்தேகத்தை உண்டாக்கியதால், அக்கேள்வியைக் கேட்டாள். இல்லையென்றால் அக்கேள்வியைக் கேட்க வேண்டிய தூண்டுதல்கூட இருந்திருக்காது.

கேட்டுவிட்டு அவள் அப்பால் போய் விட்டாள்.

மதுராம்பிகை முன் ஹாலில் அமர்ந்திருந்தாள்.

சில நாட்களாகவே மதுராம்பிகை உற்சாகமாகக் காணப்பட்டாள். பாஸ்கரனின் சகஜமான வருகை, பழக்கம், அவனை எடுத்துக் கொண்ட உரிமை, தயக்கமும் வெட்கமும் உடலைக் கவ்வ அவன் தன் அருகில் வந்து நிற்பது எல்லாமே அவளுக்கு நிறைவைத் தந்தன. வாழ்நாளில் இது நாள் வரையில் கிடைக்கப் பெறாத ஏதோ ஒன்று கிடைத்துவிட்ட பூரிப்பு.

இப்பொழுதும் அதே பூரிப்புத்தான் முகத்தைப் பூரணமாக ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது. பிரம்பு நாற்காலியில் அமர்ந்து ராஜாஜியின் மகாபாரத ஆங்கில நூலைப் படித்துக் கொண்டிருந்தாள்.

சாந்தா முன் ஹாலுக்கு வந்தாள். சில விநாடிகள், மதுராம்பிகையின் உற்சாகமான முகத்தைத் தூரத்தில் நின்றே கவனித்தாள். இந்த உற்சாகத்தைக் கலைக்க அவள் விரும்பவில்லை. உள்ளே போய் விட்டாள்.

அன்று நடந்த டைரக்டர்ஸ் போர்டு கூட்டத்துக்குப் பிறகுதான், மதுராம்பிகை எவ்வளவு சிறந்த நிர்வாக ஆலோசகர் என்பதைப் புரிந்துகொண்டு பிரமித்தாள் சாந்தா. கம்பெனியின் வருங்கால உற்பத்தித் திறனைப் பெருக்குவது பற்றியும், லட்சிய இலக்கு பற்றி எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் அவள் கூறிய யோசனைகள் எவ்வித மாறுபட்ட கருத்துக்களுக்கும் இடமின்றி, அப்படியப்படியே ஏற்கப் பட்டதைக் கண்டு சாந்தா வியந்தாள்.

பாஸ்கரன் தன் அறையில் படுத்துக் கொண்டிருந்தான். அவன் அருகில் சென்று அவனை ஒரு முறை உற்றுப் பார்த்தாள் மதுராம்பிகை. வேகமாகச்



சுற்றிய மின்விசிறியின் ஓட்டத்தை மட்டுப்படுத்திவிட்டுக் கதவைச் சாத்தியபின் வெளியே வந்தாள்.

டைரக்டர்ஸ் போர்டு கூட்டத்துக்கு அட்வகேட் சந்தானம் வந்திருந்தார். மதுராம்பிகையுடன் அவர் அதிகம் பேசவில்லை. கம்பெனிக் கூட்டம் தொடங்குவதற்கு முன்னால் அசெம்பிளி ஹாலில் கையில் பைல்களுடன் நின்றபோது மதுராம்பிகை உள்ளே வந்தாள்.

சந்தானத்தைப் பார்த்ததும் மதுராம்பிகை சம்பிரதாயத்துக்காக வரவேற்றுவிட்டுக் கூட்டத்தில் பேசப்பட வேண்டிய விஷயங்கள் பற்றித் தான் எடுத்த குறிப்புக்களைச் சரி பார்ப்பதில் முனைந்துவிட்டாள். அவர்தான் அருகில் வந்து வேலைகளைப் பற்றி விசாரித்தார். இடையிடையே, சில கேள்விகளையும் கேட்டார். தன் கவனத்தைத் திருப்பாமல், தலையை மட்டும் நிமிர்த்தி, அவள் பதில் கூறினாள். எண்ணி வைத்தாற் போல் கேள்விகள். அதே மாதிரியான பதில்கள்.

பிறகு, கூட்டம்.

முடிவு, விடைபெறல்....

“இவள் ரொம்பவும் சிடுசிடுக்கிறாள். படித்துவிட்டுச் சும்மா உட்கார்ந்திருப்பதென்றால் முடியவில்லையாம். 'நான் இப்படியே இருந்தால் பைத்தியம் பிடித்துவிடும்' என்கிறாள். இவளுக்கு ஏதேனும் வேலை இருந்தால் சொல்லுங்களேன்.....”

காத்யாயினி அட்வொகேட் சந்தானத்திடம் ஒரு முறை கூறினாள்.

சந்தானம் சாந்தாவை நிமிர்ந்து பார்த்துவிட்டு நகைத்தார்.

அவர் மேல் அவளுக்கு அளவற்ற அன்பு உண்டு. மரியாதை உண்டு. அவளுடைய படிப்புக்கு அவர் நிறைய உதவியிருப்பதாகக் காத்யாயினி கூறுவாள். பல தடவைகள் பணம் தேவைப்படும் போதும், கல்லூரி பீஸ் கட்ட நேரும் போதும் சந்தானத்திடம் சென்று பணம் பெற்றுக் கொண்டு வந்ததாகக் கூறியிருக்கிறாள்.

உடல் நலம் சரியில்லையென்றால் உடனே டாக்டரை வீட்டுக்கு அனுப்பி விடுவார். விசேஷமான நாள் கிழமைகளில், அவரிடமிருந்து நல்ல புடவைகள் காத்யாயினிக்கும் சேர்ந்தே வரும். 'என் பெண்ணுக்கு எடுத்தேன், அதோடு சாந்தாவுக்கும் எடுத்தேன்' என்று நகைகள், கடிகாரம், விலை உயர்ந்த காலணி, உல்லன் சால்வைகள்... அதற்கெல்லாம் ஓர் அளவே கிடையாதே !

இவர் என்ன இப்படி இருக்கிறார்? இவர் அன்பை என்னவென்று கணிப்பது ?

கல்லூரி பிரின்ஸிபால் முன்பும், எதிர்பாராதவிதமாக அவர் தம் நண்பர்களுடன் இருக்கும்போதும் சந்திக்க நேர்ந்துவிட்டாலோ, 'ஷி இஸ் மை டாட்டர்....' என்று எவ்வளவு அன்

பொழுக, ஒரு பரிசுத்தமான பாசத்துடன் அறிமுகப்படுத்துவார்.

காத்யாயினி வேலைக்கென்று சொன்னவுடன், "ஏன் இந்த இடம், காத்யாயினி, சந்தானம், யாரையும், எதையும் பிடிக்கவில்லையா?" என்றார்.

"ஆமாம். அவளுக்கு என்னைப் பிடிக்கவில்லை. 'இந்தக் கிழட்டு நச்சிலிருந்து விடுபட்டால் போதும்' என்று சலித்துக் கொள்கிறாள்" என்றாள் காத்யாயினி.

"அப்படியா?"

"ஆமாம் சார்... எனக்கு இந்த இடம் சிறை மாதிரியான எண்ணத்தையே உண்டாக்குகிறது."

"ஆல்ரைட்...ஆல்ரைட்...உனக்கு ஒரு நல்ல வேலைக்கு ஏற்பாடு செய்கிறேன். அதற்காக, எதையும் நீ சிறை என்று எண்ண வேண்டாம். பெண்களுக்கு ஒவ்வொரு பருவத்தில் ஒவ்வொரு சூழ்நிலை பிடிக்கும். அது வயது செய்யும் கோளாறு. இல்லையா... காத்யாயினி! சிறு வயதில் தாய் தந்தை. பள்ளிப் பருவத்தில் தோழிகள். குமரிப் பருவத்தில் தனிமை. பிறகு புருஷன், தன் வீடு, தன் குழந்தைகள், பிறகு..."

"எனக்கு இப்பொழுது ஒரு நல்ல வேலை பிடிக்கும்."

"பெங்களூர் போகிறாயா? நல்ல வேலை ஒன்று இருக்கிறது. அலுவலகம் மல்லேசுவரத்தில். சிமெண்ட் ஸ்லாப், ஷீட்கள், வீடு கட்ட உபயோகிக்கும் இதர சிமெண்ட் கான்க்ரீட் பொருள்களை உற்பத்தி செய்யும் கம்பெனி. திருப்தியான சம்பளம். கொஞ்ச நாட்கள் பேயிங் கெஸ்டாக ஒரு வீட்டில்



விட்டுப் பிறகு காத்யாயினியை அழைத்துக் கொள்ளலாம்.''

''சரி. ஏற்பாடு செய்யுங்கள். காத்யாயினியையும் ஒரு வார்த்தை கேட்டு விடுங்கள். தன்னிடம் கேட்கவில்லை; தன்னை மதிக்கவில்லை என்று ஏற்கனவே ஒரே புலம்பல்.''

''என்னை எதற்காகக் கேட்க வேண்டும்? உன் விருப்பம் எப்படியோ அப்படியே செய்யலாம்.''

"அட்வகேட் சந்தானம் வாசலில் நின்று பேசிக் கொண்டிருந்து விட்டுப் போய் விட்டார். நீ தூங்கியிருப்பாய் என்று எழுப்பவில்லை.'' மதுராம்பிகை பின்னால் நின்று கொண்டு பேசினாள். அவள் கையில் காப்பி இருந்தது. அதை ஆற்றிச் சாந்தாவிடம் நீட்டினாள். காலை நேரத்து அந்தப் பரிவு அவள் நெஞ்சை நெகிழ வைத்தது.

''காத்யாயனியை இங்கே உடனே அழைத்துக் கொண்டு வர ஏற்பாடு செய்ய வேண்டும். அதோடு...'' என்று சாந்தா தயங்கினாள்.

''சொல்லேன். ஏன் தயக்கம்?''

''வேறு வீடு பார்க்க வேண்டும்.. பாவம் காத்யாயனி. அவளுக்கு என்னை விட்டால் பாதுகாப்புக்கும், ஆதரவுக்கும் யார் இருக்கிறார்கள்? எவ்வளவு தான் அவள் பேரில் நான் சலித்துக் கொண்டாலும், அவள் என் தாயார் மாதிரி. அநாதையான என்னை எடுத்து வளர்த்து, ஆளாக்கிப் படிக்க வைத்து.. அடேயப்பா! எவ்வளவு பெரிய நிதியை எனக்குத் தேடித் தந்திருக்கிறாள்!''

மதுராம்பிகை சாந்தாவின் நீண்ட கூந்தலை வருடினாள் புன்முறுவலுடன்.

''உன்னுடைய வேதனை எனக்குப் புரிகிறது. அதற்கான ஏற்பாடுகளைச் செய்யலாம். அவளை இங்கே வரவழைப்பதில் ஒரு சிக்கல் இருக்கிறது. அந்தச் சிக்கலை எப்படித் தீர்ப்பது என்பது பற்றித்தான் நான் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன்.''

''காத்யாயனி இங்கே வருவதில் உங்களுக்கு என்ன சிக்கல் இருக்கிறது?''

மதுராம்பிகை இதற்குப் பதில் ஏதும் கூறவில்லை.

சாந்தா திரும்பிப் பார்க்கும்போது, மதுராம்பிகை உள்ளே போய்க் கொண்டிருந்தாள்.

"உனக்கும் ஒரு வேலை வேண்டுமா? எதற்கு?'' — மதுராம்பிகை கேட்டவுடன் பாஸ்கர் தாயாரைப் பார்த்து வெட்கத்துடன் நின்றான்.

"அவர் என் எதிரி அல்ல!"

பி. ஐ. டி. எதிர்ப்பு இயக்கத்தை ஒருவிதமாக முடித்துக் கொண்டு ராஜாஜி அவர்கள் ஆட்சியில் ஆதரவு இயக்கத்தை ஆரம்பித்திருந்த நேரம். ஒரு நாள் சொற்பொழிவு மயிலாப்பூர் சீனிவாச சாஸ்திரி மண்டபத்தில் நடந்தது. ராஜாஜி தமது பேச்சை ஆரம்பித்தது முதல் முன் வரிசையில் அமர்ந்திருந்த நடுத்தர வயது ஆசாமி ஒருவர் அடிக்கடி எழுந்து குறுக்குக் கேள்வி கேட்டவாறு இருந்தார். அவையில் இருந்தவர்கள் அவரை அடக்கி அமர்த்த முற்பட்டபோது ராஜாஜி அவர்களைச் சமாதானப்படுத்திக் கூறினார்: "இங்கே இருப்பவர்கள் கேள்வி கேட்பவரை எனது எதிரியாகக் கருத வேண்டாம். அவர் என்னுடைய நெடுநாள் நண்பர். கடந்த இருபது வருஷங்களாக என்னுடைய கூட்டங்களுக்கு வந்து இப்படிக் கேள்வி கேட்பது அவருடைய வழக்கம். அவரைத் தடுக்காதீர்கள்." கூட்டம் முடிந்ததும் மக்கள் திரள் அந்த நபரைச் சூழ்ந்து கொண்டு தாக்கத் தொடங்கியது. ராஜாஜியே அவரை நெருங்கி அணைத்தவாறே வீதிக்கு இட்டுச் சென்ற காட்சி எல்லோரையும் பிரமிக்க வைத்தது.





எதிர்பாராத மகிழ்ச்சி

யாரும் எதிர்பாராத வண்ணம் பேசுவதும் செயலாற்றுவதும் ராஜாஜிக்குக் கைவந்த கலை. எனக்குத்தெரிந்து அம்மாதிரிச் சந்தர்ப்பங்கள் இரண்டு. அகில இந்திய காங்கிரஸ் தலைவராகப் பதவி ஏற்ற பின் டெல்லியிலிருந்து சென்னைக்கு வந்த திரு காமராஜை சத்தியமூர்த்தி பவனம் சென்று மாலை போட்டு ராஜாஜி வரவேற்றார். அதேபோல் சென்னை செயிண்ட் மேரி மண்டபத்தில் திரு ம. பொ. சி. நடத்திய கட்டபொம்மன் விழாவுக்குத் தாமாகவே வருகை தந்து சிறப்பித்ததுடன் சொற்பொழிவும் நிகழ்த்தி யாவரையும் பிரமிக்க வைத்தார் ராஜாஜி.

— பெ. க. சங்கரன்



கண்ணு, நாம் ஓடோனில் உபயோகிக்கிறோம்

ஓடோனில் துர்நாற்றங்களை உடனடியாக அழிக்கிறது. பாத்ரூம் போன்ற இடங்களைத் தூய்மையாகவும் நறுமணத்துடனும் வைக்கிறது.

ஓடோனில் பல்வேறு நறுமணங்களில் கிடைக்கின்றன. ஓடோனில் வகைவகையான அளவுகளில், திறுசுகளில், டப்பாக்களில் கிடைக்கின்றன.

பல்சாரா
சுகமான வாழ்க்கைக்கு
நவீனமான வசதிகள்
BALSARA

CHAITRA-BLS-7 TAM


அவள் மென்மையானவள்... அவள் ஒரு புதிர்...
அவள் மிருதுவானவள், உறுதியானவள்...
தீப்போன்றவள்... அவள் பெண்மையே உருவானவள்...
பட்டுப் போன்ற டால்க்... அன்பைப்போல
மிருதுவானது. உங்கள் மேனியைத் தழுவி
அரவணைப்பது. உங்களை மோகன லாகிரியில்
ஆழ்த்தும் அருமையான புது நறுமணம்
கொண்டது. அதுவே வில் ஆஃப் லவ்.
ஹேலோ மட்டுமே அளிப்பது. அதைத்
தாராளமாக மேனியெங்கும் தூவிக்
கொள்ளுங்கள். ஹேலோவிற்கெனவே
பிரத்யேகமாக உருவான அதன் நறுமணம்
நீண்ட நேரம் உங்களைத் தழுவி,
உங்களைச் சுற்றிலும் கமகமவென
வீசிக் கொண்டிருக்கும். வில்
ஆஃப் லவ் உங்களை அலங்கரிக்
கட்டும். ஹேலோ மட்டுமே
அளிக்கும் வாசமுள்ள
அன்புத் திரை அது.
ஹேலோ வில் ஆஃப்
லவ் டால்க் வாசமுள்ள
அன்புத்திரை...
அன்பைப் போல
மிருதுவானது.
அவளுக்கு உகந்தது
ஹேலோ
வில் ஆஃப் லவ்
டால்க்
Halo

HT.G.LTH



"கோதுமை அல்வா செய்து சாப்பிட்டதுபோல் கனவு கண்டாராம் இந்த ஆசாமி! இவருக்கு மட்டும் கோதுமை எங்கு கிடைத்தது? கேளுங்க, சார்!"

"உன் படிப்பே பாதியில் பி. ஏ. இரண்டாவது ஆண்டுடன் நிற்கிறதே! அதை முதலில் பூர்த்தி செய். பிறகு உத்தியோகம் பற்றிச் சிந்திக்கலாம். முதலில் நீ கல்லூரியில் படிப்பைத் தொடர ஏற்பாடு செய்திருக்கிறேன். சிறு குழந்தையைப் போல் பயந்து நடுங்கிக் கொண்டிருந்தால் உன்னால் ஒன்றுமே செய்ய முடியாது. உன் எதிர்காலத்தைப் பற்றிய முடிவை நீ தீர்மானித்துக் கொள்ள வேண்டும். இவ்வளவு நாட்கள் ஒன்றுக்கும் உதவாதவனாக இருந்ததெல்லாம் போதும். நான் சொல்வதற்கு மதிப்புத் தந்து, உன் நன்மைக்குத்தான் என்பதை எடுத்துக் கொண்டு செய்வதாக இருந்தால் செய்யலாம். இல்லை, உன் விருப்பப்படி தான் இருப்பதாக முடிவு செய்து கொள்வதானால் நான் குறுக்கே நிற்க மாட்டேன். உனக்கு இப்பொழுது வேலைதான் முக்கியம் என்றால், ஒரு வேலையைத் தேடித் தருவது எனக்கு ஒன்றும் சிரமமில்லை."

இதற்கும் பாஸ்கரன் மௌனமாகத் தான் இருந்தான். அவனுக்கு இதன் பேரில் உடனடியான முடிவுக்கு வரத் தெரியவில்லை. விகசிப்பில்லாத அந்த உள்ளத்தில் வாழ்க்கை பற்றிய தீவிர சிந்தனை இதுவரையில் வந்ததே யில்லை. எனவேதான் மதுராம்பிகை இப்படிச் சொன்னவுடன் தன் பான்டின் பின் பையினுள் இருந்த மௌத் ஆர்கனை உருவி ஊதிக்கொண்டு நின்றான்.

"உனக்கு வேலைக்குப் போக வேண்டுமென்று ஏன் தோன்றியது?" என்று மதுராம்பிகை கேட்டாள்.

"சாந்தா போகிறாளே?"

"சாந்தா தைரியசாலி. அதோடு வாழ்க்கையில் யாருடைய தயவும் இல்லாமல், சுயமாகத் தன் காலிலேயே நிற்குமளவுக்குச் சுய சிந்தனையோடு இருக்கிறாள். கல்லூரிப் படிப்பைக் கிரமமாக முடித்திருக்கிறாள். டைப்ரைட்டிங், ஷார்ட்ஹாண்ட் எல்லாம் அவளுக்குத் தெரியும். ஹிந்தி தெரியும்."

மௌத் ஆர்கனைக் கையில் வைத்துக் கொண்டிருந்தவன் அதைக் கர்சிப்பினால் துடைத்தான். மதுராம்பிகையின் பக்கம் திரும்பி, மனசில் உள்ளதை வெளிப் படையாகச் சொல்ல முடியாமல் திணறுபவன் போல் தயங்கினான்.

பிறகு போய்விட்டான்.

பாஸ்கரன் மதுராம்பிகையின் அன்புப் பிணைப்புக்குள் தன்னை ரொம்ப நாசூக்கான முறையில் பிணைத்துக் கொண்டிருப்பதைக் கண்டு தமக்குள் மகிழ்ந்தார் பரமேசுவரன். இதைத் தான் அவர் எதிர்பார்த்தது. ஒரு சமயத்தில் பாஸ்கரனைத் தம் அன்புச் சாட்டினால் பிணைத்துக் கொண்டு விடுவாளோ என அஞ்சியவர், பிறகு, தாமாகவே அதற்கான வழிமுறைகளைப் பட்டும் படாமலும் பாஸ்கருக்கு உணர்த்தினார். அவராகவே அவனை அங்கே நெட்டித் தள்ளாத குறையாகத் தள்ளினார். அதே நேரத்தில் அவனுடைய மன இயல்புகளையும் கண்காணித்தார். மதுராம்பிகையின் பாசப் பிணைப்பினால் தமக்கு அநுசரணையாக உள்ள அவனது மனோபாவத்தில் ஏதும் மாறுதல் ஏற்படாதவாறும் பார்த்துக்கொண்டார்.

"நீ அங்கே தாராளமாகப் போகலாம், வரலாம். உனக்குத் தேவையானதைப் பெறலாம். சலுகைகளைக் கோரிப் பெறலாம் எல்லாவற்றையும் நான் அநுமதிக்கிறேன். ஆனால் ஒன்றை மட்டும் நினைவில் வைத்துக்கொள். எனக்கு எதிராக நீ யார் மூலமாவது ஏவப்பட்டால்...ஏவப்பட்டவர்கள், ஏவியவர்கள் இருவரையும் நான் சும்மா விட மாட்டேன். ரொம்பவும் குரூரமான முறையில் அவர்களை நான் அழிப்பேன், ஜாக்கிரதை!"— அவர் கண்கள் பயங்கரமாக மின்னின.

பாஸ்கரனின் உடம்பு நடுங்கியது.

"இன்னும் ஒரு முக்கிய வேலை பாக்கியிருக்கிறது. அதை வெற்றியுடன் முடித்து விட்டால்... மை ஸன்...முன்பு உன்னை அடையும் வழக்கிலே நான் வெற்றி பெற்றேன். அவள் தோல்வியடைந்தாள். ஆனால் வாழ்க்கையில் அவள் வெற்றி யடைந்து விட்டாள். நான் தோல்விக்கு மேல் தோல்வி கண்டு விட்டேன். அவள் என்னை ஒரு துரும்பு போல் எண்ணி வேறு வழியில் பழி வாங்குவது போல் நடந்துகொண்டாள். அதை என்னால் தாங்கவே முடியவில்லை.

அன்று முதல் இன்றுவரையில் அவனை எப்படியாவது எந்த வழியிலாவது பழி வாங்கவே நான் துடிக்கிறேன். அவனுடைய அந்தஸ்திலிருந்து அவனைக் கீழே இறக்க வேண்டும். அதற்கு ஒரு வழியை ரொம்ப நாட்களாக நான் எண்ணமிட்டுக் கொண்டிருக்கிறேன். அவனுடைய மமதையை ஒடுக்க வேண்டும். காத்யாயினியைச் சந்தித்தால் போதும். எல்லா விவரங்களையும் தெரிந்து கொண்டு விடுவேன். அவளைத்தான் இவ்வளவு நாட்களாக நான் தேடுகிறேன். காத்யாயினியைக் கண்டு பிடித்த பின்பு தான் என் திட்டத்தின் முக்கிய நோக்கம் நிறைவேறுவதே ஆரம்பமாக வேண்டும்'' என்றார் ப மேசுவரன்.

''காத்யாயினியைத் தேடி என்னப்பா செய்யப் போகிறாய்? அவள் யார்? அவளை உனக்கு எப்படித் தெரியும்?''

''ஆரம்பத்தில் ஒரு கால கட்டத்தில் அவளைப் பார்த்தேன். என்னிடமிருந்து தப்பிவிட்டாள். என் திட்டம் என்ன என்பதை மதுராம்பிகை புரிந்து கொண்டு அவளை எங்கோ அனுப்பி விட்டாள். அவள் எங்கே போனாள் என்பதை என்னால் கண்டுபிடிக்கவே முடியவில்லை.''

பரமேசுவரன் மேலே பேசாமல் நிறுத்திக்கொண்டு விட்டார்.

இரவு நேரம்.

பரமேசுவரனைக் கண்டதும் காத்யாயினி சில கணங்கள் அசந்துபோய் நின்று விட்டாள்.

அன்று பார்த்த அதே பார்வை. முன்பு இருந்த அதே வன்மம். அதே குரூரம்.

சிறிய அழகிய தள்ளுவண்டியில் அந்தக் குழந்தையைத் தள்ளிக் கொண்டு போனாள். ஜனசந்தடி அதிகமில்லாத நடைபாதை ஓரம். தூரத்தில் பின்னால் யாரோ பின்தொடர்வது போல் ஒரு பயம். திரும்பிப் பார்த்தாள். கோட்டும், சூட்டும் அணிந்த நடுத்தர வயதுள்ள ஓர் உயரமான உருவம். தன்னையே வைத்த கண் வாங்காமல் பார்ப்பது தெரிகிறது. இவர் எதற்காக இப்படிப் பார்க்க வேண்டும்? இவர் நம்மைத்தான் பின்தொடருகிறாரோ?

காத்யாயினிக்கு உடம்பில் இலேசான பயம். அருகில் உள்ள பூங்காவுக்குள் நுழைந்து விட்டாள்.

கண் மூடிக் கண் இமைக்கும் நேரந்தான். ஒரு முரட்டுத்தனமான பிடி அவள் தோளைப் பற்றி அப்பால் தள்ளித் தள்ளு வண்டியில் உள்ள குழந்தையை எடுக்க, அவள் சத்தமிட்டுக் கத்தினாள். குழந்தையும் கதறியது.

யாரோ சிலர் ஓடிவரும் ஒலி. குழந்தையை விட்டு விட்டு அவர் ஓடினார்.

வண்டியை விட்டு விட்டுக் குழந்தையைத் தூக்கிக் கொண்டு வீட்டுக்கு ஓடி வந்தாள் காத்யாயினி.

மதுராம்பிகை விஷயத்தைக் கேட்டு விட்டுப் பதறிப் போனாள். போலீஸுக்குப் போன் செய்தாள். போலீஸ் வந்தது. குழந்தையைக் கடத்த முயற்சி நடந்த இடத்துக்கு விரைந்தார்கள். பார்க்கில் ஒரு பூச்செடியின் அருகில்குழந்தையின் தள்ளு வண்டி நசுங்கிப் போய் உபயோகமற்றுக் கிடந்தது.

குழந்தையைக் கடத்த வந்தவரின் சினத்தைக் குழந்தையின் வண்டி சின்னா பின்னப்பட்டுக் கிடப்பதிலிருந்து ஊகிக்க முடிந்தது. இது முன்பு நடந்தது.

பரமேசுவரன் காத்யாயினியைப் பார்த்துக் குரூரத்துடன் நகைத்தார்.

''உங்களுக்கு என்ன வேண்டும்?''

பரமேசுவரன் பதில் சொல்லவில்லை. வீட்டை ஒரு முறை கண்ணோட்டம் விட்டார்.

'' இந்த வீட்டைக் கண்டுபிடிப்பது ரொம்பச் சிரமம்தான். எவ்வளவு சந்துகளைக் கடந்து வரவேண்டியிருக்கிறதே !''

மீண்டும் சிரிப்பு.

''உங்களுக்கு என்ன வேண்டும்?''

''எனக்கா?.... நிச்சயமாக நீ வேண்டாம். உன்னைத் தேடிக் கொண்டு வரவில்லை.''

'' அது எனக்கும் தெரியும். உங்களுக்கும், எனக்கும் உறவு அறுந்துதான் எத்தனையோ ஆண்டுகள் ஆகிவிட்டனவே. நான் உங்களை நினைப்பதுகூட இல்லை.''

'' ஆனால், நான் உன்னை நினைக்காத நாளே கிடையாது. அதுகூட உனக்காக அல்ல...... எதற்காக என்பது உனக்கும் தெரியும்.''

'' எனக்கு எதுவும் தெரியவேண்டாம். இங்கிருந்து நீங்கள் போகப் போகிறீர்களா, இல்லையா?''

பரமேசுவரன் சிரித்தார். ''எவ்வளவு வருஷங்களாக இதற்காக உன்னைத் தேடுகிறேன். எவ்வளவு சிரமப்பட்டு உன் இருப்பிடத்தைக் கண்டு பிடித்திருக்கிறேன். நான் மேற்கொண்ட முயற்சிகளையெல்லாம் வீண் அடித்துக் கொண்டு அவ்வளவு சுலபமாகப் போய் விடநான் என்ன அவ்வளவு முட்டாளா !வீண் பேச்செல்லாம் எதற்கு ? அந்தப் பெண் எங்கே ? உன்னுடன்தானே இருக்கிறாள். அவளை நீதானே வளர்க்கிறாய்? இப்பொழுது அவள் எங்கே?'' என்று கேட்டார்.

(தொடரும்)



ஸ்ரீமதி சீதா தியாகராஜன்
டாக்டர் ஸ்ரீ என். தியாகராஜன்

சஷ்டியப்த பூர்த்தி விழா

லயன்ஸ் கிளப் முன்னாள் பிராந்திய சேர்மனும் (Zonal Chairman) புதுக்கோட்டை பிரபல டாக்டருமான ஸ்ரீ என். தியாகராஜன் (Dr. N. T. R.) அவர்களது சஷ்டியப்த பூர்த்தி சாந்தி மங்களாபிஷேக முகூர்த்தம் சென்ற 13-11-73 அன்று புதுக்கோட்டையில் அவர் தம் இல்லத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள் அனுக்ரஹத்துடனும் ஆசிவாதத்துடனும் அனுப்பிவைத்த சால்வையை ஸ்ரீ சாம்பமூர்த்தி சாஸ்திரிகள் அவர்கள் டாக்டர் அவர்களுக்குப் போர்த்தி சிறப்பித்தார்கள். ஸ்ரீ புவனேஸ்வரி ஆலய ஸ்ரீ சாந்தானந்த ஸ்வாமிகள் அவர்கள் வருகை தந்து ஆசிர்வதித்தார்கள். மாட்சிமை தங்கிய புதுக்கோட்டை மன்னர்பிரான் ஸ்ரீ ராஜகோபாலத் தொண்டைமான் அவர்கள் வருகை தந்து சிறப்பித்ததுடன், ஏராளமான நகரப் பிரமுகர்களும், இஷ்டமித்ர பந்து ஜனங்கள் திரளாக வைபவத்திற்கு வந்திருந்தனர். அன்று திரளான ஏழைகளுக்கு அன்னதானம் நடைபெற்றது.

Links the several worlds of women

Every fortnight, Femina reaches out to over two million readers across Asia. It brings to them a discerning, balanced and urbane interpretation of the Indian woman today—and through her, of the country she has helped to change.

Policy-maker, home-keeper or ego-preserver, the Indian woman is, like her counterparts in Asia, destroying old myths and carefully defined roles. She is emerging as the force that motivates much of the change in the sub-continent.

Femina records her life, her changing values, her experiences…every fortnight in colour and black and white.




femina

A FORTNIGHTLY FOR EVERY WOMAN

A TIMES OF INDIA PUBLICATION


கி.ராஜேந்திரன்
எழுதும் புதுயுக நாவல்
விண்ணும் மண்ணும்
கல்கியில் விரைவில் ஆரம்பமாகிறது



முகங்கள்

சு. வேங்கடரமணி

விசு தன் அறையில் இரு பக்கச் சுவர்களையும் இணைக்கும் நைலான் கொடியில் கிடந்த துணிகளை இப்படியும் அப்படியுமாகப் புரட்டினான். இருப்பதற்குள் நல்லதாக ஒரு சட்டையைப் பார்த்து எடுத்து உதறினான். அறையின் மங்கலான வெளிச்சத்தில் அது சுமாராக, மறுபடியும் அணிந்து கொண்டு வெளியில் போகத் தகுந்ததாய்த் தோன்றவே, அதைக் கையில் எடுத்து வைத்துக் கொண்டு அப்படியே நின்றான்.

இப்பொழுதெல்லாம் அவன் தன் துணிகளைப் பற்றி அக்கறை கொள்வதே இல்லை. எங்கும் வெளியில் செல்ல வேண்டிய நினைப்பும் தூண்டுதலும் சுயமாய் அவனுள் ஏற்படுவதில்லை. இன்று ஏதோ ஒரு நிர்ப்பந்தத்தில், தனக்காக இல்லாமல் வேறு யாருக்காகவோ செய்யும் காரியம்போல் — பல நாட்களுக்குப் பின் மீண்டும் — வெளியே செல்ல நினைத்தான். வேறு யாரோ என்றால் அது அவன் அம்மாதான். அம்மாவே 'வேறு யாரோ' மாதிரி ஆகிவிட்டது. ஒரு கண நேரம் அவனுக்கு விசித்திர உணர்வாகப்பட்டது. உண்மை என்னவோ அதுதான்.

சட்டையுடன் ஜன்னல் அருகில் போனான் விசு. நல்ல வெளிச்சத்தில் அதைப் பார்த்த போது, அவன் கண்களில் அதிருப்தியின் நிழல்தான் படர்ந்தது.

அவன் ஜன்னல் வழியே தெருவைப் பார்க்கத் தொடங்கினான்.

காலை ஒன்பது மணி இருக்கலாம். பகல் வெளிச்சம் தீவிரம் கொள்ளத் தொடங்கியிருந்தது. ஜனங்களின் நடமாட்டமும் வேகமாகவும் அவசரமாகவும் இயங்கியது. ஆண்கள், பெண்கள் சிறு வயதினர், வயதானவர், நடு வயதுக்காரர்கள் எத்தனை பேர்கள்! எத்தனை விதம். அவன் பார்த்தது வேறு வேறு வகையான முகங்களை. அவனுக்குச் சிறு வயதிலிருந்தே இப்படி ஒரு பழக்கம் இருந்தது. விதம் விதமான மனித முகங்களை அவனது பார்வை ஆழ்ந்து ஊடுருவிக் கவனிக்கும். குழந்தையாகவும் சிறுவனாகவும் அவன் எப்போதோ பார்த்திருந்த முகங்கள் இன்னமும் ஞாபகத்தில் இருக்கின்றன. வேண்டாத நேரத்தில் ஞாபகம் வந்து அவனைப் பலவித உணர்ச்சிகளில் சிக்கித் தவிக்க வைத்தன.

விசு சட்டையை வீசி எறிந்தான். அது கொடியில் தட்டுப்பட்டுக் கீழே விழுந்தது. தரை அழுக்காக இருந்தது. சட்டை மேலும் மோசமாகி விடும். போகட்டும்!

அவன் கண்களை மூடிக் கொண்டு ஜன்னலில் ஒரு பக்கத்துக் கதவின் மேல் சாய்ந்து கொண்டு உட்கார்ந்தான்.

''விசு !'' என்று அழைத்துக் கொண்டே அவனுடைய தாயார் உள்ளே வந்தாள்.

''உம்.'' — அவன் நிமிராமலும், திரும்பாமலும் முனகினான்.

அம்மாவிடமிருந்து கொஞ்ச நேரத்துக்குப் பேச்சே இல்லை. அவனுடைய அலுப்பும் சலிப்பும் அதிகமாயின. எழுந்து, சற்று முன்பு வீசிப் போட்ட சட்டையை எடுத்தான். வேகமாய் உதறிவிட்டு, அவசரமாக மாட்டிக் கொண்டான். கண்ணாடியில் பார்க்காமலே தலையைச் சீப்பினால் ஒருமாதிரியாகப் படிய வைத்துக் கொண்டான். அம்மா இப்போது கேட்டாள்:

''வெளியே போகப் போறியா விசு ?''

''அதான் பார்த்துக் கொண்டேயிருக்கியே ?''

''அப்படியானால் வரும்போது — ''

உள்ளே போய் ஒரு பையும், சாமான்கள் எழுதிய பட்டியலும் கொண்டு வந்தாள். இரண்டு பத்து ரூபாய் நோட்டுக்களையும் நீட்டினாள்.

''ஊரிலே இருந்த மனைக்கட்டை விற்கச் சொல்லி விட்டேன். முந்தா நாள் கிராமத்திலே இருந்து கர்ணம் வந்தார். நீ அப்போ இல்லை.''

''உம்.... அப்படியா ? சரிதான்.''

அவன் செருப்பை மாட்டிக் கொள்ளும் வரையில் அம்மா பின்னோடு வந்தாள்.

''விசு ! அந்தப் பத்மநாபனைப் பார்த்துப் பேசிக் கொண்டிருந்தேன். அவர் ஏதோ வேலையைப் பற்றிச் சொன்னார். நீ போய்ப் பாரேன் அவரை. அவராகவே 'விசுவை வரச் சொல்லுங்கோ! நான் ஏற்பாடு பண்ணுகிறேன்' என்று சொன்னார்.''

அவன் மனம் அலுத்துக் கொண்டது. இந்தப் பத்மநாபனைப் பற்றி அம்மா நேற்றைக்கே சொல்லிவிட்டாள். ஏழெட்டு நாட்களுக்கு முன்னாடியேகூட ஒரு தடவை சொல்லிவிட்டாள். அவனுடைய அலுப்பு ஆத்திரமாய் மாறியது. அவனுக்குள் வார்த்தைகள் படபடத்தன. ஆனால் அவன் தன்னை அடக்கிக் கொண்டான். அது எப்போதும் அவனுடைய பழக்கமாகி விட்டது.

'விசு! நீ என் வேலையை விட்டு விட்டே? ரொம்ப நல்ல வேலையாச்சே ?'

அவன் பதில் சொல்ல வெகு நேரம் தயங்குவான்; சங்கடப்படுவான். பதில் சொல்ல முடியாமல் மழுப்புவான். ஆனால் அவன் நினைத்தால் உண்மையை மிகச் சுருக்கமாகச் சொல்லி விடலாம்.

'அந்த மானேஜருடைய முகம்!'

இது யாருக்குப் புரியும் ?


கேட்கிறவர்கள் சிரிப்புடன் அவனை அலட்சியத்தோடு — அல்லது அவன் ஒரு முட்டாள், பைத்தியம் என்ற அர்த்தத்தோடு பார்ப்பார்கள்.

ஆனால் அவனுக்கு அதுதான் உண்மை! - 'அந்த மானேஜருடைய முகம்!' அவனுடைய நினைவுக் கிடங்கில் சேர்ந்திருந்த முகங்களில் அதுதான் மிகவும் மோசமானது என்று அவன் நம்பினான். நீண்ட காலம், கிட்டத்தட்ட ஒரு வருஷம் — வாரத்துக்கு ஆறு நாட்கள் என்ற கணக்கில் — பார்த்துப் பதிந்துவிட்ட அந்த முகத்தை இனிமேல் தன் வாழ்நாட்களுக்குள் தன்னுடைய நினைவிலிருந்து அழித்துவிட முடியுமா என்று நினைத்து நடுங்கினான்.

கடைசியாக அவன் வேலையைவிட்டு வெளியேறி வந்த அன்று, அவர் ஜலதோஷத்துக்காகப் பொடி போட்டுத் தும்மும்போது அவருடைய முகத்தைப் பார்த்தான். அந்த மானேஜருடைய, அவன் ஆரம்பம் முதலே வெறுத்த, முகம் அதைவிட மோசமான முறையில் காட்சியளிக்க முடியாது என்று அந்த விநாடியின் அந்தக் கடைசிக் காட்சி அவனுக்கு நிச்சயமாகச் சொல்லிற்று.

''உனக்குச் சௌகரியப்படுமா, பத்மநாபனைப் போய்ப் பார்க்கிறாயா?'' என்று மறுபடியும் கேட்டு அம்மா அவனை நினைவுக்குக் கொண்டு வந்தாள்.

'' உம், பார்க்கிறேன்'' என்று பணமும் கையுமாகப் புறப்பட்டான்.





அமிர்தாஞ்சனம்

AM/7570

தலைவலி, ஜலதோஷம் மற்றும் வலிகளுக்கு நம்பகமான நிவாரணி.

அமிர்தாஞ்சனம் ஜலதோஷம், உடல்வலி, தசைவலி, தலைவலி களுக்கு இவற்றிலிருந்து உடனடியாக குணமளிக்கிறது. அமிர்தாஞ்சனம் தடவியதும் வலி மறைகிறது. பாட்டில்கள், சிக்கனமான ஜாடிகள், மற்றும் மலிவு விலை டப்பாக்களிலும் கிடைக்கிறது.

அமிர்தாஞ்சனம் — பத்து மருந்து பொருள்கள் ஒருங்கே சேர்ந்தது.

அமிர்தாஞ்சன் லிமிடெட்



கண்ணுடியின்றி கண் பார்வை பெறலாம்!



adsindia

உங்களுக்கு இதைவிட மட்டற்ற மகிழ்ச்சி தரக்கூடிய செய்தியும் வேறு உண்டோ!

'காண்டாக்ட் லென்ஸ்'களை உபயோகியுங்கள்.

இந்த 'காண்டாக்ட் லென்ஸ்'கள் கிட்டப்பார்வை, தூரப்பார்வை மற்றும் அஃபாகிக் (காடராக்ட் ஆப்பிரேஷனுக்குப்பின்) கெராடோ கோனஸ், அனிஸோமெட்ரோபியா, அனிரிகோனியா, பாலியோபியா, போன்ற பார்வை குறைபாடு உடையவர்களுக்கு மிகவும் சிறந்தது.

'காண்டாக்ட்லென்ஸ்'களை வெகுசுலபமாக நீங்களே உங்கள் கருவிழிகளில் பொருத்திக்கொள்ளலாம். . . கழற்றியும் விடலாம்—சில நாட்கள் பழகிய பின்! உங்கள் விழிகளில் பொருத்தப்பட்ட இச்சிறு 'காண்டாக்ட்லென்ஸ்'கள் மற்றவர்கண்களுக்கு தெரியாது. ஆகவே உங்கள் எழில் மிகு முகத் தோற்றத்தில் எவ்வித மாறுதலும் இல்லை!

உங்கள் கண் வைத்தியரை ஆலோசனைக்கு அணுகுங்கள்

மற்ற விபரங்களுக்கு: **ஆசியா காண்டாக்ட் லென்ஸ் லாபரெட்டரி**
லாபரெட்டரி : 13, கில்கிரிஸ்ட் அவென்யூ, ஹேரிங்டன் ரோடு, சென்னை - 31
அலுவலகம் : 5-G, வீரபத்ர அய்யர் தெரு, நுங்கம்பாக்கம், சென்னை-34

போன்கள் :
662600 82722 82595

இந்த ஆறு மாதங்களாய் வேலைக்காகப் படாத பாடு பாக்கி இல்லை.

''வேலை கிடைக்கிறது இத்தனை கஷ்டமாய் இருக்கு. நல்ல வேலை; கணையாய் நானூறு ரூபாய் சம்பளம். அதை இப்படி ஒரு காரணமும் இல்லாமல் விட்டுவிட்டாயேடா ?''— என்றுதான் எல்லோரும் கேட்டார்கள்.

விக பெரிய சாலைக்கு வந்து பஸ் ஸ்டாப்பில் போய் நின்றான். இதற்குள் காலை நேர நெரிசல் குறைந்து போயிருந்தது. மணி பத்துக்கு மேல் ஆகியிருக்கும் என்று உத்தேசமாய்க் கணக்குப் பண்ணிக் கொண்டான். பத்மநாபனை அவருடைய கம்பெனியில் போய்ப் பார்ப்பதா? அல்லது வீட்டிலேயே பார்க்கலாமா என்று சிந்திப்பதில் நேரத்தைப் போக்கிக் கொண்டே நின்றான். அவர் எப்போதும் பகல் சாப்பாட்டுக்கு வீட்டுக்கே வந்துவிடுவார் என்று அம்மா சொல்லியிருந்தாள். அம்மா இன்னும் எத்தனையோ விவரங்களைப் பேச்சுவாக்கில் சொல்லியிருந்தாள். பல மாதங்களுக்கு முன்னால் — அவன் அப்போது வேலை பார்த்துக் கொண்டிருந்தான் — அம்மா ஒருமுறை அவர் வீட்டுக்குப் போய்விட்டு வந்தாள். அந்தப் பெருமையை அவள் விவரித்தபோது, விக அதைக் கேட்பதில் எந்தவித அக்கறையும் காட்டவில்லை. ஆனால் இப்பொழுது சில விவரங்கள் அவனுக்கு ஞாபகம் வந்தன.

பத்மநாபனின் மனைவி அவளுடைய அப்பாவுக்கு ஒரே பெண்ணும். அதனால் அவளை மணந்துகொண்ட பத்மநாபன் மாமனார் கண்களை மூடியதும், அவருடைய வர்த்தக நிறுவனத்துக்கு உடனடியாய்ச் சொந்தக்காரராகி விட்டார்.

'' உன் அப்பாவும் அவரும் ஒன்றாய்ப் படித்தவர்கள். கல்யாணம் ஆகிற வரைக்கும் அவர் உன் அப்பாவோடதான் வேலை பார்த்தார். அப்புறம் உன் அப்பாவை 'நிறையச் சம்பளம் தரேன்; என்னோட கம்பெனிக்கே வேலைக்கு வந்துவிடு' என்றுகூடக் கூப்பிட்டார்'' என்று அம்மா சொன்னது திடீரென்று அவனுக்கு ஞாபகம் வந்தது.

விகவின் அப்பா ஏனோ அம்மாவின் பேச்சைக்கூடக் கேட்கவில்லை. பழைய வேலையிலேயே இருந்துவிட்டு ஒரு நாள்....

செத்துப் போன அப்பாவின் நினைவு வந்ததும் மனம் தேக்க நிலையை அடைந்துவிட்டது. நிறையப் படிக்க வேண்டும் என்ற அவனுடைய ஆசையைப் பூர்த்தி செய்ய அப்பா தயாராக இருந்தார். ஆனால் கடைசியில் அவன் படிப்பு பாதியில் நின்றது. அவன் உடனே ஒரு வேலையையும் தேடிக் கொள்ள வேண்டியதாயிற்று. அந்த வேலையில் அவன் கிட்டத்தட்ட ஒரு வருஷம் ஓட்டி விட்டான். பிறகு....

வேலையைப் பற்றிய நினைவுடனேயே, அங்கே ஒவ்வொரு நாளும் அவன் பிறரிடம் சொல்லாமல் — அல்லது சொல்ல முடியாமலோ, சொல்லத் தெரியாமலோ — பட்ட மன அவஸ்தையையும் நினைத்துக் கொண்டான்.

விக வேகமாகத் தலையை அசைத்து உதறிக் கொண்டான். மறுபடியும் அந்த நினைவு — அந்த நினைவால் ஏற்படும் உணர்வு — தன்னைச் சகிக்க முடியாதபடி பாதித்துவிடுவதற்கு முன் அவன் அதிலிருந்து விடுபட முயன்றான்.

பக்கத்தில் சுமாரான ஒரு ஹோட்டல் இருந்தது. ஒரு காப்பியாவது சாப்பிடலாம் என்று அதற்குள் நுழைந்தான். அங்கும் கூட்டமில்லை. வியாபாரம் ஓய்ந்த நேரம் போலும்.

காப்பிக்குச் சொல்லிவிட்டு, முகத்தைக் கைக்குட்டையால் துடைத்து விட்டுக் கொண்டான். எதிரே சுவரில் ஒரு பழைய நிலைக் கண்ணாடி பதித்திருந்தது. அதில் விக தன் முகத்தையே பார்த்துக் கொண்டான். மங்கலான பிம்பம்தான் தெரிந்தது. நானா இது. நானேதானா ?

ஆறு மாதங்களாகி விட்டன. அவன் தன் முகத்தைப் பார்த்து. அவனுடைய அப்பாவுக்கு நல்ல கம்பீரமான முக வாகு. அவன் தன் அப்பாவின் முகச் சாயலைக் கொண்டிருந்தான் என்றுதான் அம்மாவும் மற்றவர்களும் சொல்லுவார்கள். ஆனால், இப்போது எதிரே தெரிந்த பிரதிபலிப்பில் தான் பெருமை கொள்ளும் கம்பீரத்தை அவன் தேட வேண்டியிருந்தது.

வெளியில், வெய்யிலின் நடுவே காற்று மெதுவாய் வீசிக் கொண்டிருந்தது. நேரம் நிறைய இருந்ததால் சாலையோடு அடுத்த ஸ்டாப் வரையில் நடக்கலாமே என்று தோன்றியது. ஒரு பீடாவை வாங்கிக் குதப்பிக் கொண்டே அவன் நடக்கலானான்.

அம்மா கொடுத்த பத்து ரூபாய் நோட்டுக்களில் ஒன்றை மாற்றியாகிவிட்டது. ஆறு

மாதங்களாக அம்மா எப்படி அவனுக்குக் குறைவில்லாமல் சாப்பாடு போட்டுக் கொண் டிருக்கிறுள். பெட்டியில் கழற்றி வைத்திருக் கும் நகைகளை விற்று விடுகிறளோ என்ற சந் தேகம் இப்பொழுதுதான் அவனுக்கு ஏற்பட் டது. ஆனல் ஒரு நாள்கூட, அவன் வேண்டு மென்றே வேலையை விட்டுவிட்டு வந்து உட் கார்ந்திருப்பதில் தனக்குக் குறை இருப்ப தாக அவள் முகத்தில் காட்டிக் கொண்ட தில்லே, பேசியதுமில்லே.



'பாவம் அம்மா !' என்று மேலே நடந்தான் விசு.

எதிரே உயிரற்ற, ஆனல் உணர்ச்சிகளேத் தூண்டும், சினிமாச் சுவரொட்டிகளில் பல விதமான முகங்கள். உயிரோடு நடமாடும் பல மனிதர்கள். விசு எதிலும் நிலைகொள் ளும் சந்தர்ப்பங்களேத் தவிர்த்துக்கொண்டே சென்றுன்.

''ஹலோ, மிஸ்டர் விசு !''

நின்று திரும்பிப் பார்த்தால், எதிரே வந்த மேரி லீலா நின்று அவனுக்குப் பின்னல் பத்தடி தூரத்திலிருந்து அவனே அழைத் துக் கொண்டிருந்தாள்.

''லீலா, நீயா?''

''உம். எத்தனே நாட்களாச்சு, உங்களேப் பார்த்து? இப்பவும் உங்களேச் சரியாய்ப் பார்க்காமலே மேலே வந்துவிட்டேன். அப் புறம் திரும்பிப் பார்த்தால் நீங்கதான்.... இப்போ எங்கே வேலே பார்க்கிறீங்க? என்ன வேலே ?''

''வேலேயே இல்லே. இன்னும் எதுவும் கிடைக்கலே யில்லே.''

''அப்படியா ? நிஜமாத்தான் சொல் றீங்களா ?''

''நிஜந்தான்.''

''ஆனல், நீங்க கடைசியா வேலையைவிட்டு வெளியே போறப்போ பார்த்தேன்..... ரொம்ப உற்சாகமா, மாடிப் படியிலே தாவித் தாவி இறங்கிப் போனீங்க. அப்போ எனக்கு ஒரு சந்தேகம். வேறே நல்ல வேலே யாய், நிறையச் சம்பளத்திலே தேடி வைச் சிருக்கிங்க. அதனல்தான் அந்த வேலையை விட்டுப் போறீங்கன்னு நெனைச்சேன். நம்ம கிட்டே சொல்லாமல் போறரேன்னு எனக்கு வருத்தமாகக்கூட இருந்தது.''

''இல்லே லீலா! அந்த வேலேயிலே இருந்து விடுபட்டு வந்தது அப்போ அத்தனே நிம்மதியாக இருந்தது. இப்போதுகூட அந்த வேலையை விட்டுவிட்டதை நான் தவருக நினைக்கல்லே. ஏன்னு என்னலே அதிலே இனியும் தொடர்ந்திருக்க முடியாது என்று தான் நான் வெளியே வந்தேன்.''

''அப்படியா ?''

மேரி லீலாவின் கண்களின் விரிப்பு அவளது ஆச்சரியத்தைக் காட்டியது. 'அவளுடைய கண்கள் அதிசயமும் அற்புதமும் நிரம்பியவை' தனக்குள் விசு நினேத்துக் கொண்டான்.

'' அப்போ வேலே கிடைக்காவிட்டால் ஒண்ணு செய்யுங்க, மிஸ்டர் விசு !'' என்று அந்த ஆச்சரியப் பார்வையுடனேயே தொடர்ந்தாள் லீலா.

'' என்ன?''

''வேலே பார்க்கிற பெண்ணைப் பார்த்துக் கல்யாணம் பண்ணிக்குங்க ஸார் !''


'' அப்போ எனக்கு இனிமேல் வேலேயே கிடைக்காதுங்கிறயா ?''

''அச்சச்சோ ! அப்படியில்லே மிஸ்டர் விசு. உங்களுக்குக் கொஞ்சம் மின்னே பின்னே வேலேகிடைச்சாலும் பரவாயில்லே.''

''லீலா ! என்னே இப்படி உன் பேச்சிலே மடக்கிவிட வேண்டும் என்று நீ ஒரு சந் தர்ப்பத்தை எதிர்பார்த்தியா? இப்போ அது கிடைச்சுட்டுதுன்னு பேசறியா ?''

''நிச்சயமா இல்லவே இல்லே.''

உங்கள் மகளின் வயது என்ன?



அவளுடைய வயது என்னவாக இருந்தாலும் அவளது திருமணம் பற்றிய கவலை உங்களுக்கு இருக்கவே செய்யும்.

உங்களது மகளின் திருமணத்துக்கென சுலபமாகவும், லாபகரமாகவும் 5,7 அல்லது 10 ஆண்டுகளில் நீங்கள் சேமிக்கலாம். ஐஓபியின் அரியதொரு சேமிப்புத் திட்டத்தின் மூலம் ஆண்டுக்கு ஆண்டு உங்கள் மாதாந்தர சேமிப்புத் தொகை அதிகரித்துக் கொண்டு வரும்.

ஐஓபியின் திருமண சேமிப்புத் திட்டத்தில் சேருங்கள். சேமிப்பு தொடங்க ரூ. 5 இருந்தாலும் போதும்.


ஐஓபி கிளைக்கு வருகை தந்து விவரம் அறியுங்கள். விரைந்து வந்தால் நிறைந்த பலன் பெறலாம்.

அல்லது விவரம் அடங்கிய இலவசப் பிரசுரத்துக்கு எழுதுங்கள்.

இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்க்

மத்திய அலுவலகம்:
151, மவுண்ட் ரோடு, சென்னை 600002

FDS/IOB/1945 THA



அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் ஜாம்ஷெட்பூரில் நம் நாட்டின் முதல் எஃகுத் தொழிற்சாலை நிறுவப்பட்ட காலந்தொட்டு, தன்னம்பிக்கைக்கு ஒரு மரபினை உருவாக்கி வைத்துள்ளது டாடா ஸ்டீல்.

பல்லாண்டுகளாக நாட்டின் ஒரே எஃகுத் தொழிற்சாலையாக இருந்த டாடா ஸ்டீல், தனக்குத் தேவைப்பட்ட துணையுறுப்புகளைத் தயாரித்தளிக்க வேறு நிறுவனங்கள் எதுவும் இல்லாதிருந்த காரணத்தால், உபரி உறுப்புகளைத் தானே தயாரித்துக் கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டது.

இன்றும் டாடா ஸ்டீல் லோரி கார், புஷர் கார் முதல் பெல்லெட்டைஸிங் கில்ன், மட் கன் மற்றும் ராக்கிங் ஷியர் வரை பல திறப்பட்ட உறுப்புகளைத் தானே டிஸைன் செய்வதோடல்லாமல், தயாரிக்கவும் செய்கிறது.

இவ்வழியில், நம் நாட்டின் பொருளாதாரச் செழுமைக்கு உதவுவது என்று டாடா ஸ்டீல் அறுபத்தாறு ஆண்டுகளுக்கு முன் வகுத்துக் கொண்ட கோட்பாட்டை நிறைவேற்றும் பணியில் தொடர்ந்து செயலாற்றி வருகிறது.

டாடா ஸ்டீல்

AIYARS-TS.4 TM



டயர் அழகி !

அமெரிக்காவில் ஆண்கள் ஓட்டும் கார்களுக்கென்று தனி டயர்களும், பெண்கள் ஓட்டும் கார்களுக்கென்று தனி டயர்களும் தயாரிக்கப்படுகின்றன. ஆண்களின் கார் டயர்கள் உறுதியாகவும், அகலமாகவும் உள்ளன. பெண்கள் கார் டயர்களில் பல வர்ணப் பொத்தான்கள் பொருத்தப்படுகின்றன. டயரின் பக்கங்களில் அழகிய பூக்கோலங்கள் வரையப்படுகின்றன.

-நாடோடி



இருவரும் மௌனமாய் அந்தச் சாலையின் ஓரத்திலேயே அசையாமல் நின்றார்கள். பிறகு மெதுவாக விசு சொன்னான்: ''லீலா ! என்னோட அம்மா இன்னும் இருக்கிறாள். இல்லேன்னா —''

''போதும் நிறுத்துங்க ! உங்க அம்மா நல்லாவே யிருக்கட்டும். எனக்காக அவங்களை நீங்க அவசரப்பட்டு அனுப்பிவிட வேண்டாம்.''

அவள் சிரித்தாள். அவனுக்கும் சிரிப்பு வந்தது.

''அப்படியானால் வேறே ஒரு யோசனையைக் கேட்கிறீங்களா விசு ?''

''சொல்லு. நீ இன்னிக்கு மறுபடியும் என் வழியிலே குறுக்கே வந்திருக்கே. கர்த்தர் உன் மூலமா எனக்கு நிறைய யோசனைகளை அனுப்பியிருக்கிறார் போலும்.''

'' நல்ல வசதியும், செல்வாக்குமுள்ள ஒருவரோட பெண்ணைப் பார்த்துக் கல்யாணம் பண்ணிக்கலாம். அப்புறம் உங்க பிரச்னை தன்னாலே தீர்ந்து போகும்.''

'' அது, சரி லீலா ! என்னோட வேலை தேடும் முயற்சிக்கும், கல்யாணத்துக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறதாக நீ ஏன் நினைக்கிறே ?''

அவள் பதில் எதுவும் சொல்லாமல் தன்னுடைய கைப்பையைத் திறந்து ஓர் உறையை எடுத்துக் கொடுத்தாள். உள்ளே பூவேலைப்பாட்டுடன் கூடிய காகிதம். அதில் ஒரு திருமணச் செய்தி அச்சிடப்பட்டிருந்தது.

''என்னோட கல்யாணம் அடுத்த வாரம் நடக்கிறது. நீங்க கட்டாயமாய் வரணும்.''

''ஓ! நீ என் கல்யாணம் பற்றி அக்கறை கொள்ள இதுதானா காரணம்? லீலா, என்னோட மனப்பூர்வமான நல்வாழ்த்துக்கள்.''

மேரி லீலா அவனிடம் விடைபெற்றுக் கொண்டு சென்றதும், விசு தன் நடையைத் தொடர்ந்தான்.

மணமகன், லீலாவுக்குத் தூரத்து உறவுக்காரனும். ரயில்வே டிக்கெட் பரிசோதகனும்.

இதே லீலாதான் ஒரு சமயம், அவர்கள் இருவரும் ஒரு மாலையில் அலுவலகத்தை விட்டு வெளியே வந்ததும் கேட்டாள்:

''மிஸ்டர் விசு ! நாம் இருவரும் கல்யாணம் செய்து கொண்டால் என்ன? என்னோட அப்பாவும் அம்மாவும்கூட உங்களைப் பார்த்தால் எந்த ஆட்சேபணையும் இல்லாமல் சம்மதிச்சுடுவாங்க.''

'' அப்படியா ?'' என்று கேட்டான் விசு, திடீரென்று ஏற்பட்ட அதிர்ச்சியுடன்.

''ஆமாம். உங்க முகத்திலே ஒரு கம்பீரமான தன்மை இருக்கு. அதனாலே உங்களைப் பார்த்தால் அவர்களாலே எந்த ஆட்சேபணையும் சொல்ல முடியாது.''

''அப்படியா ?'' என்று மறுபடியும் கேட்டுவிட்டுக் கொஞ்ச நேரம் மௌனமாக நின்றான் விசு. பிறகு மெதுவாகவும் தெளிவாகவும் சொன்னான்: ''லீலா ! என்னாலும் உன் முகத்தைப் பார்த்தால் எந்த ஆட்சேபணையும் சொல்ல முடியாது. ஆனால், எனக்கு ஓர் அம்மா இருக்கிறாள். அவளும் நீயும் ஒரே குடும்பமாய் இருக்க முடியாது. நான் எங்க அம்மாவுக்கு ஒரே பிள்ளை. அதனாலே இந்த வயசுக் காலத்தில் என்னோட அம்மாவையும் வேறே எங்கும் அனுப்ப முடியாது ''

இதன் பிறகு அவர்கள் வேறு பல விஷயங்களைப் பற்றித் தொடர்ந்து பேசிக் கொண்டு போனார்கள்.

அந்தப் பேச்சுக்கு முன்னாலும் இப்படி ஓர் எண்ணம் அவர்களிடம் இல்லை. அந்தப் பேச்சுக்குப் பின்னாலும் அவர்களிடம் எந்தச் சலனமும், ஏக்கமும் இல்லை.

அடுத்த பஸ் நிறுத்தத்தை அடையும்போது விசுவுக்குத் திடீரென்று மறுபடியும் லீலாவின் திருமண அழைப்பிதழில் கண்ட மணமகனின் ஞாபகம் வந்தது.

'விக்டர்—'

'அவனுடைய முகம் அழகாய், லீலாவின் பெருமைக்குத் தகுந்தவாறு கம்பீரமாய் இருக்கட்டும்' என்று அவன் தனக்குள் சொல்லிக் கொண்டான்.

பங்களாவின் முன் தளத்தில் கார் நின்று கொண்டிருந்தது. பத்மநாபன் வீட்டில்தான் இருக்கிறார் என்று புரிந்து கொண்டு அழைப்பு மணியில் கையை வைத்தான் விசு.

கதவு திறந்தது.

''அடடா, விசுவா, வாப்பா !'' என்று வாசற்படியில் வந்து நின்றார் பத்மநாபன். பளபளப்பான சிவப்பு உடல். மேலே ஒரு டவல் மட்டும் போட்டுக் கொண்டிருந்தார். கழுத்திலே இரண்டு மூன்று மடிப்புக்கள். முகத்தில் சதைப் பிடிப்பான கன்னங்கள். அநேகமாய்த் தலை முழுவதும் பரவிவிட்ட வழுக்கை. தெளிவு மங்காத கண்கள். நடு வயதைக் கடந்தும் கவர்ச்சியான முகம்.

'நான் இவரோட முகத்தையே பார்த்துக் கொண்டிருக்கிறேனே' என்று திடுக்கிட்டுச் சமாளித்துக் கொண்டான் விசு.

''இப்படி உட்கார் விசு'' என்று தம் பக்கத்தில் சோபாவில் உட்கார வைத்துக் கொண்டார் பத்மநாபன். இத்தனை நெருக்கத்தை அவன் எதிர்பார்க்கவில்லை. அவருடைய உபசரிப்புக்களை மிகவும் சிரமப்பட்டு மறுத்துக் கொண்டிருந்தான்.

''நீ இந்த வேலையை விட்டதைப் பற்றி நான் வருத்தப்படவில்லை. ஆனால் இத்தனை நாட்களும் என்னைப் பார்க்க வராமல் இருந்



''எதிர்க்கட்சி மண்டூகங்களே ! அரசியல் அனாதைகளே! சவடால் வீரர்களே! தரம் கெட்டவர்களே! மேடையில் எங்களைப் பற்றிப் பேசும் போது பண்புடன் பேசக் கற்றுக் கொள்ளுங்கள் !''

ததுதான் எனக்கு வருத்தமாய் இருக்கிறது. உன்னை அதைவிடப் பெரிய வேலையில் உட்கார்த்தியிருப்பேன். போகட்டும், இப்போதாவது வந்து சேர்ந்தாயே !''

விசு என்ன சொல்வது என்று யோசித்துக் கொண்டிருந்தான். ஆனால் அவர் அவன் பதிலை எதிர்பார்த்துக் கொண்டிருக்கவில்லை. அவன் அப்பாவைப் பற்றி, அவர்கள் இருவரும் ஒன்றாக வேலை செய்ததைப் பற்றி, முக்கியமாய்ப் பத்மநாபனின் பேச்சுக்கும் விருப்பத்துக்கும் அவனுடைய அப்பா ஒத்துப் போவது பற்றி அவர் பேசிக் கொண்டே போனார். விசு பேசாமல் கேட்டுக் கொண்டிருந்தான். கொஞ்ச நேரத்தில் அவனுக்கு அலுப்பாகக்கூட இருந்தது.

''இரு. இதோ வந்து விட்டேன்'' என்று எழுந்து உள்ளே போனார் பத்மநாபன்.

அவனுக்கு அவசரமாய்த் தன்னுடைய முகம் இப்பொழுது எப்படி இருக்கிறது என்று பார்த்துக் கொள்ள வேண்டும் என்கிற ஆசை பிறந்தது. அந்த அறையில் நாலைந்து பெரிய படங்கள் மட்டுமே மாட்டப்பட்டிருந்தன. அவன் ஒரு கண்ணாடிக்காகச் சுற்றிலும் பார்த்துக் கொண்டிருக்கிற போது, பத்மநாபன் மறுபடியும் அந்த அறைக்குள் வந்தார்.

''இவன்தான் விசு ! பாக்கியம்! ரங்கியிடம் சொல்லிக் காப்பி கொண்டு வரச் சொல்லேன்'' என்றார் பத்மநாபன்.

விசு ஒரு வழியாய் முகத்தை நிமிர்த்திப் பத்மநாபனையும் அவர் மனைவியையும் பார்த்தான்.

'' ரங்கி என்கிறது என்னோட பெண். பெயர் ரங்கநாயகி. ரங்கி ரங்கின்னு கூப்பிட்டுப் பழக்கமாய்ப் போச்சு.''

'' ஓ !''

காலடி ஓசை கேட்டது. விசு தற்செயலாகத்தான் திரும்பினான். ரங்கி வந்து அறைக்குள் நுழைகிற நேரமும் அதுவாகவே இருந்தது. அவள் முகந்தான் முதலில் அவனுக்குத் தெரிந்தது.

விசு அதிர்ந்து போய் அழுந்த உட்கார்ந்து கொண்டான்.

அந்த முகம் ! பத்மநாபன், அவர் மனைவி இருவரது முகங்களுக்கும் இதற்கும் சம்பந்தமே இல்லை.

தடித்த முன்னீட்டிய மேலுதடு, அதனடியில் இரு நீண்ட பற்கள், அம்மை வடுக்கள் தெளித்த கன்னங்கள், மேலே எங்கோ பார்க்கிற விழிகளின் செருகல் இத்தனையோடும் மென்மையற்ற ஆண் பிள்ளைத்தனம் கூடிய அந்த முகம்.....

விசு காப்பியை ஆற்றாமலே குடித்து நாக்கைச் சுட்டுக் கொண்டான். பத்மநாபன் அவனைப் பற்றிய விவரங்களைக் கேட்டுக் கொண்டிருந்தார். அவனது மூளை ஸ்தம்பித்துப் போன உணர்ச்சிகளைக் கடந்து — ஏதோ பதில்களை அவருக்குச் சொல்லிக் கொண்டிருந்தது.

கொஞ்ச நேரத்தில் விசு புறப்பட்டான். பத்மநாபன் தம்முடைய காரில் தாம் கம்பெனிக்குப் போகும்போது கொண்டுவிடுவதாகச் சொன்னார்.

ஒரு நண்பனைப் பார்க்கப் போக வேண்டும் என்று பொய் சொல்லி மறுத்து விட்டான். பெருமூச்சு விட்டுக் கொண்டு புறப்பட்ட அவனுடன் பத்மநாபனும் வந்தார். கேட் அருகில் வந்ததும், ''நீ நாளைக்கே வேலைக்கு வந்துவிடலாம்'' என்றார்.

''உங்க கம்பெனியிலேயே இடம் இருக்கா?''

''இல்லாவிட்டால்தான் என்ன? நானே ஒரு புதிய வேலையை உனக்காக ஏற்படுத்திக் கொடுக்கிறேன். அப்புறம் வந்து விசு..... '' பத்மநாபன் அவன் தோளில் கையை வைத்துக் கொண்டார். ''விசு ! இதோ பார் ! நீ என்னோட மகன். உங்கப்பாவும் நானும் நண்பர்களாய் இருந்தது மட்டும் போதாது. நீயும் இனிமேல் என் குடும்பத்திலே ஒருத்தனாக ஆகிவிடணும் என்கிற ஆசை எனக்கு. ரங்கியை உனக்குக் கல்யாணம் பண்ணிக் கொடுக்கணும் என்கிற ஆசை எனக்கு. உன் அம்மாவிடமும் வந்து பேசுகிறேன்.''

'' சார் வந்து....''

''நாளைக்கு வாயேன். மற்றதெல்லாம் பேசிக் கொள்ளலாம்.''

கொஞ்ச தூரம் போனதும் விசுவுக்குப் பை ஞாபகம் வந்தது. அதை அவன் உட்கார்ந்திருந்த மேஜையிலேயே வைத்துவிட்டு மறந்து போய் வந்து விட்டான்.

மறுபடியும் போய்ப் பையை எடுத்துக் கொண்டு வந்து விடுவது என்ற தீர்மானத்தைச் செயல்படுத்துவதில் உறுதி கொண்டு அவன் பத்மநாபனின் வீட்டை நோக்கி நடந்தான்.

கதவு திறந்துதான் இருந்தது.

முன்புறத்து அறையில் யாரும் இல்லை. அவன் அந்தச் சோபாவை நோக்கி நடந்தான். பக்கத்து அறையில் நடந்த பேச்சில் ஒரு பகுதி அவன் காதில் விழுந்தது. பத்மநாபனின் மனைவி கட்டையான கரகரப்புக் குரலில் சொல்லிக் கொண்டிருந்தாள். ''பையன் ஏன் இப்படி ஒரு மாதிரியாய் இருக்கான் ? முகத்தில் ஓர் அசட்டுக் களை.''

விசு திரும்பி வெளியே வந்து, வெறுங் கையுடனேயே வீட்டை நோக்கிச் சாலையோடு நடக்க ஆரம்பித்தான்.


Hosiery made of pure
GRASIM
STAPLE FIBRE
has a better appearance, fuller feel, equal stretch, excellent durability, and high dimensional stability
If you are in the manufacturing line, Grasim Staple Fibre could lead you to bigger Sales, bigger Profits. A slight modification in your knitting methods such as increasing the courses per inch will help you to manufacture firm and compact knitted garments from 100% Staple Fibre.
THE GWALIOR RAYON SILK MFG. (WVG.) CO. LTD.
Birlagram, Nagda (M.P.)

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600031
Managing Editor: T. Sadasivam


பவுடரினால் துலக்கிய
இடத்திலே கீறல்
விழுந்ததுதான் மிச்சமா?
Vim
மாசில்லாத பளபளப்பை வீசிட
வைப்பது விம்.
கசடு இல்லை!
பிசுக்கு இல்லை!
கீறல் இல்லை!

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka இலங்கையில் விலை 50 சதம் (தபால் செலவு தனி)